1904

ஸ்வதேச புத்திரன்.

தொகுதி. உ (2).

மலர்கள்.

பகுதி. ௩ (51).

1928 - 29

JL
Y542 (ளா11,N27CH
N28.2.5
128801.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம் ஏ., எல்.டி.

தொகுதி - ௨] | விபவ௵ - வைகாசி௴ | [பகுதி - ௫


25 SEP 1928 MADRAS

## உள்ளடக்கம்.


| | |
|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை ... ... | ௱௬௧ |
| செங்குந்தர்களுக்கோர் வேண்டுகோள் ... | ௱௬௪ |
| செங்குந்தரும் கல்வியும் ... ... | ௱௬௯ |
| விரதப் பகுதி : சுக்கிரவார விரதம் ... | ௱௭௨ |
| ஆராய்ச்சிப் பகுதி ... ... | ௱௭௩ |
| மாதர் பகுதி : கற்பு ... ... ... | ௱௭௪ |
| அறம் ... ... ... | ௱௭௭ |
| மதியே பெரிது ... ... ... | ௱௭௮ |
| அறிவியல் பகுதி : ஞாயிற்றின் கதிர்கள் ... | ௱௮௰ |
| சுகாதாரப் பகுதி : பலவித நோய்கள் ... | ௱௮௩ |
| செங்குந்தர் கிளர்ச்சி ... ... | ௱௮௫ |
| பாமாலைப் பகுதி ... ... ... | ௱௯௧ |
| தலைச்சங்கத்தின் விளம்பரம் ... ... | ௱௯௬ |
| செங்குந்த சீமான்களுக்கு 2 விண்ணப்பங்கள்... | ௱௯௮ |
| செங்குந்தர் பஞ்சாங்கம்... ... ... | ௨௱ |



## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

tered No. 1514.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பினரும் சீரடையவேண்டிச் சங்கங்கள் பல நிறுவி வெகு ஊக்கத்துடன் உழைத்து வரும் இக்காலத்தில் பண்டைப் புகழ்பெற்ற செங்குந்த குல மக்கள் மட்டும் இது விஷயத்தில் யாதொரு ஊக்கமுமின்றிக் கிடப்பதையுன்னி, நமது குல முன்னேற்றத்திற்கென உழைக்கச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. இம்மகாஜனசங்கம் நமது குலமக்கள் கல்வி, ஒழுக்கம், செல்வம், அந்தஸ்து முதலியவற்றில் மேன்மை யடையும் வழியைத் தேடிவருகின்றது.

குலத்தொண்டு செய்துவருவதே இம்மகாஜனசங்கத்தின் நோக்கமாதலால் அது நிறைவேறத் தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் உதவியும் ஆதரவும் அவசியமாகையால், மகாஜன சங்கத்தார் தற்போது செங்குந்தர் வசிக்கும் கிராமங்கள் தோறும் பிரசார வேலைசெய்து வருகின்றனர். பிரசாரகர்களைத் தங்கள் கிராமங்களுக்கு வரவழைக்க விரும்பும் குலாபிமானிகள் சங்க அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவார்களாக.

---


முதல்தரமான வேலைப்பாடு!　　நம்பிக்கையான வேலைக்காரர்கள்!!

## நகைகள்! நகைகள்!

### குறைந்த சார்ஜுகள்.

நாங்கள் சீமைக்கமலங்களிலும், இதர கற்களிலும் குறைந்த கூலியில் கண்களைக் கவரும்படியான விதமாய் வேலைகள் செய்து கொடுக்கிறோம். தவிர நாங்களே உங்கள் மனதிற்குப் பிடித்த நல்ல கற்களையும் வாங்கிக்கொடுக்கிறோம். இதர பொன் வெள்ளிவேலைகளும் மெடல்களும், என்கிரேவிங் வேலையும் செய்து குறித்த காலம் தவறாமல் கொடுக்கின்றோம். எங்களிடம் ஒருதரம் ஆர்டர் செய்து பாருங்கள். ஒருமுறை ஒரு சிறிய ஆர்டர் கொடுத்துப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

ஆர்டர் வாங்கிக்கொள்ளும் நேரம் காலை 7-மணி முதல் 8-30-மணிவரையில்.

ராஜரத்தினம் பிரதர்ஸ்,
நகைவேலைக்காரர்கள், இரண்டாவது தெரு, புதுப்பேட்டை, எழும்பூர், மதராஸ்.


---


## இரகஸ்யம்.

ஒரு யோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்டது அநேகம் பிரபுக்கள் பரீட்சை செய்து நற்காட்சி பத்திரங்களும் அளித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அதிக பிரயோஜனத்தைத் தரத்தக்கதாதலால் இது உலோகோபகாரமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது தளர்ந்த தேகத்தைக் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு வலுவேற்றித் தேகபுஷ்டி கை, கால், இடுப்பு, மார்பு, முதலிய உறுப்புகளின் வலிவு, சுறுசுறுப்பு, சந்தான உற்பத்தி, பேரானந்தம், மனோதைரியம் முதலியவைகளை உண்டுபடுத்தி, மெலிந்து தளர்ந்துபோன வயோதிகரும் வாலிபருடைய சகல சுகங்களையும் அனுபவிக்கச் செய்யும். மேகவெட்டை, வாய்வு, மலபந்தம், பசியின்மை முதலிய வியாதிகளை நீக்கி, தேகாரோக்கியத்தை உண்டாக்கிவிடும். ஒரே வேளை மருந்தில் சொர்பனஸ்கலிதம் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கித் தாதுவை வஜ்ஜிரத்தைப்போல் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு முறுக்கேற்றி ரகசிய இன்பத்தை உண்டாக்கி விடுமெனபது உண்மை. இதற்குப் பத்தியமில்லை. புட்டி 1-க்கு இரண்டு ரூபாய் மூன்று புட்டி வாங்கினால் தபால் செலவு கிடையாது. இவ்வற்புத சஞ்சீவியின் பெயர் கற்பகவிந்தாதி லேகியம்.

வேண்டுவோர்,
மானேஜர், கற்பகமெடிகல் ஹால்,
சுவாமிமலை போஸ்ட், S. இந்தியா என்னும் விலாசத்திற்கு எழுதவும்.


விபவஸூ வைகாசி மாதத்திய 'செங்குந்தமித்திர'னின் அச்சுச்
செலவிற்குக் கொழும்பு வியாபாரியும்,
மதராஸ் பளையகாட்கம்பெனி கூட்டாளியுமாகிய
சைவத்திருவாளர்

## மஞ்சட் கொல்லை அமு. சொ. அ. அம்பலவாண முதலியார் அவர்கள்

நூறு ரூபாய் நன்கொடை யளித்துள்ளார்கள். இவர்தம் மதப்பற்றும் குலப்பற்றும் அளவுகடந்தன. இவர்கள் வள்ளன்மைக்குச் செங்குந்த உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இவர்கள் படமும் சென்ற மாதத்திய போஷகரது படமும் மற்றொரு சஞ்சிகையில் வரும்.—ப-ர்.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

தொகுதி - உ | விபவ௵ - வைகாசி௴ | பகுதி - ரு


25 SEP 1928 MADRAS

முருகன் துணை.

நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம் இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரனற்சங்க வெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### தேர்தல்களில் வெற்றி.

தாலுக்கா போர்டு, யூனியன் போர்டு, முனிஸிபாலிடி முதலியவற்றிற்குத் தேர்தல்களில் நங்குலத்தவர் பலர் தேர்ச்சிபெற்றதை முன்பு கேட்டுப் பெருமகிழ்ச்சி எய்தினோம். இடையில் நடந்த தேர்தல்களிலும் இன்னும் சிலர் ஜெயம் பெற்றமையை உணர எமது சந்தோஷம் முன்னிலும் பன் மடங்கு அதிகரிக்கிறது. தேர்ச்சிபெற்ற நங்குல அங்கத்தினர்களுக்கு எமது அளவிலா மகிழ்ச்சியினை அறிவித்துக் கொள்ளுகிறோம். இங்ஙனம் நம்மவர்கள் பலர் வெற்றி பெற்றதற்குக் காரணமாக நின்று குன்றா ஊக்கத்துடன் உழைத்த நமது குலப் பெரியோர்களுக்கும், ஓட்டர்களுக்கும் செங்குந்த உலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளதென்பது சொல்லாமலே அமையும். இதுபோது நமக்கு வெற்றியைத் தந்த இறைவன் இனியும் பலதடவைகளிலும் நமது குலத்தவர்க் கிடையில் ஊக்கத்தை உண்டு பண்ணியும் குலப் பிரதிநிதிகள் இன்னும் பலர் மேற் கூறிய ஸ்தல ஸ்தாபனங்களில் இடம்பெற அருள் சுரப்பாராக!

### தேர்தல் சமயங்களில் நட்புஞ் சகாயமும்.

இஃதிங்ஙனமாக, ஒரு சில இடங்களில் நம்மவரிடையிலேயே கட்சிப்பிளவுகள் காரணமாக ஊக்கம் குறைந்திருந்திருந்ததாகக் கேள்வியுற்று வருத்தமுறுகிறோம். நங்குலத்தவருக்குப் போட்டியாகச் சிலர் நின்ற விடங்களில் நங்குலத்தவரிற்சிலர் அப்படிப் போட்டி போட்டவர்களுக்கு நட்பு காரணத்தாலோ, சுய நலத்தாலோ, வேறு எக்காரணத்தாலோ ஊக்கமெடுத்துக்கொண்டு உழைத்ததுமன்றி, குலாபிமானங்கொண்டு நம்மவர்க்கே உழைத்தவர்களைப் பழித்ததையுங் கேட்டு மிகவும் விசனிக்கின்றோம். இவ்விஷயமாக ஆத்திரமும் ரோஷமும் நிறைந்த பல கட்டுரைகளை நமது மித்திரனில் வெளியிடுவதற்காகப் பெற்றுள்ளோம். அவற்றை வெளியிடுவதால் ஏற்கெனவே நம்மிடையே கட்சிப்பிரிவுகளாலேற்பட்டுள்ள குரோதம் மேலும் வளருமென அஞ்சிப் பிரசுரிக்காது விடுத்தோம். நட்பு

முதலிய சில விஷயங்கள் பாராட்டற் பாலன
வாயினும், குல முன்னேற்றங்கருதி தமது
குலத்திற்காகத் தாங்கள் உழைப்பது தமது
முக்கியமானதும் முதன்மையானதுமான கட
மையென நமது நண்பர்கள் அறிய வேண்டு
கிறோம். 'நமது குலத்தவர் பிரதிநிதித்துவம்
பெற்றால் தானே நம் குறைகள் எடுத்துரைக்கப்
பட்டு நீக்கப்படும்' என யோசிக்கின் அது தெற்
றனப் புலனாகும். ஆதலாலே, எந்தத் தாலுக்
காவிலாயினும், தாலுக்கா போர்டு முதலிய
எந்தச் சபைக்காவது அங்கத்தினராக நம்மவர்
எவரேனும் வர அவாவி நிற்பரேல், அந்தத்
தாலுக்காவிலுள்ள நமது செங்குந்த குலத்தவர்
கள் அவர்க்காகக் கட்டாயம் மிகுந்த ஊக்க
மெடுத்துக் கொண்டு தளர்விலாதுழைத்துத்
தமது ஓட்டுகளையும் அவர்க்குக் கொடுத்து
அவர் எங்ஙனமாயினும் அவ்விடத்திற்கு
அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுமாறு
உழைக்க நமது குலப் பெரியார்களைக் கேட்டுக்
கொள்ளுகிறோம்.

### ஊக்கமிகுதியும் கேட்டை விளைவிக்கும்.

ஊக்கக்குறைவு சில இடங்களில் உண்டானது
பற்றி வருந்துகின்ற நாம் வேறு சில இடங்களி
லிருந்த ஊக்கமிகுதிக்காகவும் வருந்த வேண்டி
யிருக்கிறது. 'அளவுக்கு மிஞ்சினால் அமுத
மும் நஞ்சு' அன்றோ? ஆதலாலே, ஊக்க
மானது அறிஞர் பலரால் போற்றப்படுவதாயி
னும், அதுவும் வரம்பு கடந்து செல்வதால்
கெடுதி விளைவிக்குமென்பது அறியற்பாலதாம்.
நம்மவரோடு பல சாதிகள் வதியும் ஒரே வார்டு
(ward) க்கு இருவர் அங்கத்தினராக வேண்
டிய இடங்களில், நம் குலத்தவர் ஒருவர் இருப்
பின் போதும் என்னு மனத்துடனிருப்போ
மாயின், அதுவே நாம் பல தடவைகளிலும்
பெறும் வெற்றியாகிய பொன்னைச் செய்யும்
மருந்தாகும். அங்ஙனமின்றி, அவ்வார்டிற்
கிருக்க வேண்டிய இருவரும் நம் குலத்தவ
ராகவே இருக்க வேண்டுமென்னும் தீர்மானத்
துடன் உழைத்து அதனால் அந்தத் தடவை
வெற்றி பெறுவோமாயினும், அவ்வெற்றி சூரி
யன் முன் வைத்த பனிக்கட்டியேயாகும்.
'ஒப்புரவொழுகு' என்பது ஔவை மூதாட்டி
யின் முதுமொழியன்றோ? 'உலகத்தோடொத்து
வாழ்' என்பதல்லவோ பழமொழி? நம் குலத்
தவர் ஒருவர் ஒரு அங்கததினராகவும் மற்ற
குலத்தினரொருவர் மறு அங்கத்தினராகவும்
இருப்பதால் தீமையென்ன? ஓரிடத்திலுள்ள
நம்மவர் குறைகளை எடுத்துரைக்கவும் சீர்திருத்
தங்கள் கொணரவும் ஒருவரே தக்க திறமை
யுற்றவராயின் போதும். 'நான்கு பேர் பஞ்
சென்றிருந்தால் நாமும் நடுவில் பஞ்சென்றிருக்
கலாம்' என்று எவரும் சொல்லுவதை விட்டு,
இந்தத் தடவை நாம் பெருமுயற்சி செய்து எக்
காரணத்தாலோ இரு அங்கத்தினர்களும் நம்
மவராகவே இருக்கச் செய்தோமென்று வைத்
துக்கொள்வோம். இதனால் நம்மவரோடு போட்
டியிட்டு நின்ற மற்ற குலத்தவர்கள் அனைவரு
டைய தீராப்பகைமையையும் தேடிக்கொள்வோம்.
'ஊருடன் பகைக்கின் வேருடனன்றோ
கெடும்'? ஓர் ஊரிலுள்ள பல ஜாதியார்
களும் ஒருமித்துச் செய்யவேண்டிய வியாபாரம்
முதலிய காரியங்கள் இதனால் கடைபடுமன்றோ?
முக்கியமாகக் கவனிக்குமிடத்து, நாம் இத்
தனைக் கஷ்டங்களெடுத்துக் கொண்டு செய்த
காரியத்தின் முதன்மையான நோக்கமும் பய
னுமே கெடும். அடுத்த தடவை தேர்தலில்
அஜ்ஜாதியினரனைவரும் ஒன்றுகூடி முன்னிலும்
அதிகமாக உழைத்துத் தம்மவர்களே இரு
அங்கத்தினருமாக விருக்க முயலுவாரன்றோ?
இதனால் நம்மவர் ஒருவருக்கும் வெற்றிகிடைப்
பது அரிதாகும். ஆதலினாலே, இனிவரும்
தேர்தல்களில் நம்மவர்கள் இவ்விஷயத்தைப்
பெரிதும் கவனித்து 'பேராசை பெரு நஷ்டம்'
என்பதைப் பன்முறையும் யோசித்து, இங்ங
னம் செய்யாது மற்ற ஜாதியாரோடு சமரச
மாக நடந்து கொண்டு அவர்களின் பகைமையைத்
தேடாதிருக்க வேண்டுகின்றோம். எனினும்,
இதனால் ஒரு வார்டில் நம்மவர் ஒருவர் கூட
இல்லாவிடினும் பாதகமில்லையென ஊக்கம் குன்
றியிருக்க வேண்டுமென்பதல்ல வென்பதை
யும் அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளு
கிறோம்.

### தேர்தல்களும் கக்ஷிபேதங்களும்.

தேர்தல் காலங்களில் அவ்விஷயம் பற்றி,
ஆங்காங்கே நிறுவப்பெற்றுள்ள கிளைச்சங்கங்
கள் பெரிதும் கவனிக்க வேண்டிய விஷயங்கள்
சிலவுள. முதன்மையாக, அந்தந்தப் பிர்க்காக்க
ளிலோ வார்டுகளிலோ நிற்கும் நம்மவர் கட்டா
யம் வெற்றிபெற முயற்சி செய்ய வேண்டியதவ
சியம். அம்முயற்சியை, அக்காலங்களில் பன்
முறையும் அடுத்தடுத்துப் பொதுக்கூட்டங்கள்
கூட்டிப் பொது ஜனங்களுக்கு நம்மவரின் பிரதி
நிதித்துவத்தின் அவசியத்தையும் அதனாலுண்
டாம் நன்மைகளையும் தெளிவாக விளக்கி அவ



களைச் சரியான வழியில் திருப்பல், செங்குந்தர்
வீடுதோறும் சென்று ஓட்டு கொடுக்குமபடி
வற்புறுத்திக் கேட்டல் முதலிய பல வகைகளில்
செய்யவேண்டும். மற்றொரு விஷயம் எல்லா
வற்றிலும் அதிகமாகக் கவனிக்கப்பட வேண்
டியது. இதுவே நம் சங்கங்களை ஓங்கச்செய்
யும்; நம் ஜாதியினர் சங்கத்தினிடம் அபிமா
னங்கொண்டு அதனோடு ஒத்துழைக்கச் செய்
யும். இஃதென்னவெனில், விளக்குவாம்: குல
முன்னேற்றத்திற்கு அடிப்படையானது ஒற்
றுமை. முன்னேற்றமாகிய செடியை அரித்
துக்கொண்டே வந்து நாளடைவில் பாழாக்கும்
புழு தான் கக்ஷிபேதம். குல முன்னேற்றமே
முக்கிய நோக்கமாகக் கொண்டு பிரசாரம் முத
லிய செய்து பெரும்பாடு படும் நமது தலைச்சங்
கம் பின் சொன்ன புழுவைக் கொன்று, முன்
சொன்ன ஒற்றுமை யென்னும் சாரம் நிறைந்த
நீரைத் தளர வார்த்து, முன்னேற்றமாகிய
செடியை வளர்க்க முயலுகிறது. அதற்குக்
கிளையாக விருந்து அதனோடு ஒத்துழைக்கும்
கிளைச் சங்கங்களும் கக்ஷிப்பிரதி கக்ஷிகளை அடி
யோடறுத்து வீழ்த்தப் பெருமுயற்சி எடுத்துக்
கொள்ள வேண்டும். இந்தக் கக்ஷிப்பேதமென்
னும் தீமையே நம்மவர் பலரிடை இருந்து இது
காறும் நம்மவர் முன்னேற்றத்தைத் தடுக்கும்
மலையாக விருந்தது. இப்பொழுது தான் அம்
மலை சிறிது சிறிதாக வெட்டி யெடுக்கப்படுகி
றது. ஆயினும், இன்னும் சிலஇடங்களில் அது
சற்று அதிகமாக இருக்கிறது. அத்தகைய
இடங்களில் தேர்தல் காலங்களில் நம்மவரிடை
பிளவுண்டாகி அதனால் ஒரே இடத்தை அவாவி
இரு செங்குந்தர்கள் நிற்கின்றனர். அவர்
களுக்குள் எவராவது ஒருவருக்கு அவ்விடம்
வர வேண்டும். அவரவரைச் சேர்ந்த கக்ஷியார்
அவரவருக்குழைக்கின்றனர். இதனால் விளை
யும் தீமை அபரிமிதமானது. முக்கியமாக,
இவர்களுக்கெதிராக வேறு ஜாதியாரொருவர்
நின்றால், அவர், இரண்டாடுகள் சண்டையிட
நடுவிருந்து இரத்தத்தைக் குடிக்கும் நரிபோலச்
சுலபமாய் வெற்றி பெறுவதுண்டு. அப்பொ
ழுது இவ்விருகக்ஷியினரும் அபஜெயப்பட்டு
விழிக்கவேண்டியது தான். ஆகையால், இனி
யாயினும் கக்ஷிபேதத்தை யொழிக்க நம்மவர்
கள் முயன்று 'முயற்சி திருவினையாக்கு' மென்
பதை நிலைநாட்ட அருள்புரியுமாறு போரூரான்
கழலைப் போற்றுகின்றோம்.

### கிளைச் சங்கங்களுக்கு ஓர் எச்சரிக்கை.

ஓரிடத்தில் தேர்தல் சமயங்களில் நம்மவரி
டையே கட்சிகள் ஏற்படுமாயின் அங்குள்ள
கிளைச் சங்கம் இருதலைக் கொள்ளிக்கிடையில
கப்பட்ட எறும்பு போலத் தவிக்கும். இத்த
கைய சந்தர்ப்பங்களில் அச்சங்கமானது இரு
கக்ஷியினரையும் ஒன்று சேர்த்து, அவர்களெல்
லோரும் சேர்ந்து ஒருவரைத் தேர்தலுக்கு
நிறுத்தி உழைக்கச் செய்வது உசிதமானது.
அஃதியலாதெனின், சங்கமானது துலாக்கோ
லின் முள்போல இருகக்ஷிகளுள் ஒன்றையும்
சாராது நடுநிலைமையாக நின்று எவருக்கும்
உழைக்காது வாளாவிருப்பதுடன், அங்கத்தி
னரையும் அவரவரிஷ்டப்படி நடந்து கொள்ள
விடுவது தான் உத்தமம். இந்த விஷயம் பல
கிளைச் சங்கங்களாலும் பன்முறையும் கவனிக்
கற்பாலதாம்.

தேர்தல் காலங்களில் கிளைச்சங்கங்களும் நங்
குலத்தவரும் பெரிதும் கவனிப்பான் வேண்
டியே இவற்றை இங்கு எழுதினோம். இந்த
விஷயத்தில் பொதுவாக நங்குலமக்கள் பெரி
தும் ஊக்கமாகவும், கிளைச்சங்கங்கள் அதிஜாக்
கிரதையாகவும் இருக்கவேண்டியது அத்தியா
வசியம். இதையுன்னியே மாசி மாதப் பத்திரி
கையிலும் (தொகுதி 2—பகுதி 2) 'எலெக்
ஷன் சம்பந்தமாகச் சில எச்சரிக்கைகள்' என்
னும் தலைப்பின்கீழ் முக்கியமாகக் கவனிக்க
வேண்டிய சில விஷயங்களை வரைந்துள்ளோம்.
இவற்றை யெல்லாம் ஆழ்ந்து வாசித்து அதன்
படி நடக்க அன்பரனைவரையும் வேண்டுகின்
றோம்.

### நம்மவர்க்குச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வேண்டும்.

இதுவரையில் சென்னைச் சட்டசபையில் நம்
மவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாதது
வருந்தத் தக்கதேயாம். அதனை இனியாயினும்
நாம் தேர்தல் வழியாகவும், நியமிப்பு (Nomi-
nation) வழியாகவும் அடையப் பெரிதும்
முயல வேண்டும். சென்னை இராஜதானி முழு
மைக்கும் தலைச்சபையாயுள்ள இச்சட்ட சபை
யில் தென்னிந்தியா முழுமையும் வியாபித்திருக்
கும் நமது சிரியகுலம் பிரதிநிதித்துவம் பெற்று
அதனுடைய குறைகள் நீக்கப்பெறுவது இன்
றியமையாததாகும். ஆயினும் இதுவரை நம்
மவர் ஒருவரும் அதிலிராததினால் இனி நாம்
அந்த ஸ்தானத்தைப் பெறுவதற்குப் பெருமுய

ற்சி செய்தே தீரவேண்டும். இம்முயற்சிக்கெல்லாம் ஒற்றுமை முதலில் முக்கியமாகும். ஆதலால், நம்குலத்தின் குறைவுகள் குன்றவும், சீர்திருத்தங்கள் பெருகவும், நமது பண்டைப்புகழ் பரவவும் அடிப்படையாயுள்ள ஒற்றுமைக்காகப் பாடுபட்டு அதனை நம்மவர்க்குள் நிலைநாட்ட முயற்சி செய்யும் புண்ணிய சீலர்கள் பெரும் புண்ணியத்திற்கு விதை நட்டவராவார்கள்.

### நம்மவர்கள் மகாநாடு சீக்கிரம் கூட்டப்படல் வேண்டும்.

நம் குலம் சென்னைச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு முன் நமக்குள்ளேயே நாம் நம்மாலியன்ற ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொள்ளல் மிகவும் அவசியம். இந்தக் காரியம் நம்மவரனைவரும் ஒன்று கூடியே செய்யவேண்டியதாகும். இதற்கு நம்மவர் மகாநாடு ஒன்று நூதன ஒழுங்கில் கூட்டப்படல் வேண்டும். அதனையும் எவ்வளவு சீக்கிரம் கூட்டுகிறோமோ அவ்வளவு சீக்கிரமும் அவ்வளவு அதிகமுமாக நாம் நலன்பெறுவது திண்ணம். இங்ஙனம் மகாநாடு கூட்டுவதால் வரும் பயன்கள் அளவிலடங்கா. அம்மகாநாட்டில் எந்த விதத்தில் சென்னைச் சட்டசபையிலும் டில்லி சட்டசபையிலும் நாம் பிரதி நிதித்துவம் பெறுவது என்பதை மாத்திரமன்றி, நங்குலக் குறைவுகளென்னென்ன, அவற்றை யொழிப்பதற்குபாயங்களென்ன, நம்மவர்க்குள் வெகு குறைவாயிருக்கும் கல்வியை எங்ஙனம் பெருக்குவது, வியாபாரம் கைத்தொழில் முதலியவற்றில் வேண்டிய சீர்திருத்தங்கள் யாவை என்னும் பல விஷயங்கள் ஆராயப்பட்டு அவற்றிற்கு வேண்டியவையும் செய்ய இயலும். ஆதலால் அது பெரும்பயன் பயக்குமென்பதிற் சந்தேகமேயில்லை.

ஆயினும், தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர்களனைவரும் ஓரே சமயத்தில் ஓரிடத்தில் கூடுவது அசாத்தியமாகையாலே, ஆங்காங்கே சங்கங்கள் நிறுவப்பட்டு அவற்றிலிருந்து மகாநாட்டிற்குப் பிரதிநிதிகள் அனுப்பப்படல் வேண்டும். இந்த விஷயமாகப் பெருங்கவலையெடுத்துக்கொண்டு பிரசாரம் முதலிய செய்யும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமாகிய நம் தலைச்சங்கத்துக்குக் கிளைச்சங்கங்களெல்லாம் உதவியாயிருப்பது முக்கியமாகும். ஆகவே, தற்போதுள்ள கிளைச்சங்கங்களும் இனி நிறுவப்பெறுவனவும் இப்பொழுது சுற்றுப் பிரயாணஞ்செய்து வரும் தலைச்சங்கப் பிரசாரகர்களுக்கு உதவியாயிருந்து மகா நாட்டின் அவசியத்தை நங்குல மக்களுக்குச்சொல்லி அதன் நோக்கத்தை எங்கும் பெருகச் செய்வாராக.

இவற்றை யெல்லாம் கூடிய சீக்கிரத்தில் முடிப்பதே நலம். கடவுளும் தமக்குத் தாமே உதவிசெய்து கொள்பவருக்கே தானும் உதவி செய்பவராதலின், அவரது அநுக்கிரகத்தை எதிர்நோக்கும் நாம் முயற்சியில் முன்னதாக ஈடுபடல் வேண்டும். இவற்றை யெல்லாம் தோன்றாத் துணையாயிருந்து இனிது நடத்தி வைக்குமாறு நமது இளவல் பெருமான் வடிவேலனை வாயார வாழ்த்துவாம்!

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
பத்திரிகாசிரியர்.

---

## செங்குந்தர்களுக்கோர் வேண்டுகோள்.

### நமது மகாநாடு விரைவில் கூட்டப்படவேண்டும்.

செங்குந்தகுல அறிஞர்களே!

நமது செங்குந்தகுலத்தின் பண்டைப்புகழை நாம் ஒருவாறு ஆராய்ச்சி செய்யப்புகுவோமானால், ஏனைய சிறப்பு வாய்ந்த சமூகங்களைக் காட்டிலும் நமது சமூகம் எவ்விதத்திலும் பெருமையற்ற தன்றென்பதும், அவற்றைப் போல பெருஞ்சிறப்புஞ் செல்வாக்கும் பெற்று விளங்கியதொன்றேயாம் என்பதும் தெற்றென விளங்கும். உலகமே அநாகரீகமான நிலையில் மரப்பட்டைகளையுந் தழைகளையும் ஆடையாக உடுத்துத் தங்கள் மானத்தைக்காக்க வேறு வழியற்று வருந்திக் கிடந்த அக்காலத்து, நமது முன்னோர்கள் பஞ்சும் பட்டுங்கொண்டு நூல் நூற்று, ஆடை நெய்து, உலகத்திற்குபகரித்து, அனைவரது அன்பிற்கும் பாத்திரராய்ப் பெருஞ்சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தனர். இதனையே பழைய ஜனக்கணிதமொன்றில் நெடுங்காலமாகச் செங்குந்தர்கள் ஆடை நெய்யும் வகுப்பினராக விளங்கி வருகின்றனரென்றும், இவர்கள் நாகரீகத்தின் முன்னேற்றத்திற்கு துணை செய்பவரென்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. இந்திய சரிதம் எழுதிய ஆங்கிலேயர் பலரும் இதனையே தத்தம் நூலில் வலியுறுத்தியுள்ளனர். இதுவன்றி நம்மவர்களிற் பலர் விவசாயிகளாகவும், நிலச்சுவான்தார்களாகவும் வேறுபல கைத்தொழில்கள் செய்பவர்களாகவும், வியாபாரிகளாகவும் இன்றும் விளங்கி அரசாங்கத்தின் வருமானத்திற்கும் பெருந்துணையாக ரிந்து வருகின்றனர்.



செங்குந்தர்களிற் பலர் நெடுங்காலத்திற்கு முன்னரே மன்னர்களாகவும், மந்திரிகளாகவும், வீரர்களாகவும், சேனைத் தலைவர்களாகவும், அரச உடற்காப்பாளராகவும் விளங்கினமையொன்றே நமது முன்னோர்கள் ராஜ விஸ்வாசிகளாகவும், ராஜீய அனுபவம் பெரிதும் பெற்றவர்களாகவும் திகழ்ந்தனரென்பதை நன்கு விளக்கும். முதற் குலோத்துங்க சோழனுடைய பிற் பகுதியிலும், விக்கிரம சோழன் காலத்திலும், இரண்டாங்குலோத்துங்க சோழனது முற்பகுதியிலும் செங்குந்த அந்தணராகிய ஒட்டக்கூத்தர் அமைச்சராக அமைந்து 'பாடும் புலவன் கவியொட்டக்கூத்தன் பதாம்புயத்தைச் சூடுங் குலோத்துங்கச் சோழனென்றே எனைச் சொலுவரே' என்று இரண்டாங் குலோத்துங்கச் சோழனால் புகழ்ந்து தோத்திரிக்கப் பெறும் பெருமையும் பெற்றிருந்தனரெனின் செங்குந்தரின் சிறப்பினை விளக்க வேறு உதாரணம் வேண்டுமோ?

இது மாத்திரமன்று; படிக்காசுப் புலவர், பொய்யாமொழிப் புலவர், இரட்டைப் புலவர்களாகிய தெய்வீகப் புலவர்கள் தோன்றி நம் சமூகத்தை யலங்கரித்து விளங்கினர். பழங்கால முதற்கொண்டே நம் சமூகத்தவர்கள் சிவானுபூதிச்செல்வர்களாகவும், நல்லொழுக்கச் சீலர்களாகவும் விளங்கி வருதலின், அநேக ஆலயங்கள் இவர்களது தரும ஆட்சியின் கீழ் விடப்பட்டிருந்தன. இவர்களது தற்காலத்திய ஊக்கக் குறைவினால் இவர்கள் கையினின்றும் பிறர் கைக்கு நழுவியன போக அநேக ஆலயங்கள் இன்னும் இவர்கள் ஆட்சியின் கீழ்ச் சிறப்புறுகின்றன. இவர்கள் சிவ பக்தர்களென்பதும், இவர்களால் நடத்தப்படும் தருமங்கள் செவ்வனே நடைபெறுமென்பதும் நன்குணர்ந்தே இக்காலத்திலும் திருப்பனங்காடு சிவாலயத்திருப்பணி செய்து வரும் நாட்டுக்கோட்டைச் செட்டியாரவர்கள் நிலங்கொடுத்தேனும் அவ்வூரில் செங்குந்தரைக் குடியேற்றுவிக்க வேண்டுமென விழைந்து முயலுகின்றனரென்று கேள்விப் படுகின்றோம்.

### நமது வீழ்ச்சி.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சமூகம் இக்காலத்தே எல்லாத் துறைகளிலும் அதிருப்திகரமான நிலையிலிருப்பதைக் காண மிக வருந்தவேண்டியதாயிருக்கின்றது. அதிலும் கல்வி, [illegible]த்துறை, ராஜாங்க உத்தியோகங்கள், நாகரீகமாகியவற்றில் ஏனைய வகுப்புகளைப் போல் நமது வகுப்பானது சிறிதும் அபிவிருத்தியடையாதிருப்பதே எல்லாவற்றிலும் கவலைக்கிடமாயிருக்கின்றது. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தமானது பல்வேறு வகுப்புகளடங்கிய இந்திய ஜனசமூக முழுவதும் முன்னேற்ற மடைந்து சமத்துவ நிலையெய்த வேண்டுமென்னும் மேலான நோக்கத்துடனே 1920ம் ஆண்டில் வழங்கப்பட்டதென்பதில் யாதொரு ஐயமுமின்று. பொதுவாக இந்தியதேச மக்கள் முன்னேற்ற மடைவதற்கு முன்னதாக ஒவ்வொரு சமூகத்தாரும் இவ்வுண்மையினை யுணர்ந்து, எல்லோருக்கும் சமத்துவமும் நீதியும் வழங்கப்பட வேண்டுமென்னும் உத்தமக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, அவ்வவ் வகுப்புகளை முன்னேற்றமானபடியில் உயர்ந்து கொண்டே போகவேண்டும். இதற்குக் கட்டுப்பாடு அவசியம். நமது சமூகத்தைப் போன்று கட்டுப்பாடான சமூகம் வேறொன்றுமில்லையென இன்றுங்கூட மற்றைய சமூகத்தினர்கள் கூறுகின்றனர். மகாநாடும், திசை நாடுகளும், கிளை நாடுகளும், அவற்றிற்குரிய கிராமங்களுமென நீதி மன்றங்கள் ஒழுங்கான முறையில் அமைத்து, அரசரையும் அமைச்சரையும் நியமித்து, நீதிமன்றங்கட்கு வேண்டும் ஏனைய உத்தியோகஸ்தர்களையும் ஏற்படுத்தி ஆட்சிசெய்து வந்த மாட்சியினை உய்த்துணர்ந்தார் எவரே இவ்வகுப்பினரைச் சிறப்பியாதிருக்க இயலும்? ஆனால், இத்தகைய கட்டுப்பாடானது சிறிது காலத்திற்கு முன்தோன்றிய சில பைசாசங்களால் சீர்குலைந்து வருகின்றது. இப்பைசாசங்கள் நமது கட்டுப்பாட்டினையும், அபிவிருத்தியினையும் தடைப்படுத்தி வந்ததோடமையாமல், இயம்புதற்கரிய இன்னல் பல இழைத்து வருகின்றன. ஆதலின், நாட்டுச் சண்டையும், கட்சிப் பிரதிகட்சிகளும், பொறாமையும், பொச்சரிப்புமாகிய இந்தப் பைசாசங்கள் இனியும் நமது முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும்படி நம்மிடையே வளரவிடாது மிகவிரைவில் அடித்துத் துரத்தப்படவேண்டும். இன்றேல் நமது வீழ்ச்சி என்றும் மீளா வீழ்ச்சியாய் முடியும் என்பது உறுதி.

### ஒற்றுமையும் சுய உதவியும்.

நாம் மீண்டும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமானால், ராஜீய முற்போக்கில் அடி எடுத்து வைக்கவேண்டுமானால், ஏனைய சமூகங்களோடு சமத்துவ நிலை எய்த வேண்டுமானால், நமது

நிலையைத் திருத்தியமைக்க நாம் உடனே முயல வேண்டும். ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் உண்டாக்குவதே நமது நிலையினைத் திருத்தியமைப்பதாகும். ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவது உலக இயற்கையே. ஆயினும் சமூக முற்போக்கிற்கு இதன் பொருட்டு பிளவேற்படுத்துவது பெரிதும் பாதகம் விளைப்பதாகும். நமது மனோநிலையைத் தாராளமாக மற்றவர்க்கறிவித்து ஒருவர்க்கொருவர் பரஸ்பர அன்புடன் தங் கொள்கையை விட்டுக்கொடுத்து நமது குறியினை நோக்கி விரைந்து செல்லுதற்கு வழிவிடுதல் வேண்டும்.

ஒவ்வொரு வகுப்புக்கும் அதனதன் விஷயங்களைக் கவனிக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. நமது வகுப்பினைச் சீர்திருத்துவதற்கு நாமே முயலுதல் வேண்டும். செங்குந்தர்களிற் பெரும்பாலோர் ஏழைகளாக இலங்கிப் பெரிதும் கஷ்டமடைகின்றனர். இதற்குக் காரணமென்ன? நம்மவரிற் பலரும் நெய்தற்றொழிலையே மேற்கொண்டுள்ளனர். இத்தொழில் மிகச் சிறப்புடையதே யெனினும் தற்போது பெரிதும் வீழ்ந்துபட்டுள்ளது. பழைய தமிழ்ப்பெரு மன்னர்களெல்லாம் நமது கைத்தொழிலைப் பெரிதும் ஆதரித்து உதவிபுரிந்து வந்தனர். தற்காலத்தில் அத்தகைய, உதவியுமில்லை. வெளி நாட்டு மில் நூலும் ஆடையும் நம் நாட்டில் என்று தலைகாட்டத் தொடங்கியவோ, அன்று முதல் நமது ஆடையின் மதிப்பும் செல்வாக்கும் ஒழிந்தன. இதனால் தற்காலத்தில் நமது தொழிலில் ஊதியமே சிறிதுமில்லையெனக் கூறலாம். இவ்வாறிருப்பினும், நம்மவரோ, அத்தொழிலை நவீன முறையில் திருத்தியமைக்காது நஷ்டமே யடைந்து செல்வ நிலையில் மிகச்சீர்கேடெய்தி வருகின்றனர். காலச்சக்கரம் அதிவேகமாய்த் திரிந்துழலும் இக்காலத்தில், கிளர்ச்சியும் உரிமையுமே எங்கும் பேச்சாக இருக்கும் இக்காலத்தில், எல்லா வகுப்புகளும் தத்தம் சீர்திருத்தம் நாடி உழைத்து வரும இக்காலத்தில், நாம் மட்டும் உறங்கிக் கிடப்பது எத்தகைய ஆபத்துக்கிடமாகு மென்பதைச் செங்குந்தர் ஒவ்வொருவரும் ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். நமது முன்னேற்றம் நமது சுய முயற்சியினையே பெரும்பாலும் சார்ந்திருக்கின்றது. சுயநலமின்றி நமது சமூக முன்னேற்றத்திற்காக உழைக்க வல்ல தியாகிகள் பலர் வெளிவருதல் வேண்டும். நமது சமூகத்தில் தோன்றியுள்ள அறிஞர்களிலும் செல்வவந்தர்களிலும் சிலரேனும் தமது சொந்த பயனுக்காகவே உழைப்பதற்குப் பதிலாக, சமூக சேவையிலும் சிறிது கவலை செலுத்தத் தலைப்படுவார்களானால், மற்றைய சமூகங்களைக் காட்டிலும் நம் சமூகம் மிக்க விரைவில் முன்னேற்றமடைந்து விடுமென்பதில் யாதொரு ஐயமுமின்று.

## கைத்தொழில் அபிவிருத்தி.

நமது சமூகமே பெரும்பாலும் கைத்தொழில் நடாத்தும் சமூகமாயிருப்பதனால், நமது வாழ்க்கையும், மேன்மையும், சம்பத்தும், கைத்தொழிலைப் புதிய முறையில் அபிவிருத்தி செய்து லாபத்தைப் பெருக்குவதிலேயே நிற்கின்றதென்பது மிகையாகாது. தற்போது கவர்ன்மெண்டாரும் நூதன முறையில் நமது தொழிலை விருத்தி செய்ய முன் வந்துள்ளார்கள்; ஆங்காங்கு நூதன முறையில் நெய்தற் சாலைகள் அமைத்து அத்தொழிலைக் கற்பிக்கின்றனர்; பாடசாலைகளிலும் இத்தொழிலைக் கற்பிக்க ஏற்பாடு செய்து வருகின்றனர். இப்பாடசாலைகளில் சேர்ந்து நூதன நெய்தற்றொழிலைக் கற்று மேன்மைபெற நம்மவர் முயலுதல் வேண்டும். நம்மவர் நன்மையின் பொருட்டு ஏற்பட்ட நெய்தற் பாடசாலைகளில் வேற்றினத்தவர் பெரிதும் பயில்வதைப் பார்க்கின்றோம். நம்மவர் இதிலும் கவலை செலுத்தாதிருக்கின்றனர். இவ்வாறு இன்னும் சில்லாண்டுகள் நம்மினத்தவர்கள் வாளாவிருப்பின், இவர்களது தொழில் வேற்றினத்தவரால் மிக்க நூதன முறையில நடாத்தப்பட்டு, அவர்கள் லாபமடைந்து நன்னிலையில் மேலோங்கிவர, நம்மவர்கள் அடியோடு கஷ்டமடையுங் காலமும்மெய்து மென ஐயுற வேண்டியிருக்கின்றது. மைசூர் முதலான சமஸ்தானங்களில் செய்யப்படுவது போன்று நமது கைத்தொழிலுக்கு வேண்டிய கருவிகளை இலவசமாகக் கொடுத்துதவுமபடி அரசாங்கத்தாரை நாம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

## சங்கங்களின் அவசியம்.

மேற்கூறிய நமது குறைகள் பலவற்றையும் ஒழித்து, மீண்டும் நமது பண்டைய நிலையினை நாம எய்த வேண்டுமானல், நம்மவர் வதியும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு செங்குந்தர் சங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டும். அந்தந்தச் சங்கங்களின் மூலமாக அந்தந்த ஊரிலுள்ள செங்குந்தர்களின் குறையை அரசாங்கத்திற்



கறிவித்து அவற்றைக் களைய முயலவேண்டும். இச்சங்கங்களின் மூலமாக ஆங்காங்கு செங்குந்தர் பாங்கி ஏற்படவேண்டும். இந்த ஐக்கிய நாணயச் சங்கங்கள் பணத்தை வட்டிக்குக் கடன் கொடுத்து வாங்குதலையே தொழிலாகக் கொண்டிருத்தல் கூடாது. நமது கைத்தொழிலை நூதன ஏற்பாடுகளுடன் விருத்தி செய்வதற்கும், விவசாயத்தை வளர்ப்பதற்குமே பெரிதும் பாடுபட வேண்டும். நூதன கைத்தொழிற்கருவிகளைச் சேமித்து வைத்துக்கொண்டு அவற்றையும் நூல்முதலியவற்றையும் தவணைக் கடன்மீது நம்மவர்கட்குத் தருதல் வேண்டும். நூதன முறையில் தேர்ச்சிபெற்ற நெய்தற்றொழிலாசிரியர்களை அமைத்து நம்மவர் வீடுதோறுஞ் சென்று போதிக்கச் செய்தல் வேண்டும். நம்மவர்களால் நெய்யப்படும் ஆடைகளை இந்த சங்கங்களே நல்ல விலைக்கு வாங்கிக் கொண்டு மொத்தமாக வெளிக்கு அனுப்ப வேண்டும். குறைந்த விலைக்கு வெளியில் விற்று நஷ்ட மடையும்படி விடக்கூடாது. கைத்தொழிற் கருவிகளையும் விவசாயக் கருவிகள், வித்து, எருதுகள் முதலியவற்றையும் தவணைக்கடன்மீது விற்பதோடு நில்லாமல் வாடகைக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்படி ஒவ்வொரு கிராமத்துச் செங்குந்தர் சங்கமும் வேலை செய்யத் தொடங்குமாயின் நம்மவரது செல்வநிலை சிறிது விருத்தியடையுமென்பது யாவரும் ஒப்ப முடிந்த உண்மையாம். இக்கிராமத்துச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தலைச்சங்கத்தோடு இணைக்கப்பட வேண்டும். இக் கிளைச் சங்கங்களால் தீர்க்க இயலாத குறைகளைத் தலைச்சங்கம் தலையிட்டு நீக்க முயற்சிக்கவேண்டும். இத்தகைய கட்டுப்பாடான முயற்சியினாலன்றி நமது குறைகள் ஒருகாலும் நிவர்த்திக்கப்படாதென்பது உறுதி.

இவைமட்டுமல்ல, நமது பிரதிநிதிகள் பஞ்சாயத்துக் கோர்ட்டு, யூனியன் போர்டு, முனிஸிபாலிடி, தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு, மாகாண சட்ட சபை, இந்தியா சட்ட சபையாகிய ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனங்களிலும் இருக்கவேண்டும். அவ்வாறு ஸ்தானம் பெறுமையால் நேரும் குறைகள் அளவற்றன. சென்னைச் சட்ட சபையில் பல வகுப்பினருக்கும் பிரதிநிதிகள் இருக்க நம் சமூகத்தின் பிரதிநிதியாக ஒருவரேனும் இல்லாதது நமது துர்ப்பாக்கியமே. இக்குறையை அடுத்த எலக்ஷனி[illegible]ம் நீக்கத்தக்க முயற்சி எடுத்தல்வேண்[illegible]டை இம் முயற்சிக்கு நம்மவர் வதியும் கிராமந்தோறும் சங்கங்கள் காணவேண்டுவது அவசியமே. ஒவ்வொரு சாதியினரும் தங்கள் தங்கள் குறைகளைத் தங்கள் சாதிச் சங்கங்களாலேயே நீக்கி வருகின்றனர்.

ஆதித் திராவிடர்கள், நூற்றுக் கணக்கான கிளைச் சங்கங்களையுடைய ஆதித்திராவிட மத்திய சங்கம் ஒன்றைச் சென்னையில் ஸ்தாபித்துக்கொண்டு அதன்மூலமாகத் தங்கள் குறைகளை ஒழித்து வருகின்றனர். ஆதித்திராவிட ஐக்கிய நாணயச் சங்கங்களும், ஸ்டோர்களும் பல்லாயிரக் கணக்காக இந்தியாவில் பெருகி வருகின்றன. இச் சங்கங்களின் இடைவிடா முயற்சியினாலும் பெருக்கத்தினாலும் இந்தியா சட்ட சபையிலும், மாகாண சட்ட சபைகளிலும் மற்றும் எல்லா ஸ்தல ஸ்தாபனங்களிலும் தங்கள் பிரதிநிதிகளைப் பெற்றுள்ளனர். வேளாளர்கள் வேளாள மகாஜன சங்கம் ஒன்று அமைத்துக்கொண்டு அதன் மூலமாக அநேக வேளாள பாங்குகள் ஏற்படுத்தியுள்ளதோடு தங்களுக்குச் சகல உரிமையும் வழங்க வேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றனர். நாடார்கள் தங்கள் சங்க வாயிலாக அளவற்ற நன்மைகள் அடைந்துள்ளனர் சங்கப் பிரதிநிதிகளால் தங்கள் சாதிப்பிணக்குகள் பல தீர்க்கப்பட்டுள்ளதாகவும், தங்கள் ஆதிச் சத்தின்கீழ் 120 ஆரம்ப பாடசாலைகளும், 6 உயர்தர பாடசாலைகளும் நடத்தி வருவதாகவும், விருது நகரிலுள்ள நாடார் ஹைஸ்கூலை கல்லூரியாக (காலேஜ்) மாற்றத்தக்க முயற்சி நடைபெறுவதாகவும் சென்ற ஆண்டு அறிக்கையில் அவர்கள் பொறித்துள்ளார்கள். இதுவன்றிச் சென்ற ஆண்டில் லாட்டரி ஒன்று சங்கச் சார்பாக நடத்தி எண்பதாயிரம் ரூபாய்க்குமேல் இலாப மடைந்துள்ளனர். இவைகளிலும் வேறு நன்மைகள் யாது பெறுதல் வேண்டும்? நாடார்களுடைய செய்கையை உலகம் பாராட்டாதிருக்க இயலுமா?

இப்படியே யாதவர்கள், விஸ்வ பிராமணர்கள், கருணீகர்கள், அருந்ததியர்கள், தேவாங்கர்கள், தனவணிகர்கள், நாயுடுகள் முதலிய பல்வேறு வகுப்பினரும் சங்கம் கண்டு, விடாது முயன்று தங்கள் குறைகளைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டே வருகின்றனர்,

இவ்வளவையும் பார்த்துக் கொண்டிருந்தும் நம்மவர்கள்மட்டும் இன்னும் உலகமே இன்னதென்றறியாது ஊமைகளாகவும் செவிடர்களாகவும் கிடைக்கின்றனர். என்னே இவர் தம் அறி

யாமை! நாம் வாளாகிடப்பதனாலேயே நமது வகுப்பு ஒன்று வாழ்ந்து வருகிற தென்பதே கவனிக்கப்படாத அபாய நிலைக்கு அது வந்திருக்கிறது. ஆகலின், செங்குந்தகுல சீமான்களே! சீமாட்டிகளே!

இனியும் உறங்கிக் கிடக்காது விழித்தெழுந்து சமூக சேவையில் ஈடுபட்டு உழைக்க உடனே முன் வாருங்கள். நமது சமூகத்தின் நன்மைகளைப் பாதுகாக்கப் போதிய முன்னேற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய அரசியலில் நாடு முழுவதும் சிறிதளவு சுதந்தரத்தையேனும் அடைந்தால், அது நமது சமூகத்திற்கும் பெருங்கேடாகவே முடியும்.

நமது இளைஞர்களை உயர்தரக் கல்வியில் தேர்ச்சி பெறச் செய்யவேண்டும். அரசாங்கத்தினரும் இதற்கு விசேஷ வசதிகள் அளிக்க வேண்டுமென நாம் கிளர்ச்சி செய்ய வேண்டும். ஆனால் அரசாங்கத்தினரோடு கிளர்ச்சி செய்வதோடு நின்று வாளாகிடத்தல் தக்கதன்று. நமது கடமையில் நாம் தவறாது ஊக்கத்தோடு உழைக்க முற்பட வேண்டும்

நாடார்கள் தங்கள் சமூகப் பெயரால் பல பாடசாலைகள் நடத்துவது போன்று செங்குந்தர் பாடசாலைகள் பல ஏற்படவேண்டும். இது நம்மவர்க்குப் பெருங்காரிய மன்று. நம்மவர் செய்யுந் தருமங்களோ அளவற்றன. அத்தருமங்களை இத்துறையில் சிறிது திருப்பமனமிசைவார்களானால், ஒவ்வொரு கிராமத்திலும் செங்குந்தர் பாடசாலை ஏற்படுவது கஷ்டமல்ல. திருவிழா ஆடம்பரங்கட்கும், ஆலய வழக்குகட்கும் செலவிடும் செல்வத்தில் சிறிது இதன் பொருட்டுச் செலவழிக்க உறுதி கொண்டால், நம் சமூகம் மிக உன்னத நிலையினை யெய்திவிடுமென்பதைத் திண்ணமாகக் கூறலாம். லோயர் எலிமெண்டரி பாடசாலைகளும், ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளும், ஸெகண்டரி பாடசாலைகளும், ஹைஸ்கூல்களும், காலேஜ்களும் செங்குந்தர்களுக்கென்று பல தோன்றுவது அரியதன்று. பாடசாலைகள் மட்டும் அமைப்பின் பயனின்று. சாப்பாட்டு விடுதிகள் பல செங்குந்த மாணவர்க்கென்று ஏற்படுதல் வேண்டும். நமது இளைஞர்களில் அறிவாளிகளை உயர்தரக் கல்வியின் பொருட்டும், கைத்தொழிற் கல்வியின் பொருட்டும் அந்நிய நாடு அனுப்புதற்கு உபகாரச் சம்பளம் அளித்தல் வேண்டும். கல்வியில் மேன்மேலும் உற்சாகமும் ஊக்கமும் கொள்ளும் பொருட்டு நம்மிளைஞர்கட்குத் தனிப்பரிசுகள் வழங்க வேண்டும். கல்லூரிகளில் பட்டம் பெற்று வெளிவரும் செங்குந்த மாணவர்கட்கு ஆண்டு தோறும் விருந்து நடத்துதல் வேண்டும். இவ்வாறு செய்வோர் நமது பின் சந்ததியாரின் நிலைபெற்ற நன்றிக்கும் பாத்திரராவர்.

### நமது மகாநாடு.

இத்தகைய பெரும் இலட்சியங்களெல்லாம் நிறைவேற வேண்டுமானால் கூடிய விரைவில் நம்மவர் மகாநாடு ஒன்று கூட்டுதல் வேண்டும். நம்மவர் பெருந்திரளாகத் திரண்டு அம்மகாநாட்டிற்கு வருதல் வேண்டும். அம்மகா நாட்டில் பலமுக்கிய தீர்மானங்களையும் நிறைவேற்றி அவற்றைச் செய்கையில் கொணர முயலவேண்டும். நம்மவர் மகாநாடு என்று கூடுகின்றதோ அன்றைக்கே பாதி இலட்சியங்கள் நிறைவேறி விட்டதென்றே கூறலாம். பல்லாயிரக் கணக்காக நம்மவர் கூடும் அம்மகா நாட்டில் சிலரது உள்ளத்திலேனும் சமூகப்பற்று அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனிந்து இந்த இலட்சியங்களை இனிது நிறைவேற்றும் பக்குவ மடையுமன்றோ? இம்மகா நாட்டில் கைத்தொழிற் கண்காட்சி யொன்றமைத்து,நம்மவர் மனதினை அதில் திளைக்கச் செய்து, நமது தொழிலை விருத்தி செய்யவேண்டும்.

இத்தகைய மகாநாட்டினை முதன் முதலாகக் கூட்டிச் செங்குந்த உலகத்தின் சீரிய நன்றியினையும், கௌரவத்தினையும், நற்பெயரினையும் பெறுதற்கு முந்திக்கொண்டு ஈரோடு, சென்னிமலை, பவானி முதலிய நல்லூர்களிலுள்ள உண்மைச் செங்குந்த சிந்தாமணிகள் முனைந்து தீவிர முயற்சி செய்து வருவதாக நமது தலைச் சங்கத் தலைவர்கள் சொல்லக்கேட்டு அடையும் இன்பம் அளவற்றதேயாம். செங்குந்த இனத்தில் தம் ஓடப்பெற்ற ஒவ்வொருவரும் இது கேட்டு பேரானந்தம் பெறுவரொன்பது உறுதி. அதே சமயத்தில் செங்குந்த வாலிபர் மகாநாடு, செங்குந்த மாதர் மகாநாடு, செங்குந்தத் தொண்டர் மகாநாடு முதலியன கூட்டப்படல் வேண்டும். இவற்றின் அவசியத்தைக் குறித்து அடுத்த சஞ்சிகையில் எழுதுவோம். மிக விரைவில் மகாநாட்டைக் கூட்டி வெற்றியுடன் நடத்திவைத்தற்கு எல்லாம் வல்லோனாய், என்றும் இளையோனாய்த்திகழ்கின்ற எம்முருகப் பெருமானது திருவடிகளைப் பன்முறை போற்றுகின்றேன்.

காஞ்சிபுரம், } பீ. சே. மாணிக்கவாசக முதலியார்,
30-3-28. } தலைச்சங்கப் பிரசாரகர்.



## சேங்குந்தரும் கல்வியும்.

நமது செங்குந்த மித்திரனில் அடிக்கடி "செங்குந்தரென்பார் யாவர்" என்பதை விளக்கிய கட்டுரைகள் பல வந்துள்ளன. அவற்றில் "செங்குந்தரென்பார் ஆறுமுகப் பெம்மான் அநுசராய நவவீரர் வழித்தோன்றல்களென்பதும், முசுமுகச் சக்கிரவர்த்திக்குப் பெண் கொடுத்தும் பெண் கொண்டும் அவனுக்குப் பேராற்றற் பெருந்துணைவராய் இருந்தனரென்பதும், இவை காரணமாகவே முசுமுகன் தன் பெயரை முசுகுந்தன் என வமைத்துக் கொண்டன னென்பதும்" உள்ளங்கை நெல்லி யென யாவருந் தெள்ளித் தெரிந்தவையே. அன்றியும், பகைவரது உதிரந் தோய்தலாற் செவ்விய குந்தத்தை யுடைமையாற் செங்குந்தரெனப் பெயர் பெற்றனரென்பதாற் பேராற்றலமைந்த வீரரென்பதும் உணரற் பாற்று.

முசுகுந்தன் தமிழ் நாட்டரசனாதலாற் செங்குந்தர் யாவருந் தமிழரே யென்பதும், நவவீரர் வழித் தோன்றல்களென்பதனாலும் தமிழ் நாடு முழுமையும் பண்டைக் காலத்துச் சைவ நெறியே நிறைந்திருந்த தென்னு முண்மையாலுஞ் செங்குந்தர் யாவருஞ் சைவமக்களே யென்பதும் ஆராய்ந்துணர வேண்டியவை.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த செங்குந்த மக்கள் தற்போது தம்மைத்தாம் உணராமலும், கல்விப்பேறும் அதனாலுண்டாம் விழுமிய ஒழுக்கப்பேறும் எய்தாமலும், வரவரத்தாழ்ந்த நிலைமையை அடைந்து வருவது மிக்க இரங்கற் பாலதாம்.

நாகரிகம் மலிந்து ஒவ்வொரு வகுப்பினருந் தாந்தாம் முன்னேற்றமடைய முயன்றுவரும் இக்காலத்தில், கல்விச் செல்வம் ஆங்காங்கு தளிர்த்துப் பூத்து வருகின்ற இக்காலத்தில் நமது செங்குந்தத் துணைவர்கள் தாம் முன்னேற்றமடைய முயலாமலும் கல்விப்பேற்றைக் காணாமலும் இருப்பது நன்றாமோ!

செங்குந்தர்களுக் குரியதான நெய்தற்றொழில், பண்டைக் காலத்துப் பண்புமிக்குப் பொலிந்ததென்பதையும் தற்காலத்துத்தாழ்ந்து பொலிவின்றி யிருக்கிறதென்பதையும் யாவரும் உணர்வர். கொஞ்ச காலத்திற்கு முன்னரே தொழின் முயற்சியிலீடுபட்டு முன்னேற்றமடைந்த மேனாட்டார் தற்போது நெய்தற்றொழிலிலெவ்வாறு பண்பு பெற்றுள்ளரென்பது யாவரும் வியக்க வேண்டியதன்றோ? இங்ஙனம் இவர்கள் முன்னேற்ற மடைந்தமைக்குக் காரணம் இடையறா முயற்சியுங் கல்வியறிவுமே யென்பது தெள்ளிது.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை"

(குறள் ஊக்கமுடைமை ௪)

என்னும் வாக்கின் உண்மை ஆங்கிலரிடங் கண்கூடு. ஊக்கமின்மை ஆக்கத்திற் கிழிவல்லவா?

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

(குறள் ஆள் வினையுடைமை ௰)

என்பது உயர்வு நவிற்சியன்று; ஊக்கமுடையாரே யாவுமுடையராவர். இத்தகைய ஊக்கம் நம்மவரிடங்குடி கொண்டிருந்தால் நம் நிலை சீர்கேடடைந்து இருக்கக் காரணமில்லை. செங்குந்த மக்களாய நாம் நமது கைத்தொழிலில் முன்னேற்றமடைய முயல வேண்டும். நமது மூதாதைகளால் நமக்குக் கற்பிக்கப்பட்டவற்றை மட்டும் கையாண்டு வந்தால் நாம் முன்னேற்றமடைய முடியுமா? நாமும் நமது நெய்தற்றொழிலை யெவ்வெவ்வகையிற் சுலபமாகவும் சிறப்பாகவும் செய்ய முடியுமோ அவ்வகைய மார்க்கங்களை யறிந்து செய்ய வேண்டுமன்றோ? மேனாட்டார் எவ்வளவு சுலபமாக எவ்வளவு நேர்த்தியான துணிகளை இயந்திர உதவியைக் கொண்டு நெய்கின்றனர்! நாம் அவ்வாறு நெய்யாவிட்டால் நமது துணிகளுக்கு மேன்மை எங்ஙன மெய்தும்? அம்மார்க்கங்கள் நமக்குத் தெரிய வேண்டுமானால் கல்வியின் உதவியின்றி யறிய முடியுமோ? கற்று வல்லோர் தாங்கண்ட நுட்பங்களை யாவரு முணர நூல்களின் வாயிலாகவே வெளியிடுவர். அவைகளை வாசித்துணர்ந்தோரே அவ்வழிகளைக் கையாளவியலும். ஒவ்வொரு தொழிலும் கல்வியின் உதவியாலேயே நாளடைவில் முன்னேற்றமடைந்து வருகின்றது. அவ்வாறு வாசித்துணருமாறு கல்வியாயுள்ளவை, பாட புத்தகங்களும், மாத வெளியீடு, வார வெளியீடு, தினசரி வெளியீடு முதலான பத்திரிகைகளுமேயாம். பத்திரிகைகளினாலேயே எல்லா நாடுகளும் எல்லா விஷயங்களையும் எளிதிலுணர்ந்து சிறப்படைகின்றன. நாகரிகத்திற் சிறப்படைந்த நாடுகள் பத்திரிகைகளைக் கையாண்ட நாடுகளேயாம்.

இங்ஙனமிருக்கிறபடியால், செங்குந்த மக்களாய நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால் முதன் முதற் பத்திரிகைகளைக் கையாள வேண்டும். பத்திரிகையே நம்மை விழிப்பிக்கும் நற்கருவியாம். இரண்டாவதாக நமது செங்குந்த மக்கள் கல்வியை எய்த முயற்சிப்பது அவசியமாகிறது.

நமது செங்குந்த மித்திரன் வாயிலாக செங்குந்த மக்கள் தமது கல்வியின் பயனை யூட்டினால் மற்றைய செங்குந்தர்கள் உணர்ந்து பேறடையலாம். மித்திரன் நடைபெற்ற கொஞ்சகாலத்திற்குள் எவ்வளவு பெரும்பயனை யடைந்துள்ளோமென்பதை ஒவ்வொரு செங்குந்தரும் நன்கு உணர்வர். செங்குந்த உலகத்திற்கு மித்திரன் தோன்றிய சில நாட்களிலேயே நமக்கு எவ்வித உற்சாகத்தையும் தெளிவையும் உண்டாக்கி யிருக்கிறான்! நாமாக விழிப்பதற்கின்றி உறங்கிக் கிடக்கும் சோம்பலை நீக்க மித்திரன் வந்து தோன்றினன். அவன் பெரு முயற்சியால் சிலர் விழித்துத் தந்தொழிலைப் பார்த்து மகிழ்கின்றனர். சிலர் விழித்துந் தமது சோம்பன் மிகுதியால் உடனே யுறங்குகின்றனர்! அந்தோ! மற்றுஞ் சிலர் காதிற் சங்கு வைத்தூதினாலும் விழியா நிலைமையிலிருக்கின்றனர்!!

என்னே! இன்னும் உறக்கம்! நம்மை மற்றையோர் இகழ்ந்துவிடும் நிலைமையினுமா உறக்கம்!! "உறங்கினவனுக்கொன்று, விழித்துக் கொண்டவனுக்கு இரண்டு" என்பதை நாம் உணராமலிருக்கலாமா? எல்லா வகுப்பினரும் தாம் உயர்ச்சியடைய வேண்டுமென்று உழைத்து வரும் இக்காலத்தில், நாம் மட்டும் வாளா விருக்கலாமா? நம்மைப் பிறவகுப்பினர் நாகரிக மற்றவர்களெனவும், கல்வி யில்லாதவர்களெனவும் இகழும்படி வைத்துக் கொள்ளலாமா? நமது மித்திரன் நம்மவர் எங்கெங்குள்ளனர் என்பதையும் எத்தகையாளர் என்பதையும் அறிவித்திருக்கிறான்; சில ஊக்கமுள்ளவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டே யிருக்கிறான்.

அவன் முயற்சியால் சில இடங்களில் சங்கங்கள் உண்டாகி வருகின்றன. நம்மை நாம் உணரும் நிலையைக் காட்டினவனும், காட்டுகிறவனும் அவனே.

இத்தகையவன் நம்மை எழும்படி முயற்சிக்கும் நிலைமையிலும் நாம் உறங்கலாமா? வேண்டாம், உடனே விழியுங்கள்; உங்களை எவன் விழிக்கச் செய்தவனெனக்கண்ணுற்றுப் பாருங்கள்; அவனுக்கு நல்வரவு கூறி நன்றி பாராட்டுங்கள்; அவனை நீண்ட ஆயுளுள்ளவனாக்கும்படி நமது முருகனை வேண்டுவீர்களாக; அவனுக்கு வேண்டிய உணவைக் கொடுத்து ஆதரிப்பீர்களாக; அணியணிந்து அழகு செய்வீர்களாக; உலக மேடையில் "செங்குந்த மக்கள் உயர்ந்த நடிகர்க"ளென வியக்கும் வண்ணம் உங்கள் வாழ் நாளைச் சிறப்பியுங்கள்; உங்கள் வரும்படியில் சிறிது பாகம் நமது மித்திரனுக்கு உதவி செய்ய வேண்டும்; உங்கள் செலவுகளில் மித்திரனுக்குஞ் செலவு செய்ததாக நினைத்து மகிழும்படி உங்கள் மனதைத் திருப்ப வேண்டும். நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வேளையும் எவ்வளவு பணச் செலவு செய்கிறோம். அச்செலவுகளெல்லாம் அவசியச் செலவுகளாகவே யிருக்கின்றனவா? அங்ஙனம் இது கட்டாயச் செலவு என நினைந்தே நாம் செய்கிறோமா? கோர்ட்டுகளில் நியாயம் வேண்டும் என நினைத்துச் செய்யுஞ் செலவுகட்குக் கணக்கெடுக்க நம்மால் முடியுமா? அவைகளெல்லாம் அவசியம் நியாயம் வேண்டினவைகளாகவே இருக்கின்றனவா? கொண்டுபோன நல்ல வழக்குகளுக்கெல்லாம் நல்ல நியாயமே நாம் அடைந்தோமா?

இவைகளை நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களானால் எவ்வளவு அநியாயச் செலவுகளை நீங்கள் எண்ணுவீர்கள்! இவ்வளவு செலவுகளில் மித்திரனை மேன்மைப் படுத்த நீங்கள் செய்யும் செலவு வீண் செலவு ஆகுமா? மித்திரனுக்கு உதவுவது வீண் என்று நினைப்பீர்களானால் "பூசனைக்காய் போவதறியாது கடுகு போவதைக் கணக்கெடுப்பவர்" களின் கூட்டத்திற் சேரமாட்டீரா? அதிலும், தாளுண்ட வெறும் நீரைப் புனிதமும் இனிமையும் பயனுமுள்ள இளநீராக்கித் தலையாலே யுதவுந் தெங்கு போன்றுள்ள மித்திரனுக்குக் கொடுப்பது வீண் செலவாமா? எதைச் செய்வானுகினும் ஆராய்ந்து செய்தல் வேண்டுமன்றோ? பத்திரிகைகளே நமக்கு மேன்மையை யளிப்பவையென்பதை நன்கு சிந்தனை செய்வீர்களாக.

நிற்க, நமது செங்குந்தத் துணைவர்கள் வாழும் ஊர்கடோறும் ஒற்றுமையுண்டாக்கும் சங்கங்களைத் ஸ்தாபிக்க வேண்டும். சங்கங்களினால் விளையும் நன்மைகள் பல. அவற்றுள்



பெரும்பயனளிப்பதாய கல்வியை வளர்க்கும் முயற்சிகள் வேண்டும். கல்வியையுணராத செங்குந்த மக்களில்லை யென்னும் நிலைமையில் நாம் நிற்க வேண்டும். பெரும்பாலும் கிராமங்களிலேயே கல்வியில்லை. ஒவ்வொரு செங்குந்த கிராமத்திலும் செங்குந்தர் வாசகசாலை ஒன்று உண்டாக்கி, அதில் அறிவை வளர்க்கும் நூல்களையும், தொழின்முறை நூல்களையும், பத்திரிகைகளையும் வாங்கி வைத்தல் வேண்டும். ஒழிந்த போதுகளில் அங்குச் சென்று வாசிக்கும் முயற்சி யிருக்க வேண்டும். வாசிப்பில்லா மக்கட்கு வாசித்துக் காட்ட வேண்டும்.

செங்குந்தச் சிறுவர்களுக்குக் கல்வியை விருத்திக்கச் செங்குந்தர் பள்ளிக்கூடம் ஒவ்வோரிடத்தும் ஏற்படுத்தவேண்டும். தினமும் கூலிவேலை செய்து ஜீவிக்கும் நிலையிலுள்ள நமது சிறுவர்களுக்குப் பகற்போதிற் கல்வி பயில இயலாதன்றோ? இத்தகைய நிலைமையிலுள்ள சிறுவர்களை முன்னேற்றப் படுத்த வேண்டிய கடமையே செங்குந்தர் தம் முதற் கடமையாகும். இத்தனைச் சிறுவர்களுக்கு இராப்பள்ளிக்கூடங்களே ஏற்றவை. இராப்பள்ளிக்கூடங்களே செங்குந்த மக்களுக்கு விழிப்பை யுண்டாக்கும் முறையிற் சிறந்தவை.

இராப்பள்ளிக்கூடங்களில், நமது தொழின் முறையை விசாரித்துக் காட்டுவனவும், அருள், அடக்கம், ஊக்கம், வீரம், சுறுசுறுப்பு, முதலியவற்றைப் போதிப்பனவும், உலகறிவைப் போதிக்கும் சரித்திரம், பூகோளம் இயற்கைத் தோற்றம் முதலாய இலக்கணம், சமய ஒழுக்கம், குலவொழுக்கம் போன்றவற்றைக் காட்டுவனவும் ஆகிய நூல்களைப் படிப்படியாகப் போதிக்க வேண்டும். ஆகவே, நன்கு கற்று வல்ல உபாத்தியாயர்களைத் தேர்ந்து எடுத்துப் போதிக்க நியமித்தல் வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் முதற் கருவியாவது, பொருளேயன்றோ?

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா கியாங்கு"

எனக்கூறியாங்கு பொருளேயிவ்வுலகின் பயனையடைய ஏது வாயது. ஆகவே செங்குந்த மக்கள் முன்னேற்றமடைய செங்குந்த தனிகர்களே உதவிபுரியக் கடமைப் பட்டவர்கள். அவர்களுடைய உதவியின்றேல் நாம் உறங்க வேண்டியவர்களே. அவர்களே நமது குலமாகிய ஆலினைத் தாங்கும் விழுதுகளாவர். அவர்கள் பராமுகமாயிருந்தால் நாம் செய்வதொன்றில்லை. அவர்கள் "தமக்கென வாழாப் பிறர்க்குரியாள" ராக இருந்தாலன்றி நாம் முன்னேற்றமடைய வழியில்லை. அவர்களே குலாபிமானிகளெனப் பெயரெடுக்கத் தகுந்தவர்கள். கல்வியாளரும் பொருளாளருதவியின்றே லென்செய்ய முடியும்? திருவுடையாளர் பலர் செங்குந்த மித்திரனுக் குதவிசெய்வதாலன்றோ அஃது நடை பெறுகின்றது! நமது செங்குந்த கல்வியாளர்கள் தமது கல்வியின் பயனை மித்திரன் வழியாக உலகுக்களிக்க ஏதுவாயிருக்கிறது. திருவாளர் ம. ஷண்முகசுந்தர முதலியாரவர்களின் இடையறா ஊக்கத்தாற் செல்வர்களும், கற்றோர்களும், செங்குந்த உலகிற்றொண்டு புரிய முன் வந்துள்ளார்கள்; வருகிறார்கள்; வருவார்கள். இத்தகைய நிலையிலுங்கூட சிலர் உறங்குகின்றனர்! அந்தோ! என்னே இவர்களின் உறக்கம்! நாமா எழாவிடினும் நம்மையொருவர் எழுப்பவும் எழா நிலையிலிருக்கலாமா?

முக்கியமாக நமது குலம் முன்னேற்றமடையக் கையாளவேண்டியவை புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை, ஒற்றுமை முதலிய ஒழுக்கங்களேயாம். இத்தகைய சீர்திருத்தங்களே நாம் முன்னேற்றமடைய ஏதுவாயவை. பல செங்குந்த மக்களிடம் கள்ளுண்ணல் புலாலுண்ணல் முதலிய தீய வழக்கங்களைப் பார்க்கிறோம். இவற்றை முன்னிட்டே பிற வகுப்பினர் நம்மை இழிவாக நினைக்கிறார்கள். நாம் முன்னேற்றமடையும்படி முயற்சித்து வரும் இக்காலத்திலாவது விழித்து இத்தீய வழக்கங்களை அவர்கள் விடக்கடவர்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

என்பதைச் சிந்திக்க. முருகன்றிருவருளினிது பெருக. சுபம்!

ஐ. இராஜு முதலியார்,
தமிழாசிரியர்.

# விரதப் பகுதி

## சுக்கிரவார விரதம்.

மலையரையன் பெறுதுபெற்ற பூம்கொம்பு போன்ற பார்வதி தேவியாராகிய உலக மாதாவிற்குரிய முக்கியமான விரதங்கள் மூன்றும். அவையாவன:—(1) சித்திரை மாத பூர்வ பக்ஷ சுக்கிரவாரமும். (2) ஐப்பசி மாத உத்திர நக்ஷத்திரமும், (3) நவராத்திரி என வழங்கும் மகா நவமியுமாம். இம்மூன்றனுள் முதலாவதாகச் சொல்லப்பட்ட சுக்கிரவார விரதத்தைப்பற்றிச் சூத முனிவர் கூறியது பின்வருமாறு: சித்திரை மாதத்தில் பிரதமை திதி கூடிய சுக்கிர வாரம் வந்தமைந்தபோது விடியற் காலையில் எம்மையாளுடைய கருணைசொரூபமாகிய உமா தேவியாரை மனதில் தியானஞ்செய்து சுத்த நீரில் ஸ்நானஞ்செய்து, முறைப்படிச் செய்ய வேண்டிய நித்தியகடன்களை யெல்லாம் செய்து முடித்துப் பூசா மண்டபத்திற் பிரவேசித்து விதிப்படி பூரண கும்பத்தை விசேஷ நீரினல் நிரப்பிப் புதியபட்டு வஸ்திரத்தைஅக்கலசத்திற்குத் தரித்துச் சந்திர மௌலியாகிய சிவபெருமானது ஒப்பற்ற வாமபாகத்தில் பொருந்தி வீற்றிருக்கும் உமாபிராட்டியாரைக் கலசத்தில் எழுந்தருளி இருப்பதாய்ப் பாவித்து அன்றலர்ந்த பூக்களால் அருச்சித்துச் செய்யவேண்டிய பூசைகளை யெல்லாம் விதிப்படி செய்து, அத்தேவியார் சந்நிதியில் சர்க்கரைப்பொங்கல் நிவேதித்து, உத்தம குணம் வாய்ந்து கற்பு நிலை தவருத மாதர் எண்மரை வருவித்து அவர்களையும் பிராட்டியாராகப் பாவித்து, மன முருகத்தக்க ஆசையோடு அவர்களைப் பூசித்து, அக்கலச முதலியவற்றை அவர்களுக்கு வழங்கி, உமாதேவியார் திருக்கோயிலை அடைந்து, செழுமையாகிய தீப முதலியவை செய்து வைத்து, அவ்வம்மையார் சந்நிதியை வலம் வந்து பணிந்து, பழவர்க்க முதலியவற்றை உணவாகக் கொள்ளுதல் உத்தம்மாகும். அன்னத்தை ஆகாரமாகக் கொள்ளுதல் மத்திமமாம்.

இவ்விரதத்தைச் சுக்கிரன் திரிகரண சுத்தியாய் வைராக்கியத்தோடு சில காலம் அனுஷ்டித்து வந்தான். அவனது அன்பிற் கிரங்கிய பார்வதி தேவியார் அவனுக்கு அநுக்கிரகம் செய்யும் பொருட்டு பிரசன்னமாகி, "அசுராசாரியனே! நீ எம்மிடத்துக் காட்டிய அன்பு பாராட்டத் தக்கது. நீ விரும்பிய வரங்களைக் கேட்பாயாக." எனத்திருவாய்மலர்ந்தருளலும், சுக்கிரன் தான் அரிதில் அநுஷ்டித்து வந்த விரதத்தின் பயனாக வெளித்தோன்றியருளிய அம்மையாரை அடிபணிந்து, உபசரித்து, "அம்மணீ! அடியேன் தேவரீரிடம் வேண்டுவது இரண்டே வாங்களாம். அவற்றுள் முதலாவது யாகங்களில் அவியாகக் கொடுக்கப்படும் மது மாம்சங்களையும், போகலோகமாகிய இந்திரலோகத்திலுள்ள அமுதத்தையும் உண்டு எப்போதும் எனது சீடர்களாகிய அசுரர்களுக்கு விரோதிகளாக இருக்கிற சுரர்களை வலிமை குன்றுமாறு செய்ய அரிய வித்தைகளை அடியேன் சீடர்களுக்கு உபதேசிக்கும்படி இயற்கையின் உண்மைத் தத்துவங்களை அடியேன் நன்குணருமாறு அநுக்கிரகம் செய்தலும், இரண்டாவது அடியேன் அநுஷ்டித்த தேவரீருடைய இவ்விரதமானது இது முதல் அடியேன் பெயரால் வழங்குமாறு அநுக்கிரகித்தலுமாம்" என்றான். தேவியாரும் அவ்வாறே அநுக்கிரகித்து மறைந்தருளினர். சுக்கிரன் தான் பெற்ற முதலாவது வரத்தின் பயனாகத்தான் இராவணன், இரண்யன், சூரபத்மன் முதலிய அசுரர்களுக்கு அரிய உபதேசங்களைச் செய்து, சுரர் முதலிய யாவரையும் வென்று, பல அண்டங்களையும் அடக்கியாளும் வல்லமை பெற்று விளங்கச் செய்தான். அன்று தொடங்கி வெள்ளிக்கிழமையானது பார்வதியார் வரத்தினலே பிற்காலத்தில் சுக்கிரவார விரதமென்று ஒரு பெரும் பெயருடையதாய் நிலைபெற்றது. சரஸ்வதி முதலிய அநேகர் இவ்விரதத்தை அநுஷ்டித்து பெரும்பேறு பெற்றுய்ந்தனர்.

மா. அ. கனகசபை முதலியார்.



# ஆராய்ச்சிப் பகுதி

## கொங்கு நாட்டு உண்மைக் கைக்கோளர் பண்டைத் திறன்.

'உண்மைக் கைக்கோளர் திறன்' என்றது இப்பொழுது நிகழ்வனவற்றையோ மிகப் பழய காலத்து நிகழ்ந்த புராண மூலமாக உள்ள வரலாற்றையோ குறித்தன்று. பின்னர் யாதோ என்னில் ஏறக்குறைய முப்பது யாண்டுகட்டு முன்பு வரை கைக்கோளர் நிகழ்ந்திய சீரிய முறைகள் என்க. முப்பது யாண்டுகட்கு முன்பு தான் மேனட்டாருடைய ஆலை நூல்கள் நந்தமிழ் நாட்டில் மிகுதியாகப் பரவிக் குடி நூலை அடியோடு வீழ்த்தத்தொடங்கியது. பெரும்பான்மையும் வேளாளப் பெண்கள் நூல் நூற்பதில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இம் மகளிர் தங்கள் நிலங்களில் உண்டாகும் பருத்தியை எடுத்துக் கொட்டையை நீக்கி, பஞ்சை நூலாக நூற்று, வாரம் ஒரு முறை விற்கும் பொருட்டு சந்தைகளுக்குக் கொண்டு வருவார்கள்.

இந்நூல்களை வாங்குவதற்கும் நெய்த துணிகளை விற்பதற்கும் கைக்கோளர்கள் அரையில் பஞ்சக்கச்சமாக உடுத்திக்கொண்டு, திருநீறணிந்து, முப்புரியாக மேலங்கி அணிந்து, பெரிய தலைப்பாகை தரித்து, அறுவை மூட்டையுடன் *வெள்ளிக் கோலும் எடுத்துக்கொண்டு சந்தைக்கு வந்து மூட்டைகளை ஒழுங்காக வைத்திருப்பார்கள். பெருஞ்செல்வராயும் நல்ல அறிவாளியாகவும் உள்ள ஒருவரைத் தேர்ந்தெடுத்துப் புள்ளிக்காரர் என்ற சிறப்புப்பட்டம் கொடுத்திருப்பார்கள். இந்தப் புள்ளிக்காரர் மிக்க கம்பீரத்துடன் பெரிய குதிரையின் மீதேறி சந்தைக்கு வருவார். புள்ளிக்காரர் அறுவைக் கடைக்குள் நுழைந்தவுடன் எல்லோரும் மிக்க அன்புடன் வரவேற்பார்கள். உடனே துணிக்காரர்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டு துணிகளுக்குப் புள்ளி போட்டு விற்பதற்கு ஆணையிடுவர் புள்ளிக்காரர். பின்பு துணிகளை வணிகர்களோ மற்றையவர்களோ வாங்கிச் செல்வார்கள்.

துணிகளை விற்ற பின்னர் வெள்ளிக்கோலுடன் நூற்கடைக்குச் செல்வார்கள். புள்ளிக்காரரென்பவர் துணியைக் கவனித்தது போல, நாட்டாண்மைக்காரர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து நூலைக் கவனிக்க ஏற்பாடு செய்திருப்பார்கள். இந்நாட்டாண்மைக்காரர் நூற்கடையை நன்கு பார்த்து உயர்வான ஓரிடத்தில் நின்று கொண்டு நூல் வாங்குதற்குக் கட்டளையிட்டுக் கை தட்டுவர்; உடனே வெள்ளிக்கோலால் நூலை நிறுத்து விலை பேசி வாங்குவார்கள். புள்ளிக்காரராவது நாட்டாண்மைக்காரராவது சந்தைக்கு வர இயலாவிடின் தங்கள் சிறுவர்களையாவது விடுத்து இக்காரியங்களை முடிப்பார்கள். இப்பெரியார்களுடைய இல்லங்களில் ஏதாவது இன்னல் நேர்ந்து, சிறுவர்களும் சந்தைக்கு வர இயலாமல் இக்காரியங்கள் தடைபட்டுக் கைக்கோளர்களும் வேளாளப் பெண்களும் ஒரு வாரத்திற்குத் தொழிலின்றி வருந்துவ துண்டு.

ஆலை நூல்களை வணிகர்கள் கொண்டு வந்து சந்தையில் விற்கிற பழக்கம் மிகவும், கைக்கோளர்களுடைய ஒற்றுமை குறைந்து தனித்தனியாக நூல் வாங்கவும் துணி விற்கவும் ஏற்பட்டபின்னர் இத்தகைய செவ்விய ஆட்சிமுறை நின்றுவிட்டது. நூல் வாங்கும் பொருட்டு கட்டளையிட்டுக் கை தட்டிய பெரியார் சிலர் இன்னும் இருக்கிறார்கள். இத்தகைய உண்மைக் கைக்கோளர்களுடைய ஒழுக்க முறையினையும் வரலாறுகளையும் அறியாதார் சிலர் தங்கள் மனம் போனவாறு கைக்கோளரைப் பற்றி நூல் எழுதி வசைபாடி விடுகின்றனர். இவ்வாறு உண்மைக்கு மாறாக நூல் எழுதுவதில் பெரிய இன்னல் உண்டாகும் என்பதை நடுவு நிலைமையுள்ள பெரியார்கள் நன்கு உணர்வார்கள். இவைகளெல்லாம் கொங்கு நாட்டில் நிகழ்ந்த உண்மைச் செய்திகளாகும்.

*ஒருவகைத் துலாக்கோல்.

நெஞ்சமுடையவன்; மாபாதகன்; அடியார்களை அமுதுக்கு அழைத்து இவ்வுலக்கையாலடித்துக் கொல்வது வழக்கம். ஆகையால் இவ்வுலக்கைக்கு வேண்டிய பணிவிடைகளைச்செய்கிறேன்" என்றாள். இதைச் செவியுற்ற சிவனடியார் திடுக்கிட்டுப் பயந்து 'அம்மே! அப்படியாயின் நீயே அடியேனைக் காப்பாற்றவேண்டும், நான் ஓடிப் போகின்றேன்' என்றான். உடனே, அவள், 'தாங்கள் தெருவழியாகச் சென்றால் ஒருகால் என் கணவன் எதிரில் வருவான், நீர் உயிர் தப்பிப் பிழைக்க முடியாது; புறக்கடை வாயிலாக ஓடிப்போகலா'மென்று அவளுரைக்க, அடியார், 'தாங்கள் சொல்வதே சரி என்று சொல்லி அதிக வேகத்தோடு புறக்கடைவாயிலாக ஓடினர். இதற்குள் ஆற்றுக்குப் போனவர் சீக்கிரம் ஸ்நானத்தை முடித்து விட்டுத் திரும்பி வந்து தெருத்திண்ணையில் அடியாரில்லாமையைக் கண்டு, 'அடீ! அமுதுண்ண வந்த அடியாரெங்கே?' என்று கேட்டான். அதற்கு அம்மாது நாயகா! அடியாரானவர் அமுதுண்ண வந்ததுமல்லாமல் இவ்வுலக்கையைக் கேட்டார். இது உங்கள் பாட்டியார் காலத்து பழய உலக்கை யானபடியால் கொடுக்கமாட்டே னென்றேன். அவர் கோபித்துக் கொண்டு புறக்கடை வாயிலாக விரைந்து சென்றார்' என்றாள். இதைக்கேட்ட கணவன் 'அடீ பாதகி! அடியார்கள் எதைக் கேட்கினும் நாம் தடையின்றி கொடுக்க வேண்டுமே! உலக்கையைத் தானே கேட்டார் வேறு ஒரு புதிய உலக்கை வாங்கிக் கொள்ளலாம். இவ்வுலக்கையின் காரணமாகவா அடியார் சினங்கொண்டு சென்றார்? இதோ நானே சென்று இவ்வுலக்கையைக் கொடுத்து அவரை அழைத்து வருகிறேன்' என்று சொல்லி உலக்கையைக் கரத்திலேந்தி அடியாரைப் பின்பற்றி 'அடியாரே! அடியாரே!!' என்று கூவிக் கொண்டு ஓடினான். உலக்கையைக் கரத்திலேந்தி விரைவாக ஓடி வருகிறதை அடியார் அறிந்து, 'இவன் மனைவி உரைத்தது உண்மையே. அவளே உத்தமி, சத்தியவதி. இவன் உலக்கையைக் கொண்டு ஓடி வருகிறது என் மண்டையை உடைத்து என்னை எமலோகத்திற்கு அனுப்புவதற்கே,' என்று நிச்சயித்து, இன்னும் அதிவேகமாக ஓடிப்போனார்.

சகோதர சகோதரிகளே! சில மடமைக்குண மாதர்கள் இவ்வாறு நடந்தால், தாங்கள் மிக்க செட்டுக்காரி என்ற கெட்டிக்காரப் பட்டத்தை அடைந்து விடலாமென ஆசிக்கின்றார்கள். அது அறியாமையே யாயினும், பெண்கள் செட்டாய் இருக்கவேண்டியது அவசியந்தான். ஆனால் ஆத்ம திருப்தியாகிய அன்னபானதிகளை அடியவர்களுக் களிப்பதால் யாதொரு குறைவும் ஏற்படாது. அதிலும் உத்தம கற்பிற்கரசிகள் உள்ளன்போடு செய்தால் எண்ணிய எண்ணியாங் கெய்துவார்க ளென்பதில் ஐயப்பாடெதோ? நாயன்மார் அறுபத்து மூவரில் பெண் திலகமாய் விளங்கிய புனிதவதியார் என்ற காரைக்காலம்மையாரின் அற்புத சரித்திரத்தை அரியாதா ரொருவரிரா ரன்றோ? அவ்வம்மையார் பசி என்று வந்த அடியார் எவரேயாயினும் எதிர்நோக்கி வரவேற்று அன்புடன் அமுது படைத்துக் கொண்டு வந்தனரே. அதனால் அவ்வம்மைக்கு என்ன குறைவு ஏற்பட்டது? பரிபூரண கற்பின் நிறைவன்றோ ஏற்பட்டது? அந்நிகழ்ச்சியில் அவ்வம்மையார் தன் நாயகன் அனுப்பிய அருமாங்கனிகள் இரண்டில் ஒன்றை அமுதுண்ட அடியார்க்கு அளித்துவிட்டு எஞ்சிய ஒன்றைக் கணவனுக்கு அளித்தாரல்லவா? அவர் அதை உண்டு அதிக மதுரமுள்ளதா யிருந்தபடியால் மற்றொரு கனியையும் வேண்டினரே. அக்கணமே அக்கற்பிற் சிறந்த காரைக்காலம்மையார் அகத்தி லிருந்தவாரே அதினும் அதிக மதுரமுள்ள அற்புத மாங்கனிகளை ஒருமுறைக் கிருமுறையாகத் தருவித்துத் தந்தனரன்றோ? ஆகையால் சகோதரிகளே! பசி என்று வந்த அதிதிகளையாயினும் உறவினர்களையாயினும் உபசரித்தல் உயரிய குலத்திலுதித்த உத்தம கற்பிற்கரசிகளின் கடமைகளிலொன்று. (தொடரும்).

சி. தீ. தாண்டவராயன்,
காரியதரிசி,
ஸ்ரீ ஷண்முகாநந்த சன்மார்க்க சங்கம், திருமருகல்.

—o—



## "அறம்"

உலகில் பெறுதற்கரிய மனித யாக்கையைப் பெற்றார் அனைவரும் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளின் அடிமைகளே ஆவார்கள். எஜமானனது கட்டளைக்கு மாறுபட்டு நடக்கும் அடிமை எவ்வாறு நன்மை அடைய முடியாதோ அதுபோன்று, கடவுள் விதித்த நல்லறச் செயல்களுக்கு மாறுபட்டு நடப்பார் அனைவரும் துன்பமுற்றுழல்வார் என்பது நிச்சயம். அங்ஙனமெனின், ஒரு தலைவன் தனது அடிமைபால் ஒரு பொருளைக்கொடுத்து 'இதை நீ இவ்வாறு இன்னின்ன வழியில் செலவுசெய்தல் வேண்டும்' எனக் கட்டளையிட்டிருப்பானாயின் அவனது கட்டளைக்கு மாறுபட்டு நடக்கும் அடிமை எத்துணைத் துன்பத்துக்கு ஆளாவானென்பது உள்ளங்கைநெல்லிக்கனியன்றோ? அதுபோன்று, மனித சரீரமாகிய இவ்வுடலை நமக்குத் தந்து, நல்லொழுக்கங்களையும் வகுத்து, இவ்விவ்வாறு ஒழுக வேண்டுமென்று இட்ட கட்டளையை மறுத்து நாம் நடப்போமாயின் கடவுளது சீற்றத்துக்கு ஆளாவோ மென்பது நிச்சயமேயாகும்.

நன்றி மறவாத ஒருவன் கடவுள் பக்தியில் மிகுந்திருந்தானேனும், ஏழைகட்கு இரங்குங் குணம் அவனிடத்து இல்லாது போயின், அவன் அவரது கட்டளையைச் சரிவர நிறைவேற்றியவனாகான். இவ்வுலகில் நமக்குக் கிடைத்த பொருள்கள் எல்லாம் அப்பெருமான் தந்தருளியவையே யாகும். அவற்றைக் கொண்டு ஏழைக் கிரங்குதல், இறைவனை வணங்குதல் ஆகிய உத்தம தொழில் புரிவோரே உயர்ந்தோராவார். ஏழைகட்கு இரங்கி அவர்கட்கு இயன்ற அளவு புரியும் உதவியையே ஈகை என்றும் அறம் என்றும் கூறுவர். அவ்வறம் முப்பான் இரண்டாகும்.*

அறம் என்பது அறிஞர்களால் நூலில் விதித்துள்ளனவற்றை செய்தலும் விலக்கியனவற்றை ஒழித்தலுமாம். இதனாலே அறுக்கப்பட்டது (வரை அறுக்கப் பட்டது) அறம் என்றும், மறுக்கப்பட்டது மறம் என்றும் அறிஞர் கூறுவர்.

ஈகை என்பது இல்லாதார்க் கொன்றீந்து, அவர்களது இடர்ப்பாட்டை நீக்குதலாம். பொருள் வருவாய் இன்றித் தமது உணவிற்கே வருந்துபவரும் பிறர்க்கு உதவுதல் சாத்தியமோ எனின், அங்ஙனமன்று. வறிஞரும் கொல்லாமை, புலாலுண்ணாமை, பொய்யாமை, கள்ளுண்ணாமை, அழுக்காறாமை, களவாடாமை, பிறர்மனை நயவாமை, பெரியோர் பிழையாமை ஆகிய நல்லொழுக்கங்களால் ஈகைக்குரிய பலனை உறலாம்.

### திருமந்திரம்.

'யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

பிறரிடம் அன்போடு மொழியும் மொழியும், செய்யும் முகமனும், தானத்தின்பாற்படும் என்னும் மேற்கூறிய பெரியார் மொழி நமது கூற்றை வலியுறுத்துகிறது. சிறிது செளகரியம் உள்ளோர் குருடர், மூடவர், சிறு குழந்தைகள், தரித்திரர், வியாதியஸ்தர், வயோதிகர் முதலியவர்களுக்கு அன்னமளித் துபசரித்தலும், அடியாரை ஆதரித்தலும், இறைவனது புகழையும், அடியாரது புகழையும் உளங்கனிந்து ஓதுதலும், பிறர் கேட்பச் சொல்லுதலும், உத்தம புண்ணியங்களாம். ஆலயம், மடம், சத்திரம், குளங்கள், ஆகியவற்றைச் சீர்திருத்தலும், அவ்வாறு சீர்திருத்த முன்வருவோர்க்கு இயன்றவளவு பொருள் உபகரித்தலும் பெரும் புண்ணியங்களாகும்.

தெய்வ பக்தியும் ஜீவகாருண்யமும் உடைய எவரும் தரும சிந்தனையை வளர்க்கும் தாயாவர். சிலர் புகழ் விரும்பியும் அறஞ்செய்ய விருப்பப்படுவர். அப்புகழ் நற்குணம், நல்லறம், நற்கல்வி முதலியவற்றால் மேன்மையுறுமென்பது அறிஞர் கண்ட முறையாதலின் அம்முறை கொண்டு புகழ்வளர்க்க முற்படுவோர் பலராவர். குணத்தினாலும், கல்வியினாலும், பெறும்

---

*(1) ஆதுலர்க்குச் சாலை (2) ஓதுவார்க்குணவு (3) அறுசமயத்தார்க்குண்டி (4) பசுவுக்கு வாயுறை (5) சிறைச் சோறு [illegible] ஐயம் (7) தின்பண்ட நல்கல் (8) அறவைச் சோறு (9) மகப்பெறுவித்தல் (10) மகவு வளர்த்தல் (11) மகப்பால் வார்த்தல் (12) அறவைப் பிணஞ் சுடுதல் (13) அறவைத் தூரியம் (14) சுண்ணம் (15) நோய்க்கு மருந்து (16) வண்ணார் (17) நாவிதர் (18) கண்ணாடி (19) காதோலை (20) கண் மருந்து (21) தலைக்கெண்ணெய் (22) பெண்போகம் (23) பிறர் துயர் காத்தல் (24) தண்ணீர்ப் பந்தல் (25) மடம் (26) தடம் (27) சோலை (28) ஆவுரிஞ்சுதறி (29) விலங்கிற் குணவு (30) ஏறு விடுதல் (31) விலை கொடுத்து உயிர்காத்தல் (32) கன்னிகா தானம்.

மென்று ஏற்படவில்லையா? ஆகாயமானது சூரியனுக்கும்; பூமிக்கும், இதரமண்டலங்களுக்கும் இடையேயுள்ள எல்லா விடங்களிலும் நிறைந் திருக்கிறபடியால் சூரியனைச் சுற்றிலும் உண்டாகும் சலனமானது நாம் உணரும்படி நம் பூமியையும் வந்து அணுக வேண்டுமல்லவா? உதாரணமாக ஒரு போகனி (Basin)யில் அல்லது ஒரு தட்டில் நீரை நிரப்பி ஒரு எரிக்கந்தகத்துண்டைச் சிர்மட்டாவினுல் எடுத்து அந்நீரில் வைத்த மாத்திரத்தில் அது அனலுடனும், சப்தத்துடனும் உருகும்போது அதைச் சூழ்ந்துள்ள நீரில் சிறு அலைகள் உண்டாகி அப்போகனியின் ஓரங்களில் வந்து மோதுகின்றன. இவ்வுதாரணத்தில் நீர் ஆகாயத்தின் ஸ்தானத்திலிருக்கிறது. இதே விதமாகத் தான் சூரியனிடத்திலிருந்து நமக்கு அலைகள் வருகின்றன.

இச்சிறு அலைகள் சூரியனிடமிருந்து எல்லாப் பக்கங்களிலும் இரவும் பகலும் தங்கு தடையின்றி அதி தீவிரத்துடன் ஒன்றையொன்று துரத்திக் கொண்டு ஆகாய முழுவதும் பரவிச் செல்லுகின்றன. பூமியின் எப்பாகமானது சூரிய அலைகளால் தாக்கப்படாம லிருக்கிறதோ அச்சமயம் அப்பாகத்திற்கு இராக்காலமாகும். பூமியின் எப்பாகமானது சூரியனுக்கு நேரே இருந்து சூரிய அலைகளினுல் தாக்கப்படுகின்றதோ அப்பாகத்திற்கு அச்சமயம் பகற் காலமாகும். அப்போது அவ்வலைகள் நீரின்மேலும் நிலத்தின் மேலும் தாக்கி அவற்றை உஷ்ணமாக்குகின்றன. நமது கண்கள்மேற் பாய்ந்து ஒளியைப் பார்க்கும்படிச் செய்கின்றன. ஒன்றிரண்டல்ல, லக்ஷக்கணக்கான சூரிய அலைகள் ஒவ்வொரு க்ஷணமும் இடைவிடாது நமது கண்களின் மேல் தாக்கிக்கொண்டே யிருக்கிறபடியால் நாமும் தொடர்ச்சியாய் ஒளியைப் பார்த்துக்கொண் டிருக்கிறேம்.

ஆனுல் சூரிய ஒளி இல்லாத இராக்காலத்தில் நாம் நக்ஷத்திரங்களிலிருந்து ஒளி பெறுகிறேம். 'அளவிறந்த தூரத்திலிருக்கிற இந் நக்ஷத்திரங்களிலிருந்து கூட அலைகள் வருகின்றனவா?' என்றுல் ஆம், அவைகளும் நமது சூரியனைப்போன்ற சூரியர்களாகையால், அவற்றிலிருந்தும் அலைகள் வருகின்றன. அவை நமது சூரியனைக் காட்டிலும் பன்மடங்கு தூரத்திலிருக்கிறபடியால் அவற்றினின்றுண்டாகும் அலைகள் நம்மிடத்திற்கு வரும்போது பலவீனப்பட்டு மங்கியிருக்கின்றன. அதனுற் ருன் அவை பலமான சூரிய ஒளியில்லா காலத்தில் நமக்குப் புலனுகின்றன.

ஆனுல் இந்த அலைகளையாவது அவை உலவுகின்ற ஆகாயத்தையாவது எக்காலத்திலும் எவ்விதக் கருவியாலும் யாரும் பார்த்ததில்லையென்றுல் அவை உண்மையாகவே இருக்கின்றனவென்று எவ்வாறு நம்புவது என்றுங் கேள்வி நிகழலாம். அவை நமக்குப் புலனுகாவிட்டாலும், அவற்றின் அறிமானம் இவ்வளவென்றும், ஒரு அங்குல இடத்தில் எத்தனை அலைகள் செல்லக்கூடுமென்றும் கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. ஒரு அறையின் சாளரத்தின் மூலமாகக் குறுகிய ஒளிக்கதிரை நேராய்ச் செல்லவிட்டு அக்கதிரின் குறுக்கே ஒரு நேரான கம்பியைவைப்போமானுல், அவை நீர்ப்பெருக்குள்ள ஆற்றினிடையே நட்டுள்ள ஒரு கம்பத்தைச் சுற்றி நீர் ஓடுவது போல, கம்பியைச் சுற்றி ஒளிக்கதிர்களும் ஓடுகின்றன. ஆற்றிலுள்ள கம்பத்தின் பின்னுல் முக்கோண வடிவாய் நீர் கூடுவது போலவே ஒளி அலைகளும் கம்பியின் பின்னுல் கூடுகின்றன. அவ்வாறு கூடுகையில் அலைகள் ஒன்றையொன்று எதிர்த்தோடுகின்றன. இங்கே தான் அவை நமக்குப் பிடி படுகின்றன. ஏனெனில், கம்பியின் இருபக்கங்களிலும் பிரிந்த அலைகள் சௌகரியமாய்க் கூடுமானுல் இரண்டும் சேர்ந்து ஒரே அலையாகக் கிளம்பி ஒன்ருய் ஓடி ஒரு பிரகாசமான ஒளிக்கோட்டை உண்டாக்குகின்றன. ஆனுல் அவை மேலுங்கீழுமாக தாறுமாருகக் கூடுமாயின், ஒன்றை மற்றொன்று தடுத்து இரண்டும் ஒளியற்று ஒரு இருட்கோட்டை யுண்டாக்குகின்றன. ஆகையால் கம்பியின் பின் பக்கத்தில் ஒரு துண்டு தாளில் இவற்றைப் பார்க்கலாம். அங்கு ஒன்றன்பக்கலில் ஒன்ருக இருட்கோடுகளும், ஒளிக்கோடுகளும் இருக்கக் காண்போம். இவ்விதமாக மேற்கூறிய அலைகள் என்ன பரிமாணமுள்ளவை எனக் கண்டு பிடிக்க இயலும். இவ்வரிய விஷயத்தை இவ்வியாசத்தில் தெளிவாய் விளக்கிக் காட்டுவது அசாத்தியமாகும். மேற்கூறிய அலைகளுள் சிறியவற்றைக் காட்டிலும் பெரியவை அகன்ற ஒளிக்கோடுகளையும், இருட்கோடுகளையும், உண்டாக்குகின்றன என்பதை ஷை தாள் துண்டில் தெளிவாகக் காணலாம். இவ்விதமாக அலைகளின் பரிமாணத்தைக் கணக்கிடலாம்.

ஒரே அங்குல அளவுள்ள இடத்தில் சுமார் ஐம்பதினுயிரம் அலைகள் அடங்கக்கூடிய அவ்



வளவு மிகமிகச் சிறியவைகளா யிருக்கின்றன. லக்ஷக்கணக்கான மைல் தூரத்திலுள்ள பரிதியினிடத்திலிருந்து இடைவிடாது வந்துகொண்டிருக்கும் மிகச் சிறியவையும், கட்புலனுக்கு எட்டாதவையுமான இத்தூதர்கள் ஏறக்குறைய உலகில் நடைபெறும் எல்லா வேலைகளையும் செய்கின்றனவென்றுல் இதைவிட ஆச்சரியமானது யாதுளது?

### சூரிய அலைகளின் வேகம்.

இனி நாம் சூரிய அலைகள் எவ்வளவு வேகமாய்ச் செல்லுகின்றன என்பதைக் கவனிப்போம். மணிக்கு 60 மைல் செல்லக்கூடிய ஒரு ரெயில் வண்டியில் ஏறிச் செல்லக்கூடுமாயின் சூரியனிருக்குமிடத்தை அடைய 175 வருஷங்கள் ஆகுமென முன்னரே சொல்லப்பட்டிருக்கிறது. நமக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைக் கடப்பதென்றுல் அதிவேகமாய்ச் செல்லக்கூடிய பீரங்கிக் குண்டிற்குங் கூட பன்னிரண்டு, பதின்மூன்று வருஷங்கள் பிடிக்கும். ஆனுல் ஒன்பது கோடியே இருபது லக்ஷம் மைல் தூரத்தை இச்சிறு அலைகள் 7½ நிமிஷத்தில் கடந்து வருகின்றன. அதாவது இந்த க்ஷணத்தில் நமது கண்களின்மீது தாக்குகின்ற அலைகள் 7½ நிமிஷங்களுக்கு முன் சூரியனிடத்தில் உண்டாகிய சலனத்தினுல் தோன்றியவையாகும். இச்சலனம் சூரியனிடத்தில் இடைவிடாது எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறபடியால் அதனுலுண்டாகும் அலைகளும் இடைவிடாது ஒன்றை ஒன்று தொடர்ந்து அதிவேகத்தோடு வந்து நமது கண்கள்மீது எப்போதும் தாக்கிக்கொண்டே இருக்கின்றன. ஒரே விஞடி நேரத்தில் நமது கண்ணில் 608 லக்ஷகோடி அலைகள் பிரவேசிக்கின்றனவென்றுல் அவை எத்துணை வேகமாக வருகின்றன வென்பதை வாசகர்களேதான் யூகித்துக் கொள்ள வேண்டும். இந்த எண்களையெல்லாம் நாம் ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டியது அவசியமில்லை யாயினும், ஞாயிற்றிலிருந்து தோன்றிவரும், கண்ணுக்கெட்டாத மிகச்சிறிய தூதர்களாகிய அலைகளின் பரிமாணத்தைப் பற்றியும், சுறுசுறுப்பைப் பற்றியும், ஒளியென்பது அதி அற்புதமான பொருள் என்பதைப் பற்றியும் ஒருவாறு தெரிந்து கொள்ள அவை சாதகமா யிருக்கின்றன.

ஞாயிற்றின் கதிர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விஷயங்களைப் பற்றி நாம் இன்னும் தெரிந்து கொண்டோமில்லை அவற்றைக் குறித்துப்பின்வரும் வியாசங்களிற் கூறுவாம்.

12980

## சுகாதாரப் பகுதி

### பலவித நோய்கள்

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதானியாதினும் அரிதரிது காண்"

என்றபடி மானிடப் பிறவி ஏனைய பிறவிகளைக் காட்டிலும் மேன்மையை யுடையது என்பது சகலருக்கும் தெரிந்த உண்மையேயாகும். ஆனுல் "இப்பிறவி தப்பினுலெப் பிறவி வாய்க்குமோ வேது வருமோ வறிகிலேன்" என்று சிந்தித்து, சிறந்த மானிடப் பிறவிதனை வீணில் அழிக்காது தனக்கு இகத்திலும் பரத்திலும் இன்பத்தைத் தரத்தக்க சாதனங்களை இவ்வருமைப் பிறவியில் பெறுபவர் மிகச் சிலரே ஆவார். எல்லோருக்கும் உண்ணல் உறங்கல் என்னும் இவைமுதலிய செயல்களில் வாழ்நாளில் பாதி செல்கின்றது. பின்னும் பிணிகள் பல அவரவர்கள் நடவடிக்கைக்கேற்ப அவரவர்களுக்கு எஞ்சிய பாதி வாழ்நாளை பின்னப்படுத்துகின்றன. அப்பிணிகளை நாம் வரவொட்டாமல் தடுக்க முயலுவோமானுல் நமக்கு மிஞ்சிய பாதி வாழ்நாட்களையேனும் நல்வழியில் உபயோகிக்க இடமுண்டு. அதுவுமன்றி, நோயற்ற வாழ்வை அடைதலே ஒருவனுக்கு இகத்தில் கிடைக்கும் பேறின்பமாகும்.

சாதாரணமாக நாம் உலக அனுபவத்தில் கவனிப்போமானுல் எச்சாதியாரும், எந்த தேசத்தினரும் ஒருவனை வாழ்த்துங்கால்

அமாவாசையில் வெள்ளாளத் தெருவில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இன்று இங்குக் கூடியிருக்கிறோம். இப் பாடசாலையில் பிரதி ஞாயிற்றுக்கிழமையிலும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய தமிழ் மறை கற்றுக்கொடுக்கப் படுகின்றது. இவ்வொழிவு பாடசாலையில் வாசிக்கும் மாணவர்கள் ஒழுங்காகவும் கிரமமாகவும் நடந்து வருகின்றார்கள். தற்போது சங்கத்தில் 600 சந்தாதாரர்கள் சேர்ந்திருக்கின்றார்கள். அவர்களிற் பெரும்பாலோர் தங்கள் சந்தாக்களைச் சேர்க்கவில்லை. இப்பாடசாலைக்கு மாசம் ரூபா 20-0-0 வேண்டியிருக்கிறது. ஆகலால் நீங்கள் "ஒவ்வொருவரும் இப்பாடசாலைக்காக முயற்சி எடுத்துக்கொண்டு பணஞ் சேகரித்துக் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். அங்கத்தினரைச் சேர்க்கவும் சந்தா வசூல் செய்யவும் சங்க சம்பந்தமானவையும் இரவு பாடசாலை சம்பந்தமானவையுமான எல்லா வேலைகளையும் நாங்களே செய்துகொண்டு வருகிறோம். இதற்காக ஒரு குமாஸ்தா வைத்தால் அவருக்குச் சம்பளம் கொடுக்கச் சக்தியில்லை. ஆகலால் சந்தா தொகைகளை மட்டும் நீங்கள் சேர்க்கவேண்டு" மென்று கூறினார். பிறகு சி. கயிலாயம், அருணாசலம் முருகேசன், ஜெயராமன் என்னும் மாணவர்கள் முறையே 'நன்னடக்கையும், தீர்நடக்கையும்', 'கல்வி', 'மாணவர் கடமை,' 'பெற்றோர்கடமை' என்னும் விஷயங்களைப்பற்றி வெகு விரிவாகவும் உருக்கமாகவும் பேசினார்கள். பின்பு ஆ. சா சண்முகம், சோ. குமாரசாமி, கல்லூரி மாணவர்கள் சத்தம் (சுகாதாரம்) இரவுபாடசாலை என்பவையைதப்பற்றி வெகுவிரிவாகப் பேசினார்கள் தலைவரவர்கள் பிறகு மேல் சொன்ன விஷயங்களை வெகுவிரிவாக தொகுத்துச் சொன்னார். தலைவர் கடவுள் வாழ்த்துக்கூறிய பிறகு காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு 9மணிக்குக் கூட்டம் கலைந்தது என நமது சங்கக் காரியதரிசி திரு. சி. அருணாசல முதலியார் தெரிவிக்கின்றார்.

## தருமியாங்குப்பம் செங்குந்த வாலிபர் சங்கம்

விபவஹு சித்திரை மீ 12உ மாலை 4½மணி முதல் 7½மணி வரையில் டை சங்கக்கூட்டம் திரு. மெ. மு. கேசவமுதலியார் தலைமையின் கீழ் நடைபெற்றது. அச்சமயம் திரு. பு. கு. தங்கவேலு முதலியார் 'கொல்லா விரதம்' என்பதைப்பற்றித் தெளிவாக உபந்நியாசித்தார். தலைவர் அவர்கள் செங்குந்தர் முன்னேற்றத்தைப் பற்றியும் கல்வியைப் பற்றியும் வெகு நேரம் எடுத்துப் பேசினார்கள்.

### தீர்மானங்கள்.

1. இவ்வாலிப சங்கத்தைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அங்கமாகச் சேர்க்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

2. செங்குந்த மித்திரனில் மாதம் ஒரு முறை ஸ்காந்த புராணத்தில் 5 செய்யுள்வீதம் உரையுடன் வெளிப் படுத்தவேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டது.

3. நமது ஊர் நெசவக்காரர் கோவாபெரேடிவ் கிரெடிட் சொஸைடியின் காரியதரிசியும், பண்ருட்டி கோவாபெரேடிவ் யூனியன் நிர்வாக அங்கத்தினருமான தலைவர் அவர்களை (திரு. மெ. மு. கேசவமுதலியார்) கூடலூர் தாலுக்காபோர்டு மெம்பராக நாமினேஷனில் எடுக்கும்படிச் சிபார்சு செய்ய வேணுமாய்த் தலைச்சங்கத்தை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது எனக்காரியதரிசி திரு. மெ. மாணிக்க முதலியார் எழுதுகிறார்.

## சிறுகுளத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்

26 - 4 - 28 ல் சிறுகுளத்தூரில் பெரியகயப்பாக்கம் திரு. V. S. நடேச முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்ச் செங்குந்தர் பொதுக் கூட்டம் ஒன்று கூடிற்று. அப்போது திரு. V. வல்லப முதலியார், 'புலாலும் மதுபானமும்' என்னும் விஷயத்தைப்பற்றி பல அரியபெரிய மேற்கோள்களுடன் மிகத்தெளிவாக நெடுநேரம் பேசினர். பின்னர் செங்குந்த வாலிபர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பெற்று உத்தியோகஸ்தர்களும் அப்போதே நியமிக்கப் பெற்றனர்.

28-4-28 ல் கூடிய பொதுக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இச்சங்கமானது நீடுழிவாழும் பொருட்டு இதை நடத்தவேண்டிய முறையைப்பற்றியும் பொருள் வருவாயைப்பற்றியும் கூடிய சீக்கிரம் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டியது.

2. சங்கக்கூட்டம் கற்பகவிநாயகர் ஆலயத்திலேயே நடைபெற வேண்டியது.

3. சங்கத்தைச்சேர்ந்த பிள்ளைகள் வாரந்தோறும் பஜனை செய்யவேண்டும்.

4. தலைச் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணம் இவ்வளவென்றும், ஊர்ப் பொதுவில் மித்திரன் பிரதியொன்று வரவழைக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது. இரவு 1 மணிக்குச் கூட்டம் கலைந்ததெனக் காரியதரிசி. திரு. கா. அண்ணாமலை முதலியார் எழுதுகிறார்.



## பெரியகயப்பாக்கம் செங்குந்தவாலிபர் சங்கம்.

விபவஹு சித்திரை மீ 7உ இரவு 7-மணிக்கு வாலிபர் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. சங்கத்தலைவராகிய திரு. சந்தி. ஆ. கந்தசாமி முதலியார் தலைமை வகித்தார். தலைச்சங்கத்தார் அனுப்பிய லெட்டர்கள் வாசிக்கப்பெற்றன. நிறைவேறிய தீர்மானம்.

1. இச்சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சிவசின்னங்களாகிய விபூதி, ருத்திராக்ஷம் அணிந்து தேவார பஜனை செய்வதன்றிச் சுசிகரமாயிருக்க வேண்டும்.

அங்கத்தினரிடமிருந்து சந்தா வசூல் செய்யப்பட்டு இரவு 10-மணிக்கு ஜே கோஷத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

27-4-28ல் இரவு 6-மணிக்கு கூடிய கூட்டத்திற்கு திரு. சந்தி. ஆ. கந்தசாமி முதலியார் தலைமை வகித்தார். அப்போது திரு. கு. க. சின்னசாமி முதலியார் கூட்டுக் காரியதரிசியாக நியமிக்கப்பெற்றனர். பிறகு தலைவர் 'புலால் உண்ணல் கூடாது' என்னும் விஷயத்தைப்பற்றியும் 'நாம் முன்னேறும் வழி' என்பதைப்பற்றியும் பல நியாயங்கள் காட்டி நீண்டநேரம் உபந்நியாசம் செய்தார். கடைசியாக ஊர்ப்பொதுவில் மித்திரன் பிரதி ஒன்று சங்கத் தலைவர் திரு. சந்தி. ஆ. கந்தசாமி முதலியார் பேருக்கு வரவழைக்கவேணுமென்று தீர்மானிக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு வேண்டிய சட்டதிட்டங்களைத் தலைச் சங்கத்தாரே தயார் செய்து அனுப்ப வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுவதாயும் தீர்மானிக்கப்பெற்றது.

---

## திருநெல்வேலி ஜில்லாவில் கிளர்ச்சி

### வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்.

இச்சங்கத்தின் ஆதரவில் 17-4-28-ல் இவ்வூர் அம்மன்கோவில் தெருவில் திரு. ஆ. மு. ஆறுமுக முதலியார் அவர்கள் வீட்டின் முன்பாக ஷையார் கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. தலைவர் முன்னுரையின் பின் குடியேற்றம். திரு. சிற்றம்பல முதலியார் 'செங்குந்தர் சமூக முன்னேற்றம்' என்பதுபற்றி உபந்நியாசம் செய்தார். அதில் நமக்குள் இருக்கும் கக்ஷிப் பிரிவுகளாலும், கல்வியின்மையாலும், நம் சமூகம் விருத்தியாவதற்கு இல்லாமல் இருக்கிறதென்றும், மற்றும் நமது அபிவிருத்தியின் பொருட்டு நாம் செய்யவேண்டியவற்றைப் பற்றியும் பேசினார். அடுத்தாற்போல் வேலூர். திரு. குப்புசாமி முதலியார் சபையின் அவசியத்தைப்பற்றிப் பேசினார். தலைவர் பின்னுரையில் உபந்நியாசகர்கள் பேசியவற்றைத் தழுவியும் பேசினார். உபந்நியாசகர்களுக்குப் பூமாலை சூட்டப்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

சங்கசாலையில் 22-4-28 மாலை 3½-மணிக்குச் சங்கக் கமிட்டி ஸ்ரீமான் அ. மு. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. மகமை வசூல் செய்து கணக்குப் பரிசீலனை செய்யப்பட்டது.

4½-மணிக்கு இச்சங்கத்தின் 11-வது கூட்டம் ஸ்ரீமான் சு. ஆவுடைநாயக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. கடவுள் வாழ்த்துப்பாடி, சென்ற கூட்ட ரிபோர்ட்டு வாசிக்கப்பெற்றது. ஸ்ரீமான் ஆ. மு. ஆறுமுக முதலியார் அவர்கள் 'ஜாதிப் பிரிவினை'யைப் பற்றி மிகத் தெளிவாய் ஒரு அரிய உபந்நியாசம் செய்தார். தலைவர் பின்னுரையுடன் சபை இனிது கலைந்தது எனக் காரியதரிசி சி. ப. ஆறுமுக முதலியார் எழுதுகிறார்.

---

## கோவை ஜில்லாவில் கிளர்ச்சி

### கணபதி செங்குந்தர் கூட்டம்.

1-5-28 செவ்வாய்க்கிழமை மாலை ஆறுமணிக்குக் கணபதியில் காமாக்ஷியம்மன் கோவிலில் உண்மைச் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அப்போது நாட்டாண்மை திருவாளர் ஏ. மு. சித்தைய முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். சுமார் 350 செங்குந்தர்கள் கூடியிருந்தார்கள். அச்சமயம் திரு. வா. ப. நஞ்சப்ப முதலியார் நம் குலம் முன்னேற்றத்தின் பொருட்டு கல்வி முதலியவற்றில் விருத்தியடைய முயலவேண்டு மென்றும், நம் தொல்குலத்திற்கு அவமானத்தை விளைவிக்குமாறு போலிகள் செய்யும் செய்கைகளைக் கண்டிக்க வேண்டுமென்றும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமாகிய நமது தலைச்சங்கத்தின் வெளியீடாகிய செங்குந்தமித்திரனை ஒவ்வொரு உண்மைச் செங்குந்தரும் ஆதரிக்கவேண்டுமென்றும், டை சங்கத்தின் கிளைச் சங்கமொன்று இங்கு ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சுமார் 3-மணி நேரம் பேசினார். இதைத் திரு. பெ. க. பழனியப்ப முதலியார் ஆதரித்துப் பேசினார். பிறகு போலிகளை சம்பந்தமாய் ஒரு கண்டன தீர்மானமும் நிறைவேறிற்று. இரவு 10-30-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது என திரு. பெ. க. மாரியப்ப முதலியார் எழுதுகிறார்

### கணபதி செங்குந்தவாலிபர் சங்கம்.

11-5-28 தேதியில் மாலை 7-மணிக்குச் சத்தியமங்கலம் ரோட்டில் இவ்வூர் உண்மைச் செங்குந்த வாலிபர் பொதுக்கூட்டம் ஒன்று திரு. வா. ப. கஞ்சப்ப முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. தலைவர் அவர்கள் 'நமக்கு அவசியமாக வேண்டிய அதாவது ஒற்றுமை', 'நமது தலைச்சங்கம்', 'போலிச் செங்குந்தர் பொய்க்கூற்று', 'சீக்கிரம் மகாநாடு கூட வேண்டியதன் அவசியம்' முதலிய விஷயங்களைப் பற்றி 2-மணி நேரம் பேசினர். பலர் ஆமோதித்துப் பேசினர். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) இங்கு ஒரு செங்குந்த வாலிபர் சங்கம் நமது தலைச்சங்கத்திற்குக் கிளையாக ஸ்தாபித்தல் வேண்டும்.

(2) இச்சங்கத்தின் நடவடிக்கைகளை நமது மித்திரன் வாயிலாகப் பிரசுரித்தல் வேண்டும்.

(3) நமது தலைச்சங்கத்தின் முயற்சியால் நம் இனத்தவரிடையே தற்போது உண்டாயிருக்கும் கிளர்ச்சியையும், போலிகள் நமக்கு விளைத்துவரும் அவமானத்தையும், இன்னும் உணராத செங்குந்தர்கள் வசிக்கும் பல கிராமங்களுக்குப் பொது விளம்பரம் ஒன்று அச்சிட்டுத் தெரிவிக்கும்படி தலைச்சங்கத்தை இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

(4) இச்சங்கத்திற்கு உத்தியோகஸ்தர்கள் மறு கூட்டத்தில் நியமிக்கப்படல் வேண்டும்.

இத்தீர்மானங்கள் வந்திருந்தவர்கள் யெல்லோராலும் ஆமோதிக்கப்பட்டன.

சபை இரவு 10-30-மணிக்கு இனிது கலைந்தது.

### ஊத்துக்குளி-உண்மைச் செங்குந்தகுல சங்கம்.

இச்சங்கம் தலைவர் திருவாளர் மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் இரவு 9-மணிக்குக் கூடியது.

முன் 2-வது கூட்டத்தின் நடவடிக்கைகளைக் காரியதரிசி வாசித்துக் காட்டினார்.

இச்சங்கம் பிரதி பௌர்ணமியிலும் கூடவேண்டியிருக்க, சென்ற பங்குனி மாதத்திய பௌர்ணமியில் சில முக்கிய மெம்பர்கள் ஊரில் இல்லாததால் கூடாமல் நின்றுவிட்டது.

தலைவர் திரு. மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்கள் "நமதுகுலமுன்னேற்றம்" என்பதுபற்றிச் சுருக்கமாக சொற்பொழிவு நடத்திய பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

1. நமது தலைச்சங்கம் நமது குலத்தைச் சீர்மைப்படுத்தத்தக்க முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதையும் 10-3-28-ல் எல்லா முக்கிய அதிகாரிகளுக்கும் நமது பிரமுகர்களுடைய நாமினேஷனுக்காக அனுப்பியுள்ள மனுக்களையும் பார்க்கவும் இச்சங்கம் மிகவும் களிப்பெய்துகின்றது.

2. கூடிய சீக்கிரம் நம்மவர்கள் மகாநாட்டை ஈரோட்டில் கூட்ட, தக்க ஏற்பாடுகள் செய்யுமாறு தலைச்சங்கத்தை இச்சங்கம் மிகவும் வணக்கத்தோடு கேட்டுக்கொள்ளுகின்றது.

3. இவ்வூரில் 1912-13ம் வருஷங்களில் நடந்த கேஸின் நகல்களை 2, 3 தினத்தில் காப்பி தயார் செய்து தலைச்சங்கத்துக்கு அனுப்ப தீர்மானிக்கின்றது.

4. இவ்வூரில் நம் உண்மைச் செங்குந்தர்கள் குடும்பங்கள் சுமார் 40 இருந்தும் நம்மவர்கள் பாவுத்தோயவும் பாவு செய்யவும் வேண்டிய சௌகர்யமான பாவடி இல்லாமல் இருப்பதால், ஒரு பாவடிக்கு வேண்டிய நிலம் தயார் செய்துகொடுக்க ஈரோடு தாலூகாபோர்ட் மாகாண பிரசிடெண்டு அவர்களுக்கு மனுச்செய்து கொள்ளுமாறு அக்கிராசனர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

பிறகு இரவு 11-மணிக்குச் சபை இனிது நிறைவேறியது

---

### இராமநாதபுரம் ஜில்லாவில் கிளர்ச்சி

#### மண்டலமாணிக்கம் செங்குந்த மகாஜன சங்கம் திறப்புவிழா.

23-4-28 தேதி மாலை 5-மணிக்கு இவ்வூர் செங்குந்த முதலியார் பாவடிக்கு எதிரேயுள்ள செங்குந்தர் விநாயகராலயத்தில் 3-வது கூட்டம் ஸ்ரீமான் கருணைவள்ளல் மு. ஆ. பாதம்பிரியா முதலியாரவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. கடவுள் வாழ்த்து ஆன பின்பு இவ்வூர் போர்டு பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியாரவர்கள், 'நமது செங்குந்த மகாஜனங் கூட்டங்கள் சென்ற வருஷம் தை மீ முதற்கொண்டு பாகவதர் ஸ்ரீமான் M. வீரசாமி அவர்கள் தலைமையின்கீழ் நாளதுவரை இரண்டு நடைபெற்றன. நம் மரபினர் முன்னேற்றமடைய சங்கம் ஸ்தாபனம் செய்வதற்கு, இன்றைய நன்னாளானபடியால், இவ்வூர் பெரிய தனகாரரும், பிரபல வியாபாரியும், பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பருமான, ஸ்ரீமான் கருணைவள்ளல் மு. ஆ. பாதம்பிரியா முதலியாரவர்கள் சங்கத்தைத் திறந்து தலைமை வகிக்க வேண்டு'மெனக்கூறி மேளவாத்தியத்துடன் அவர்களை வரவேற்று மேற்படி விநாயகராலயத்தில் அன்னவர்களுக்கு இச்சங்கத்தின் வாயிலாக நல்வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்துப் பூமாலை சூட்டினார்கள். அதன்பின் தலைவரவர்கள் தாம் எதிர்பாராத இச்சந்தர்பத்தில் விசேஷக் கொண்டாட்டத்தையும் தமக்களித்த சங்கத்தின் வரவேற்பு பத்திரத்தையும், தலைமையையும் தாம் ஏற்றுக்கொள்ள தரமல்லவென்றும், சங்கத்தின் முன்னேற்றத்தைக் கருதியும் சங்கத்தின் வரவேற்புக்கிணங்கியும், ஏற்றுக்கொண்டு தமது அன்பான வந்தனத்தைச் செலுத்துகிறதாயும் கூறி நமது சங்கமானது வளர்பிறைச் சந்திரன்போல் விருத்தியாகவும், குன்றேற்றுதீபம்போலப் பிரகாசிக்கவும் முழுமுதற் கடவுளைத் துதிசெய்யக் கடமைப்பட்டவனாக இருக்கிறேனென்றும், சங்கத்துக்குத் தம்மால் இயன்ற உபகாரங்களைச் செய்யத் தயாராக இருக்கிறதாகவும் பதில் மொழிந்தபின் சங்க உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

#### தீர்மானங்கள்.

1. இன்று ஏற்படுத்தப்பட்ட சங்கத்துக்குச் 'செங்குந்த முதலியார் அபிவிருத்தி சங்கம்' எனப் பெயர் கொடுக்கப்பட்டது.

2. இச்சங்கத்தைச் சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாகச் சேர்க்க வேணுமென்று தீர்மானிக்கப்பட்டது.

3. தலைச்சங்கத்துக்கு இக்கிளைச் சங்கம் வருஷாந்தரக் கட்டணம் ரூ. 10 செலுத்தவேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

4. இச்சங்கமானது நம் மரபினர் முன்னேற்றமடைய ஒவ்வொரு தமிழ் மாதக்கடைசி சோமவாரத்தன்றும் கூட்டங்கூடத் தீர்மானிக்கப்பட்டது.

5. இச்சங்கத்தில் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் மாதம் ஒன்றுக்கு நாலு அணா சந்தா செலுத்தி வர வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

6. இச்சங்கத்துக்கென்று தனிக்கட்டடம் பிரத்தியேகமாய் ஏற்படும்வரை தற்போதுள்ள செங்குந்த விநாயகாலயத்திலேயே இருந்துவர வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.



7. இச்சங்கத்துக்குத் தலைச்சங்கத்திலிருந்து வரலான கிளைச் சங்கங்கள் தலைச்சங்கத்தின் அங்கங்களாகும்படி அனுப்பவேண்டிய மனுவையும், கிராம நிலையைப் பற்றிய போர்ட்டையும் பூர்த்தி செய்தனுப்ப சங்க நிர்வாகிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

8. நமது சங்கத்தில் சேர்ந்த அங்கத்தினர்கள் யாவரும் செங்குந்தமித்திரனை ஆதரித்துவர வேண்டுமென இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

9. இச்சங்கத்தின் நடவடிக்கைகளை நமது தலைச்சங்கத்துக்கு எழுதி செங்குந்தமித்திரன் வாயிலாக வெளியாக்கும்படி காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

இ. முனியப்ப முதலியார்,
காரியதரிசி.

### செங்குந்தர் அபிவிருத்தி.

7-5-28 தேதி இரவு 9-மணிக்கு இவ்வூர் செங்குந்த முதலியார் பாவடிக்கு எதிரேயுள்ள விநாயகராலயத்தில் பொதுக்கூட்டம் ஒன்று சங்கத்தலைவர் ஸ்ரீமான் கருணைவள்ளர் மு. ஆ. பாதம்பிரியா முதலியாரவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் இ. முனியப்ப முதலியாரவர்கள் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகளையும் சங்கம் ஸ்தாபனத்திற்கு வரலான செங்குந்தர்களின் நன்கொடையையும் செலவு விபரங்களையும் தெளிவாக வாசித்துக் காட்டினார்கள். கணக்குப் பரிசீலனை செய்த பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. அடுத்த மாதக் கடைசி சோமவாரத்தன்று கூடும் கூட்டத்தில் பொருளாதார விருத்திக்கான விஷயங்களையும், சங்கத்தில் சேர்ந்த அங்கத்தினர்களுக்குரிய சட்டதிட்டங்களையும் குறித்து ஆலோசித்து முடிவு செய்யவேண்டும்.

2. சங்கத்தின் இருப்புத் தொகையையும் வரவு செலவு கணக்கையும் பொருட் காப்பாளர் ஸ்ரீமான் வெ. மு. கிருஷ்ண முதலியாரவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது.

3. இச்சங்கமானது நீடூழி நின்று உழைத்தற் பொருட்டு இதனை நடத்தவேண்டிய முறைகளைப்

யற்றியும், பொருள் வருவாயைப்பற்றியும், மற்றும் இதன் நடவடிக்கைகளைப் பற்றியும், செங்குந்தமித்திரனில் வெளியிடும்படி தெரியப்படுத்த வேண்டும்.

கூட்டம் இரவு 11-மணிக்குக் கலைந்தது எனக் காரியதரிசி திரு. இ. முனியப்ப முதலியாரவர்கள் எழுதுகிருர்கள்.

---

## சென்னையில் கிளர்ச்சி.

### திருவல்லிக்கேணி செங்குந்தர் சங்கம் இராப்பள்ளிக்கூடத் திறப்பு விழா.

1928௵ மேமீ 6௳ ஆதிவாரம் மாலை 6-மணிக்கு மேல் சென்னைத் திருவல்லிக்கேணி, மல்லன் பொன்னப்ப முதலி தெருவில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிராநின்ற ஸ்ரீ நடராஜ பக்த ஜன சபையில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ள செங்குந்த சங்கத்தின் ஆதரவில் அச் சபையில் செங்குந்த மாணவர்களுக்கு ஒரு இராப்பள்ளிக்கூடம் 'செங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியரும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சருமான திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் எம.ஏ., எல்.டி., அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. அவ்வமயம், திரு. முதலியாரவர்களின் தலைமையின் கீழ் திரு. மா. அ. கனக சபை முதலியார், அவர்கள் "மாணவர் கல்வி" என்பதைப் பற்றியும், திரு. மு. சரவண முதலியார் அவர்கள், "வாலிபர் செய்யுங் கடமை" என்பதைப் பற்றியும் உபந்யசித்தார்கள்.

---

## தலைச்சங்கத்தின் பிரசாரம்.

நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர்களாகிய திருவாளர்கள் பி. சே. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் தி. அ. சண்முக முதலியார் அவர்களும் மேமீ திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் பிரசாரஞ்செய்துவிட்டு ஜூன்மீ தஞ்சை ஜில்லாவிலும் தென் ஆற்காடு ஜில்லாவிலும் பிரசாரஞ் செய்வார்கள். சங்க அமைச்சரும் நமது 'மித்திரன்' பத்திரிகாசிரியருமான திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் ஜூன் மாதம் பிரசாரஞ் செய்வார். இப்பிரசாரப் பயணங்களின் விபரம் அடுத்த மாதத்திய மித்திரனில் வெளிவரும்.

---

## மேலவலம்பேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கப் புத்தகசாலை.

தமிழபிவில் சிறப்புடையீர்

சென்ற ஓராண்டாய் மேலவலம்பேட்டையில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கமென பெயர்கொண்டு சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கமாக ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு பல வழிகளில் நம்மனோர் அறிவுவளரும் வழியைத் தேடிவருகிறது. இதன் சார்பாகப் பொதுஜனங்கள் வந்து வாசித்து கல்வியில் சிறக்க ஒரு புத்தகசாலை ஏற்படுத்த உன்னியிருப்பதால் அறிவிற் பெரிய நீவிர் பொருளுதவியுடன் தங்கள் பால் கிடைக்கக் கூடியநூல்களையும் கொடுத்து உதவி புரியுமாறு மன்றாடிகேட்டுக்கொள்ளுகிறோம். புத்தகமோ பொருளோ அனுப்ப விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பக் கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

இங்ஙனம்,

செங்குந்த அபிவிருத்தி சங்கத்தினர்.

விலாசம்

மானேஜர், செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்,

மேலவலம்பேட்டை, கருங்குழி போஸ்டு.

---



## ஒரு நிருபம்.

செங்குந்த மித்திரன் பத்திராதிபர் அவர்களுக்கு :—

அன்பார்ந்த ஐயா! எங்களூர் கக்ஷிபேதத்தால் நம்மவர்களுக்குள் ஒற்றுமையின்றி நிலை குலைந்திருந்தது. நாங்கள் பல தடவையில் தங்களைக் கேட்டுக் கொண்டதன் பேரில் 3-2-28 தேதியில் தாங்களனுப்பிய உத்திரமேரூர் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் திரு. கா. உ. பொன்னுசாமி முதலியார், திருவாளர்கள் வ. மு. கதிர்வேலு முதலியார், க. தங்கவேலு முதலியார், திருப்புலிவனம். திரு. வையாபுரி முதலியார், அம்மையப்பட்டு. திரு. மு. முனுசாமி முதலியார் முதலிய பெரியோர்கள் இங்கு விஜயஞ்செய்து ஊரை ஒற்றுமையாக்கி வைத்தனர். சுவாமி கிருபையால் நாளது வரையில் ஒற்றுமையுடன் இருந்து வருகிறோம். 26-4-28 தேதியில் திரு. மணியசாமி முதலியார் வீட்டில் நடந்த சீமந்த முகூர்த்தத்தில் கடவுள் கிருபையால் வித்தியாசமின்றி பந்தி போஜனமும் சந்தோஷமாய் நடந்தது. இது மாத்திரமேயன்றி திரு. சு. முனியப்ப முதலியார் வகையராக்களால் சித்திரைமீ 16௳யில் விசேஷ சமாராதனையுடன் நடத்தப் பெற்ற ஹரிசேவைக்கும், அன்றிரவு நடந்த பஜனைக்கும், ஆட்டத்திற்கும் யாவரும் சந்தோஷமாய் ஒற்றுமையுடனிருந்து நடத்தி வைத்தனர். கக்ஷிபேதத்தால் பிளவுபட்டு கிடந்த எங்களை ஒற்றுமைப்படுத்தி வைப்பதற்குக் காரணமாயிருந்த நமது தலைச்சங்கத்திற்கும் அதன் பிரதிநிதிகளாக விஜயஞ்செய்த மேற்கூறிய பெரியோர்களுக்கும் இவ்வூர்ச் செங்குந்தர்கள் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்குத் தங்கள் அன்பன்,

வெ. கேசவ முதலியார்,

பொன்னூர், வந்தவாசி தாலுக்கா.

## பாமாலைப் பகுதி

### முருகன் றுணை.

### வெற்றிவேல்வியன் சீர்த்தி.

நேரிசை ஆசிரியப்பா

பிறையும் நதியும் நறைகமழ் கொன்றையும்
பணியுந் துலங்க வணிசெஞ் சடையன்
ஐம்முகர் தானே ஆறுமா முகமாய்ச்
செம்மையி னல்லறஞ் சிதையா தோங்கிடக்
கோலங் கொண்ட கொள்கைக் கேற்ப
ஞால மீன் கன்னிகை யுமையின்
சத்தி யெலாமோர் சத்திவே லாகி
ஆறுமா முகன்கரம் வீறுகொண் டொளிர்ந்தது
சூர பதுமன் தாரகன் முதலோர்
விர வலியின் மிக்கோ ராகி
நொய்யவை புரிய வெய்ய வுயிர்த்துப்
புகலிடம் வேண்டிப் புகுதரும் அமரரைக்
காக்க வெண்ணிக் கடவுட் குமரன்
ஆக்க மிக்க அற்புத வேலை
அசுரர்தங் குலத்தை அறுக்கவென் றேவ
விசும்பெலாம் ஒளிர்ந்து வீறும் நெடுவேல்
பரமன் கணையையும் பிரமன் கணையையு
ஆலிலை துயின்ற அமரன் கணையையும்
சக்கரப் படையையும் மிக்க வலியுள
சூலப் படையையுங் காலப் படையையு

எப்படை களையும் ஒப்புறப் படைத்துடன்
எண்ணிக்கை யின்றி விண்ணிறை வித்தது
வெற்றிவேல் படரும் நற்றிறன் நோக்கித்
தேவர்கள் வாழ்த்தினர் மூவர்கள் போற்றினர்
அறிவர்தம் மனங்கள் செறிவுற வொளிர்ந்தன
அசுரர்தம் மனங்கள் கிசியென ஆயின
குழவிக் குமரன் அழகிய கைவேல்
தீயச் செயல்புரிமைக் குன்றையுந்
தாரகன் மார்வல் வீரக் குன்றையுந்
துகளே யாக்கி அகனெடுங் கடலில்
வீரமா மயேந்திரத் தேருறச் சென்று
சிங்கமா முகன்முதற் றேராக் கொடியராய்த்
தங்கிய சூரன் கிளைகளைச் சாடிக்
காளியும் பேய்களுங் கூளியுங் கூடி
உதிரங் குடித்துப் பிதிர்பிணம் உண்டு
கருந்தலை கொண்டு பருந்துரன் சூழ
வீரவேல் வாழ்க வியன்வேல் வாழ்க
சூர்தங் குடியைச் சுட்டவேல் வாழ்க
அமரர்தங் குலத்தை யளித்தவேல் வாழ்க
ஞானவேல் வாழ்க நயவேல் வாழ்கெனப்
பரவிப் பாடி விரவிக் கூடித்
துணங்கை யாடி யணங்குகொண் டயாக்
கழுகும் நரியுங் களிகொண் டுலவ
அழுதங் கவுண வரிவையர் விளிய
வீரம் இளைத்தமை வியப்ப நோக்கிச்
சூர பதுமன் சுளித்துடன் வேர்த்து
மாயச் சமர்பல வாய விளைத்தனன்
கனலாய்க் கனற்றினன் புனலாய்ப் பொழிந்தனன்
அலைகளா யெதிர்ந்தனன் மலைகளாய் விழுந்தனன்
வேறுவே றவுணராய் விளங்கித் தோன்றினன்
கூறுகூறாக் கொடுஞ்சம ரியற்றினன்
அப்பல செயலையுந் தப்பற வொழித்து
மாக்கடல் நடுவண் மாவாய் நின்ற
தீக்குணத் தோனைச் சேவலும் மயிலுமாங்
கூறிரண் டாக்கிக் குமரற் களித்துடன்
ஆறுமா முகன்கரத் தமர்ந்தது சமரவேல்
தேவர்கள் களித்துச் செய்வதொன் றறியார்
மாவல வேலை வாழ்த்தினர் குமரன்
சேவடி தம்மைச் சிரத்திற் சூடினர்
வாழ்கவே யென்று வழுத்தினர் பலதாஞ்
சூழ்ந்தே குமரனைத் துதிபல புரிந்தனர்
முனிவர்தந் தவங்களினி தாயின்றன
உலகங்களித்தன நலமுந் தளிர்த்தன
பிரமனும் மாலும் பிழைத்தோ மென்றனர்
அரனும் உமையும் அகமிக மகிழ்ந்தனர்
சுரருஞ் சரியைச் சுரர்தந் தலைவன்
பாவைக் குமரர் பக்கல் வைத்துத்
திருமண நிகழ்த்திச் சேவை செய்தனன்
இப்பல வெற்றி யியற்றிய வேலே
திப்பிய மெனநின் றிறனைப் பாவற்
சிறியேந் தமக்குத் திறனே யின்று
இவையெலாம் நினக்கோ ரியல்பே யாதலிற்
சுவைதரும் புகழெனச் சொல்லலு மின்று
உலகம் நிகழும் உயர்வுறு வலநின்
வலனே யெனமறை வழுத்துதல் கண்டேம்
இத்திற மெல்லாம் யாமெவ னுணர்குவஞ்
சித்தறும் அறிவர் செப்பினர் செப்பினேம்
யாநின் வேண்டு வெவையோ வென்னிற்
பொன்னு மன்று புகழு மன்று
மண்ணு மன்று மற்றவு மன்று
நலமிகும் ஞான வலிதனை யளித்துக்
குமரக் குழகன் அமருங் கோலங்
கண்டவன் றொண்டிற் பண்டுறும் வண்ணஞ்
செய்யும் வாழ்த்தை யுய்ய வளிப்பாய்
வாழிநின் கொற்றம் வாழி நின் றூய்மை
வாழிநின் ஞான வயக்கம்
வாழி நீவேறி வாழியித் தரையே.

முற்றும்.

முருகன் தொண்டன்,
பண்டிதர், ஜ. இராஜு முதலியார்,
பூவிருந்தவல்லி.

---

# விபவஹு சித்திரைமீ விடுகவி
## விறுவின் விடை.

**சந்த விருத்தம்.**

வானிடியேறு திருமகள் கொழுநன்
மரமொழி பயில் பாவை
வசைபெறவுல கோரிகழ் சுசியின்மை
வளர்சிறியோர் விளையாடுக்
தாளொரு கருவியலைகடல் மிருகஞ்
சடைமுடி கடவுளர் பேர்
தமையொரு மூன்றக்கரமது கொண்ட
தனிச் சொல்பதங்களிடை
மேனிழ் சண்முகசுந்தர மென்னும்
மித்திரனுசிரியர்
மிகுவடிவேலர் பெயர்வருமசனி
விண்டியர் கமுகுசுகம்
தானிகழ சுபந்துடனோதம்
தகைமையர் புகழ்சுரபி
சம்புவின்னுமை மொன்பது பதமு
சண்முகசுந்தரமே.

## விடுகவி விடை.

பாரேறு சித்திரை மித்திரனிலொரு
விடுகவியாப்பகர்ந்த கேள்விக்
கேற்றறு மசனி விண்டுகமுகினொடு
சுகமசுசியினிய பந்து
நீரேறு நீளுததிகாடி சம்புவிவற்றினடு
நிலை யெழுத்தால்
சீரேறு சண்முகசுந்தரமெனவே
திகழும் விடைசெப்பலாமே.

த. மாணிக்க முதலியார்,
தலைமை உபாத்தியாயர், போர்டு பாடசாலை,

| | | |
|---|---|---|
| அ | | |
| வி | ண் | டு |
| க | மு | கு |
| சு | க | ம் |
| அ | சு | சி |
| ப | ந் | து |
| ஓ | த | ம் |
| ச | ர | பி |
| ச | ம் | பு |

சோதிடம், ப. சிதம்பரநாத முதலியார்,
ஐயர்பாடி

## விபவஹு சித்திரைமீ௴ சஞ்சிகை 157-ம் பக்க விடுகவிக்கு விடை.

வானிலதிரிடியின்பேர சனியாகும்
வையமுண்ட திருமாலின் ஞமட்விண்டு
வீவில்விருட்சத்தின் பேர்கமுகு சொல்லின்
வாசகமே புகல்பறவை சுகமதம்ம
மானிலத்தின் சுசியின்மை உசசியாகும்
மைந்தர்கையில் வைத்துவிளையாடும் பந்து
மாபொதிய மலைமுனிவனுண்டு மிழ்ந்த
மாக்கலமோடுங் கடலேவுததி கானில்
தானினிதாய் வாழ்விலங்கு கரடிசொன்னை
தாமமுடி சிவன் திருப்பேர் சம்புவென்று
தனையாக யான்சொலுமிப் பாவினுள்ளே
தயங்குமிச் சொற்கள் கடுவெழுத்தை யோர்ந்தால்
வானவரைக் காப்பதற்காவலிய சூரன்
வலிதொலைத்த வடிவேலன் பெயருஞ்சேர்ந்து
ஆனமிலாக் குந்தர்தமக் கானமித்ரன்
வுயர்பத்திராதிபர் தம் பெயருமாமே.

போதுநலப்பிரியன்,
திருமலைராயன் பட்டணம்.

---

## செங்குந்தமித்திரன் வைகாசி மாதத்திய விடுகவி வினவுங்கு விடை.

திருவாரு மும்பரிடி யசனியாகுஞ்
  செம்மலரான் மகிழ்நர் பெயர்விண்டு வாகும்
செழித்திடுமோர் மரத்தின்பேர் கமுகதாகும்
  செப்புமொழி பயில்பறவை சுகமதாகும்
பெருவாகு முலகிலுள்ளோர் வெறுக்குமேலாய்
  பிறங்குசுசி யின்மையின்பே ரசுசியாகும்
பேசரிய கவின்குலவு மிளஞ்சிறூர்கள்
  பிரியமுடன் விளையாடுங் கருவிபந்தாம்
கருவாகு மத்தியின்பே ருததிடாம்வெங்
  கானிலுறு விலங்கின்பேர் கரடியாகும்
தங்கையணி சடைக்கடவுள் சம்புவாகும்
  தழைமிக்க பதத்தினடு வெழுத்தைக் கூட்டில்
குருவாகு மறுமுகன்பேர் கிறைவால் மித்ரன்
  பத்திராதிபர் தனது கோதொன்றில்லாக்
கூறுமுயர் சண்முகசுந்தரம் எனு பேர்
  குணமுடனே தோன்றுமதை யறிகுவீரே

க. ச. குப்புசாமி முதலியார்,
கண்டாச்சிபுரம்.

---

## ஐயவினு

### பகழிக்கூத்தர்.

புனைந்தோட மயேந்திரனன்று சொற்ற
  புனிதன் வினை
வனைந்தோட யார்க்கு பிள்ளைத்தமிழோ
  தெனவாய் மலர்ந்தே
பனைந்தோடப் பாவலர் பாடும்
  வேப்பத்தவர் பாடுகுன்றிச்
சினைந்தோடச் செய்திறலோர் செங்குந்த
  சிலாக்கியரே.

என்று செங்குந்தர் சிலாக்கியர் மாலையிற் கூறப்பட்டிருப்பத் தென்னிந்திய திருநெல்வேலிச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் புத்தக முன்னேட்டில் பகழிக்கூத்தர் வரலாற்றுரையில் பகழிக்கூத்தர் சேதுமன்னர் ஆளுகையின் கீழுள்ள செம்பிய நாட்டைச்சேர்ந்த கனிஞசிக் கிராமத்தில் உள்ளவர்; வைணவப் பார்ப்பன குலத்தினராய சர்ப்பாதன் என்பார் இவருக்குத் தந்தையாவர் என எழுதப்பட்டிருக்கிறது. ஆதலின் இவற்றுள் எது உண்மை என்பதை அறிவிற் சிறந்த ஆராய்ச்சி வல்லுநர் தக்க ஆதாரத்தோடு செங்குந்தமித்திரன் பத்திரிகை வாயிலாக எழுதிப் பலர்க்கும் உபயோகமாகும்படி வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

---



முருகன் துணை

### செங்குந்தமித்திரன் ஆசிரியர் பெயரே விடையாக வருதல்.

சானூர்ந்த அசனிவிண்டு கமுகுசுகம் அசுசிபந்து
  வளஞ்செய் உததம்
கானூர்ந்த தார்ப்புரவி சம்புவெனு மிவற்றிடையக்
  கரத்திற் காண்க
மானூர்ந்த விடத்தனருள் வடிவேற்கை யுடைவேளை
  வணங்கித் தாளிற்
தேனூர்ந்த மலர்தூவுஞ் சண்முகசுந் தரமெனநாஞ்
  செப்பும் பேரே. (க)

து. தில்லைநாயக முதலியார்,
வாழைப்பந்தல்.

### கட்டளைக் கலித்துறை.

அசனியும் விண்டுங் கமுகுஞ்சுகமும் அசுசியுஞ்சேப்
விசனித்திடாதக் கும்பந்து மோதமு மேதியில்
வசனிக்கவொண்ணுவிரைவார் புரவியும் வான்சம்புவு
நிசநிறை சொல்லிடைச்சண்முக சுந்தரம் சேர்வருமே. (உ)

உ. நமசிவாய முதலியார்,
வாழைப்பந்தல்.

### ஆசிரியம்.

ஒரேறு வானிலதிரிடியின்பே ரசநியாஞ்
  செந்திரு மகள் கொழுநன்பே
செப்பிடில் விண்டுவாஞ் சேர்மரப் பெயர்கமுகு
  செஞ்சொலுரை பறவையின்பேர்
ஏரேறு சுகமுலகு வெறுக்குஞ் சுசியின்மைபே
  ரசுசியா மிளைஞரென்றும்
எழிலாக விளையாடுங் கருவிபெயர் பந்துவா
  மிருங்கடற் பே ரோதமாங்
காரேறு கரத்தை வாம்விலங்கின் பெயா
  கடுநடைப் புரவியென்பர்
கற்றவர்கள் புகழ்நிறைந்த கண்ணுதன் மூர்த்திபெயர்
  கருதரிய சம்புவாகும்
பேரோ திவற்றிடை யெழுத்தினுற் செவ்வேளை
  பேசநாமத்தி லொன்றும்
பேசரிய செங்குந்த மித்திரனாசிரியர் பேர்
  பீடு சண்முக சுந்தரமே. (௩)

பொ. வரதராஜ முதலியார்,
வாழைப்பந்தல்.

### செங்குந்தமித்திரன் வாழ்த்து.

சீராருஞ் சென்னையினிலுதித்தே யெல்லாத்
  தேயங்கள் தனிலுலவிக்குந் தர்தங்கள்
காராரு மனத்திருளை யொழித்து ஞானக்
  கதிர்பரப்பி ஞாயிறென விளங்கியோங்கு
மோராருஞ் செங்குந்தமித்திரன்று
  னெம்மிறையா மறுமுக வனருளாலிந்த
வாராரும் கடலுலகில் வளத்திறனோடு
  சிறப்பெய்தி பல்லாண்டு வாழ்கமாதோ.

## தலைச்சங்கத்தின் விளம்பரம்

### ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளம்.

சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும் உயர்தரக் கல்வியை நாடும் சில ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளிக்க நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தீர்மானித்திருக்கிறது. உபகாரச் சம்பளத்தை நாடும் ஏழைச் செங்குந்த மாணுக்கர்களின் பெற்றோராவது பாதுகாப்பாளராவது அடியில் கையொப்பமிட்டிருப்பவருக்கு ஜூலை மாதம் முதல் தேதிக்குமேல் 15-ம் தேதிக்குள் சங்கத் தீர்மானம் மனு எழுதியனுப்பவேண்டும். ஆனி மாதத்திய செங்குந்தமித்திரனில் வெளியிடப்படும் மனுவில் குறிப்பிடவேண்டியவை :—

1. பிள்ளையின் பெயர்
2. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் பெயரும் விலாசமும்
3. பிள்ளை பிறந்த இடமும் தேதியும்
4. பிள்ளை படிக்கும் வகுப்பும் கலாசாலையும்
5. சென்ற பரீக்ஷையில் பெற்ற மார்க்குகள்
6. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் தொழில். வருமானம் முதலியன
7. மனுதாரர் குடும்பத்து நபர்களின் தொகையும் அவர்களின் ஜீவனோபாயங்களும்
8. அவர் குடும்பத்தில் படிக்கும் இதர பிள்ளைகளின் தொகையும் வகுப்பும்
9. நாடும் ஒத்தாசையின் தன்மையும் அளவும்
10. ஏற்கனவே வேறு ஒத்தாசை பெற்றிருந்தால் அதன் தன்மையும் அளவும்
11. உதவிக்குப் பாத்திரர் என்பதை நிரூபிக்கக்கூடிய இதர விவரங்கள்
12. பெற்றோர் அல்லது பாதுகாப்பாளரின் கையொப்பம்.

**முக்கியமான நிபந்தனைகள் :—**

1. (a) மேற்குறிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் உண்மையென்பதற்கு அத்தாட்சியாக மாணவர் படிக்கும் கலாசாலை அதிகாரியின் கைச்சாத்திட்ட சிபார்சு கடிதம் ஒன்று ஒவ்வொரு மனுவுடனும் வாங்கியனுப்புதல் வேண்டும்.

(b) உண்மைச் செங்குந்தர் சங்கங்கள் உள்ள இடங்களிலிருந்து மனு அனுப்புவோர் தம் மனுவே அவ்வச் சங்கத்துக்குத் தலைவர் சிபார்சையும் காரியதரிசியின் சிபார்சையும் தனித்தனி வாங்கியனுப்பு வேண்டும்.

2. இதுவன்றி, ஒவ்வொரு பிள்ளைக்கும் மனுவோடு இரண்டு கனவான்களுடைய சிபார்சு கடித வாங்கி அனுப்புதல் வேண்டும். சங்கமில்லாத இடங்களிலிருந்து மனு அனுப்புவோர்க்குச் சிபார்சு வரில் ஒருவர் உண்மைச் செங்குந்தராகவும், மற்றொருவர் வேறு வகுப்பினராகவும் இருத்தல் வேண்



3. உபகாரச் சம்பளத்தை நாடும் மாணுக்கர்கள் சம்பளம் பெற்று இடையில் அசிரத்தையினுல் படிப்பை நிறுத்திவிட நேரிடில் அவர்கள் அதுவரை பெற்ற சம்பளத்தைச் சங்கத்துக்கு ஈடுகட்டித் தருவதாகச் சிபார்சு செய்யும் கனவான்களில் ஒருவரிடமிருந்து ஜாமீன் கடிதம் ஒன்றும் வாங்கி மனுவோடு அனுப்ப வேண்டும்.

4. உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்கள் தமது கலாசாலை அதிகாரிகளால் எப்போதாவது துர் நடத்தைக்காகத் தண்டிக்கப்படுவரேல் அன்னவர்களுக்கு உபகாரச் சம்பளம் அதுமுதல் நிறுத்தப்படும்.

5. உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்கள் தமது தலைச்சங்கத்தையாவது அதன் கிளைச் சங்கங்களையாவது அவற்றின் நோக்கங்களையும் தொண்டுகளையுமாவது, பொதுவில் உண்மைச் செங்குந்தர் இயக்கத்தினையாவது தாக்கி அவற்றிற்குப் பாதகமாக நடந்து கொண்டாலும் அவர்களுக்கு அதுமுதல் உபகாரச் சம்பளம் நிறுத்தப்படும்.

6. ஏற்கனவே தலைச்சங்கத்திலிருந்து உபகாரச் சம்பளம் பெற்றுவரும் மாணுக்கர்களும் மேற்கூறியுள்ள நிபந்தனைகட்கு உட்பட்டு புது மனு அனுப்பவேண்டும்.

7. மனுவில் மேற்குறித்த விவரம் எதுவேனும் விடுபட்டிருந்தாலும் உண்மைக்கு மாறுக இருந்தாலும் அம்மனு தள்ளிவிடப்படும்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
அமைச்சர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
200, தம்பு செட்டி தெரு, சென்னை.

---

### சித்திரை மாதத்திய உண்டியல் விபரம்.

மதராஸ் பாளையகாட் கம்பெனியார் மூலம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| **ஆனைக்காபுத்தூர்.** | | | |
| ஆ. கு. முனுசாமி முதலியார் | 0 | 6 | 9 |
| பி. மு. முருகேச முதலியார் | 0 | 13 | 0 |
| **குண்ணத்தூர்.** | | | |
| கி. ஜெகநாத முதலியார் | 1 | 5 | 6 |
| தி. முருகேச முதலியார் | 0 | 14 | 9 |
| மே. கந்தசாமி முதலியார் | 0 | 10 | 0 |
| தி. ஒ. தேவராஜ முதலியார் | 0 | 11 | 9 |
| **சைதாப்பேட்டை.** | | | |
| செ. பழநி முதலியார் | 0 | 9 | 9 |
| அ. கு. முருகப்ப முதலியார் | 0 | 11 | 6 |
| செ. மாசிலாமணி முதலியார் | 0 | 3 | 9 |
| ந. குப்புசாமி முதலியார் | 0 | 3 | 6 |
| ப. மாணிக்க முதலியார் | 0 | 7 | 9 |
| ந. தங்கவேலு முதலியார் | 0 | 5 | 0 |
| ஆ. த. வைத்தியலிங்க முதலியார் | 0 | 13 | 9 |
| [illegible]. அ. கந்தசாமி முதலியார் | 0 | 15 | 0 |
| [illegible]. போரூரு முதலியார் | 0 | 6 | 6 |
| [illegible]ா. செ. முனுசாமி முதலியார் | 0 | 7 | 3 |

| | | | |
|---|---|---|---|
| **செம்பாக்கம்.** | | | |
| தி. சிந்தம்பல முதலியார் | 3 | 0 | 0 |
| அ. வேதாசல முதலியார் | 1 | 3 | 3 |
| ம. கி. மலைக்கொழுந்து முதலியார் கம்பெனி | 5 | 15 | 6 |
| பொ. கி. நடேச முதலியார் | 0 | 12 | 9 |
| சி. குமர பக்தர் | 0 | 9 | 3 |
| **திருமழிசை.** | | | |
| ஐயா. முனுசாமி முதலியார் | 0 | 5 | 0 |
| **பரங்கிமலை.** | | | |
| வே. மு. கண்ணப்ப முதலியார் | 2 | 2 | 6 |
| ஆ. பொன்னுசாமி முதலியார் | 0 | 8 | 0 |
| அ. ரெத்தின முதலியார் | 0 | 2 | 0 |
| **மேப்பூர்.** | | | |
| கா. சிவானந்த முதலியார் | 1 | 4 | 3 |
| பொ. நடேச முதலியார் | 0 | 6 | 6 |
| சோலை முருகப்ப முதலியார் | 0 | 6 | 6 |
| **வெளச்சேரி.** | | | |
| க. துரைசாமி முதலியார் | 0 | 5 | 3 |

# செங்குந்த சீமான்களுக்கு இரண்டு விண்ணப்பங்கள்.

சென்னை, 1—5—28.

## i. செங்குந்த மாணவர் விடுதி.

பல இடங்களிலிருந்து வந்து சென்னையில் உயர்தரக்கல்வியை நாடும் நமது செங்குந்த மாணுக்கர்கள் தற்போது அவரவர்கள்கல்லூரிமாணவர் விடுதிகளிலோ (College Hostels) பிராமணர் சாப்பாட்டுஹோட்டல்களிலோ தங்கி, அபரிமிதமான பணத்தைச் சாப்பாட்டுக்கும் குடிக்கூலிக்கும் இதர சௌகரியங்களுக்கும் செலவழித்தும், தனித்த அக்கரையுள்ள மேற்பார்வையின்றிச் சுகமும் நலனும் வேண்டிய அளவு பெருமலிருக்கின்றனர். இக்குறையை நீக்க, நமது சங்கம் தனது ஆதரவில் திரு. ம. சண்முகசுந்தரமுதலியார், எம்.ஏ., எல்.டி., திரு. மா. பா. கந்தசாமி முதலியார், பி.ஏ., பி.இ., முதலிய அறிவாளிகளின் மேற்பார்வையோடுகூடிய ஒரு செங்குந்த மாணவர் விடுதியை (Sengunthа Students' Hostel) சென்னையில் ஏற்படுத்தி, அதில் சேரும் நமது மாணுக்கர்களுக்குக் கிரமமான செலவில் பல சௌகரியங்களையும் செய்துவைக்கத் தீர்மானித்திருக்கிறது.

இது சம்பந்தமான விவரங்களை அடுத்த பத்திரிகையில் வெளியிடுகின்றோம்.

அதற்குள்ளாக, நமது குலச்சீமான்களை, இம்முயற்சிக்கு வேண்டிய மூலப்பொருளுக்காகத் தம்மாலியன்ற நன்கொடையை எமது சங்கத்துக்கு அனுப்ப வேண்டுகின்றோம்.

செல்வத்துள் சீரியசெல்வமாம் கல்விச் செல்வத்தை நம்மவர் அடைவதற்காகச் செய்யப்படும் இச்சிறந்த கருமத்துக்கு நமது குலச்சீமான்கள் தாராள சிந்தையுடன் உதவி செய்வார்களென்றே நம்புகின்றோம்.

சென்னை, 1—5—28.

## ii ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளமும் தருமசாப்பாடும்.

உயர்தரக்கல்வியை அவாவும்ஏழைச் செங்குந்த குல மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளித்து உண்டி உடை இருப்பிடம் முதலிய வசதிகள் தேடி வைப்பதைத் தனது பெருநோக்கங்களுள் ஒன்ருகக் கொண்டுளது நமது சங்கம். இவ்வருஷம் பல ஜில்லாக்களையும் சேர்ந்த பதினைந்து செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச்சம்பளமளித்துவருகின்றது அடுத்த வருஷமுதல் இன்னும் பலருக்கு உபகாரச் சம்பளமளிப்பதன்றிக் குறைந்த பக்ஷம் உயர்தரக் கல்வியை நாடும் இருபது மாணுக்கர்களுக்காயினும் சென்னையில் தருமசாப்பாடு போட்டுப் பாதுகாக்க உத்தேசித்திருக்கிறோம். இதற்கு மூலதனம் திரட்டுவது எமது கடமையாக இருக்கின்றது. திரண்ட மூலதனமின்றி எந்தத் தருமமும் நிலையாக நடைபெறுவது அரிதென்பது எவரும் உணர்ந்ததே. ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கென ஏற்படுத்த இருக்கும் இத்தருமத்தை நீடித்து நிலைக்கச் செய்து நமது குலத்தின் முன்னேற்றத்தை நாடுவதில் செங்குந்த மகாஜனங்கள் எங்களுக்கு ஒத்தாசையாக இருக்கப் பின்வாங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, ஒவ்வொரு செங்குந்தரையும் தங்களாலியன்ற நன்கொடையை இதைக் கண்டவுடன் நமது சங்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

தி. நா. சபாபதி முதலியார்,

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அ


80 வருஷ காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று, ஜனசிரேஷ்டர்களால் புகழ்பெற்று, அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதலிய குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

காரம் மணம் நிறம் குணம் வாடை உள்ளது.

# அசல்



# ஷண்முகம் பட்டணம்பொடி

அநேக மெடல்கள் நற்சாட்சி பத்திரங்கள் பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதறாஸ்.

முதல் தரமானது

பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் ரூ.அ.பை. | தபால் சார்ஜு ரூ.அ.பை. | பாக்கிங் ரூ.அ.பை. | மொத்தம் ரூ.அ.பை. |
|---|---|---|---|---|
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீசை 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சாக்கு வீசை 1-க்கு ரூ. 4.

பாக்கிங் சார்ஜும் தபால் கூலியும் பிரத்தியேகமானது.



விநோத கதாமண்டலி, வெளிவந்து விட்டது!

## மாப்பிள்ளை மருமகளாதல்

நூலாசிரியர்: பண்டித கதாரத்ன
சே. கிருஷ்ணசாமி சர்மா.

தமிழ்நாடு வெகு நாட்களாய் எதிர்பார்த்திருந்த அரிய புத்தகம் இதுவே. இது நாவல் அல்ல. புராணமல்ல. வேதாந்தமல்ல. காவ்யமல்ல. பிரபந்தமல்ல. இது ஒரு விநோத கதா களஞ்சியம். புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியது முதல் முடியும்வரையில் மனதின் உற்சாகம் மிதமற்றிருக்கும். அநேக தடவைகள் படித்தாலும் ஆவல் தீராது. ஆண் பெண் அனைவரு மறியத்தக்க விஷயங்கள் அநேகமிருக்கின்றன. தமிழ்மக்கள் இதுவரை இவ்வித புத்தகம் படித்திருக்க மாட்டார். சில காபிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

ரப்காகிதம் ரூ. 1—0—0
கிளேஸ் காகிதம் ரூ. 1—8—0

ஜி. எஸ். சாஸ்திரி அண்டு கோ.
தபால்பெட்டி நெ. 110, சென்னை.



## விளம்பரம்.

'ஆரம்பாசிரியன்,' 'செங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியர்

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., இயற்றிய தமிழ் நூல்கள்.

| | | ரூ. அ. பை |
|---|---|---|
| 1. | சிறுவர்க்கான சிறு கதைகள்: முதற்புத்தகம் | 0 3 0 |
| 2. | ,, இரண்டாம் புத்தகம் ... | 0 3 0 |
| 3. | சிறு பொறி பெருந்தீ ... | 0 4 0 |
| 4. | பொறுமைப் பேய் ... | 0 4 0 |
| 5. | செய்யுட் கதைகள் ... | 0 12 0 |

முதல் நான்கும் வெகு இனிமையாய் மிகவும் எளிய நடையில் பிரைமெரி பாடசாலைகளில் கதா வாசகங்களாக உதவுமாறு எழுதப் பெற்றன. ஐந்தாவது மேல் வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக உதவும். இவை உபாத்தியாயர்களுக்கு நூற்றுக்கு இருபது தள்ளிக் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம்:

டீசர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்,
200, தம்பு செட்டித் தெரு, சென்னை

# ‘செங்குந்த மித்திரன்’ பஞ்சாங்கம்

ஸ்ரீலஸ்ரீ கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

விபவஞு வைகாசி, ஆனிமீ (1928ஞு ஜூன்மீ)

உத்தராயணம், வசந்தருது, கிரீஷ்மரிது, கலி-5030, சாலி-1851, பசலி-1337-38, பிரபவ 2.

| ஜூன் மீ. | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | யோகினி. | ராத்திரி திதி. | விசேட சுப நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 19 | வெ | திர, 17-33 | விசா 60 | சி, 60 | 2 | 1 | தெ-கி | சது | நரஸிம்ம ஜயந்தி |
| 2 | 20 | சனி | சது, 23-50 | விசா 5-53 | சி, 60 | 2 | 1 | தெ-மே | ... | திருவள்ளுவர் சாவித்திரி விரதம் |
| 3 | 21 | ஞா | பௌ ○ 29-55 | அனு 13-25 | ம, 60 | 2 | 1 | தெற் | ... | சந்திரகிரஹணம் |
| 4 | 22 | திங் | பிர, 35-18 | கே 20-30 | சி, 60 | 2 | 1 | மேற் | பௌ பிர | சம்பந்தர், நீலகண்டயாழ், முருகர், நீலநக்கர் |
| 5 | 23 | செவ் | துதி, 40-3 | மூ 26-55 | அ, 26-55 சி | 2 | 1 | வ-மே | துதி | கிரஹாரம்பம் செய்ய |
| 6 | 24 | புத | திரி, 43-35 | பூரா 32-18 | அ, 32-18 சி | 2 | 1 | வ-கி | திரி | கடன் தீர்க்க, புதமனைக்கு |
| 7 | 25 | வியா | சது, 46-3 | உத் 36-38 | சி, 60 | 2 | 1 | ஆகா | சது | புதிய வாகனங்கள் ஏற |
| 8 | 26 | வெ | பஞ், 47-10 | திரு 39-35 | ம, 39-35 சி | 2 | 1 | பூமி | பஞ் | சுபகாரியங்கள் விலக்க |
| 9 | 27 | சனி | சஷ், 47-0 | அவி 41-15 | சி, 41-15 அ | 2 | 0 | கிழ | [illegible] | மாடுவாங்க, விற்க |
| 10 | 28 | ஞா | சப், 42-45 | சத 41-28 | சி, 60 | 2 | ½ | வட | சப் | சமுத்ர தீர்த்தம் செய்ய |
| 11 | 29 | திங் | அஷ், 42-3 | பூ 40-15 | ம, 40-15 சி | 1 | ½ | தெ-கி | அஷ் | திரிலோசன பூஜை |
| 12 | 30 | செவ் | நவ, 37-28 | உத் 37-35 | அ, 37-35 சி | 1 | ½ | தெ-மே | நவ | சுபம் விலக்க |
| 13 | 31 | புத | தச, 31-38 | ரே 33-35 | ம, 60 | 1 | ½ | தெற் | தச | அவமாகம் |
| 14 | 1 | வியா | ஏகா, 24-33 | அசு 28-33 | அ, 28-33 சி | 1 | ½ | மேற் | ஏகா | மிதுனரவி, நா. 23 |
| 15 | 2 | வெ | துவா, 16-38 | பர 22-43* | சி, 60 | 0 | ½ | வ-மே | திர | கிருத்திகை, பிரதோஷம் |
| 16 | 3 | சனி | திர, 8-15 சது, 59-35 | கிரு 16-13 | அ, 16-13 சி | 0 | ½ | வ-கி | சது | கடன்தீர்க்க |
| 17 | 4 | ஞா | அமா ● 51-5 | ரோ 9-38 | சி, 60 | 0 | 0 | பூமி | அமா | சூரியகிரஹணம் |
| 18 | 5 | திங் | பிர, 43-10 | மிரு 3-20 திரு 57-30 | அ, 3-20 சி | 0 | 0 | கிழ | பிர | சர்வத்ர ஆனி அமாவாசை |
| 19 | 6 | செவ் | துதி, 36-3 | புன 52-50 | சி, 60 | 0 | ½ | வட | துதி | ஆஷாடசுத்தம், அவமாகம் |
| 20 | 7 | புத | திரி, 30-13 | பூச 49-30 | சி, 60 | 0 | ½ | தெ-கி | திரி | பிறை அதிகமாக தெரியும் |
| 21 | 8 | வியா | சது, 26-3 | ஆயி 47-53 | சி, 47-53 அ | 1 | ½ | தெ-மே | சது | சர்வ முகூர்த்தம் |
| 22 | 9 | வெ | பஞ், 23-40 | மக 48-5 | ம, 48-5, சி | 1 | ½ | தெற் | பஞ் | |
| 23 | 10 | சனி | சஷ், 23-18 | பூர 50-13 | சி, 50-13 ம | 1 | ½ | மேற் | சஷ் | |
| 24 | 11 | ஞா | சப், 24-58 | உத் 54-15 | அ, 60 | 1 | ½ | வ-மே | சப் | |
| 25 | 12 | திங் | அஷ், 28-5 | அஸ் 59-55 | சி, 59-55 பி | 1 | ½ | வ-கி | அஷ் | |
| 26 | 13 | செவ் | நவ, 32-55 | சித் 60 | சி, 60 | 2 | ½ | ஆகா | நவ | |
| 27 | 14 | புத | தச, 38-55 | சித் 6-50 | சி, 60 | 2 | ½ | பூமி | தச | |
| 28 | 15 | வியா | ஏகா, 45-13 | சுவா 14-30 | அ 14-30 சி | 2 | 1 | கிழ | ஏகா | |
| 29 | 16 | வெ | துவா, 51-25 | விசா 22-15 | சி, 60 | 2 | 1 | வட | துவா | |
| 30 | 17 | சனி | திர, 57-3 | அனு 29-43 | சி, 60 | 2 | 1 | தெ-கி | திர | |

| அ | குரு | சுக் ராகு | புத சூரி |
|---|---|---|---|
| | 3 மே-அ<br>4 மிது-சுக்<br>9 கட-சுக் | | |
| | சனி கேது | | |

ஜூன் மீ 3உ சந்திரகிரஹணம், ஆதியந்தம், நா, 9-20 விநாடி, கிரஹண பரிமாணம் 1¼ ஞாயர், அனுஷம், கேட்டை மூலம், விருச்சிகம், இவைகளில் ஜனித்தவர்கள் ஹோமம், அர்ச்சனை, ஜபம், நாகஞ்செய்து எள், நெய்யுடன் தானஞ் செய்யவேணும், ஜூன்மீ 17உ சூரியகிரஹணம், இந்தியா தேன் ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் தெரியாது. வைகாசிமீ 20உ காஞ்சிபுரம் வரதர் கருடசேவை, 21உ கொம்பராதர் தெப்பம், 24உ வரதர் ரதம், ஆனி 4உ திருவள்ளூர் வீரராகவர் தெப்பம், 9உ மதுரை ஊஞ்சல் உற்சவ ஆரம்பம், 9உ மாணிக்கவாசகர், 10உ அமர்நீதி, 11உ தில்லை நடராஜா ஆனித் திருமஞ்சனம், 12உ வித்தியாரம்பம், 13உ முதல் 22உக்குள் மழைபெய்யும், 14உ ஸ்நேகஞ்செய்ய, 15உ கிராமபிஷேகம், 16உ பாத்திரங்கள் புதிதானவை புழங்க, 17உ மாலை 4-க்குமேல் வாகனமேற சுபம், நோயாளிகளுக்குக் கெந்தி, சுக்கு அதி மதுரம் சம இடை இடித்துக் கியாழஞ் செய்து தாகத்துக்குத் தரவேண்டியது. வட்டதிப்பி சாம்பலாக்கிச் சேர்க்கவும்.

# ‘செங்குந்தமித்திரன்’ புத்தகசாலை

**நல்ல புத்தகங்கள் !** **நம்பிக்கையான விலைகள் !**

இது வெளியூர்களிலுள்ள செங்குந்த நேயர்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி வி. பி. தபாலில் அனுப்புவதற்கெனவே ஏற்பட்டுள்ளது. இவ்விடம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அகராதிகள், புராணங்கள், நவீனகதைப் புத்தகங்கள், பிரபந்தங்கள், வைதிகநூல்கள், பாடபுத்தகங்கள் முதலியவற்றின் திருத்தமானபதிப்புகள் அழகான கட்டடங்களில் கிடைக்கும். தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புக. ஆர்டர் அனுப்புவதோடு அதன் மதிப்பின் கால்பாகத்தை முன்பணமாக மணியாடர் செய்தனுப்புக. மிகுதியிருக்கும் ரூபாயைத் தபால் பாகிங் செலவோடு வி. பி. போஸ்டில் புத்தகமனுப்பி வாங்கிக்கொள்ளுவோம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

இவ்வியாபாரத்தில் வரும் லாபமனைத்தும் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஏழைச் செங்குந்தமாணவரின் கல்வி சம்பந்தமாகச் செய்யும் தருமங்களுக்கு உதவுமாகையால், புதிய புத்தகங்களை வாங்க விரும்பும் செங்குந்த நேயர்கள் குலாபிமான சிந்தையுடன் நமது ‘செங்குந்தமித்திரன் புத்தகசாலை’க்கே ஆர்டர் அனுப்ப வேண்டிக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

மானேஜர் :—‘செங்குந்தமித்திரன்’ ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு.

## சந்தாநேயர்களுக்கு அறிக்கை.

(1) சென்றமாதம் அறிவித்தபடி வி. பி. தபாலில் பத்திரிகையை அனுப்பிப் பழைய பாக்கியையும் புது வருஷத்திய சந்தாவையும் வசூலிப்பதால் சந்தாநேயர்களுக்கு அநாவசியமாக மூன்றணா நஷ்டமேற்படுமென நினைத்து இம்மாதத்திய சஞ்சிகையையும் அநேகமாக முன்பணம் பெற்றுக்கொள்ளாமலேயே அனுப்புகிறோம். பத்திரிகையைப் பெற்றுக்கொண்டவுடன் அன்பர்கள் பாக்கித் தொகையையும் புதுச் சந்தாவையும் மணியாடர் செய்துவிட வேண்டப் பெறுகின்றனர். அப்படி மணியாடர் செய்யாத அன்பர்களுக்கு அடுத்த மாதத்திய பத்திரிகையை வி.பி. யில் அனுப்புவோம். பத்திரிகையைப் புது வருஷத்திற்கு வாங்க விரும்பாதவர்கள் பழைய பாக்கியாகிய ரூபாய் ஒன்றரையை மணியாடரில் அனுப்பிவிட்டுத் தமது விருப்பத்தை உடனே தெரிவித்துவிடுவாராக.

(2) சென்ற டிசம்பர் 20-தேதிக்கு அப்பால் பணம் அனுப்பிய சந்தா நேயர்களின் பெயர்கள் இம்மாதப் பத்திரிகையில் இடமில்லாததால் அடுத்த மாதம் வெளியிடப் பெறும்.

(3) நமது பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் நான்காம் தேதி தொடங்கி ஐந்து நாளில் தபாலில் போடப்படும். இதில் தவறுதலேனும் தவக்கமேனும் நேராது. எந்தச் சஞ்சிகையாவது யாருக்காவது எம்மாதமேனும் கிடைக்காமலிருந்தால் அவர் தபால் அதிகாரிகளுக்கு மனு எழுதவேண்டும்.

### விளம்பர விகிதங்கள்.

‘செங்குந்த மித்திர’னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன் பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும் :—

| | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. 60 | 30 | 16 | 6 |
| ½ பக்கம் | ,, 40 | 20 | 11 | 4 |
| ¼ பக்கம் | ,, 24 | 12 | 6½ | 2½ |

இங்ஙனம்:

மானேஜர், ‘செங்குந்த மித்திரன்’ ஆபீஸ்.
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

# “ செங்குந்த மித்திரன் ”

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

**ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.**

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சிரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் ‘ செங்குந்த மித்திர ’ னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானல் நமது ‘ மித்திர ’ னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக் கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள். தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ.பை. | |
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு. |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ” | 2—0—0 | 0—2—6. |

### “ செங்குந்தர் பிரபந்தத் திரட்டு ”

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இதனுள் கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய ‘ ஈட்டி எழுபது ’ ‘ எழுப்பெழுபது ’ இவ்விரண்டும், புகழேந்திப்புலவர் செய்தருளிய ‘ திருக்கை வழக்கமும் ’ மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய 12 பிரபந்தங்களும் அடங்கும்.

‘ ஈட்டி யெழுபது ’ கச்சிப் பிரதாபனார் செய்தருளிய பேருரையுடன் கூடியது. இவ்வுரை செங்குந்தரது வழக்கம், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், கொடை முதலானவற்றை மிகச் செவ்வையாக எளிய நடையில் விளக்குவது.

இன்னூற்கு, தமிழாசிரியர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் எழுதிய முன்னுரையும், தமிழாசிரியர் ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரையும், கல்வெட்டாராய்ச்சியினர் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகனார் எழுதிய அரிய கல்வெட்டுரையும், மற்றும் பல நல்லிசைப் புலவர்களின் மதிப்புரைகளும், ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களைக் கொண்டு எழுதிய பதிப்புரையும் கொண்டது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

| | | |
|---|---|---|
| உயர்ந்த பதிப்பு காலிகோபயிண்டில் பொன் கில்ட் செய்தது விலை | ரூ. 3-0-0 | தபாற் கூலி அ. 8 |
| ‘ செங்குந்த மித்திரன் ’ சந்தா நேயர்களுக்கு மட்டும் | ” ” 2-8-0 | பிரத்தியேகம். |

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சட்டதிட்டங்கள் விலை அணா 2.

புத்தகம் கிடைக்குமிடம் :—

மானேஜர், ‘செங்குந்த மித்திரன்’ ஆபீஸ்,
நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

129801

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Sengunthar Mahajana Sangam, Madras, at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press, 319-A. Armenian Street, Madras.

புகழைக் காட்டிலும், அறத்தினால் பெறும் புகழே அமைவுடைத்தாம்.

நமது ஔவையம் பெருமாட்டி நல்லொழுக்கங்களை வரையறுக்க வந்த காலத்து "எண்ணெழுத் திகழேல்", "குணமது கைவிடேல்" என்னும் வாக்கியங்களை முன்னர் கூறாது "அறஞ்செய விரும்பு" என்னும் வாக்கியத்தைக் கூறியதால் அறப்புகழ் மற்றைய புகழைக்காட்டிலும் அமைவுடைத்தென்பது தெற்றென விளங்குகிறது.

நம் தேசத்தில் பிரபுக்களாயிருந்த, புண்ணிய சீலர்கள், வந்தடைந்தவர்கள் எதைக் கேட்கினும், எந்த காலமாயினும், சிறிதும் முகஞ்சுளியாது "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்பதைக் கடைப்பிடித்து எவ்வகைப் பிரதிபலனையும் நாடாது, அறஞ் செய்து வந்தார்கள். கண்ணன், மாபலி, சிபி, ததீசி, குமணன் முதலானோர் வரையாது வழங்கியதாலன்றோ அவர்க்கு வள்ளலென்ற பெயர் சித்தித்தது. நம் மரபு இந்நிலவுலகத்து எப்போதும் நீடு வாழவேண்டுமாயின் நாம் பொருள் சம்பாதிக்கும்போது பாவத்துக்கு அஞ்சியீட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்கும், தென்புலத்தார் நால்வர்க்கும் பகுத்துக்கொடுத்துப் பின் எஞ்சியவற்றை உண்ணல் வேண்டும்.

(தொடரும்)

க. இரத்தினசபாபதி,
காரியதரிசி,
செங்குந்த சைவ சித்தாந்த சமாஜம்,
கண்டாச்சிபுரம்.

---

## மதியே பெரிது

### ஐயவினாவின் விடை

நல்வினை தீவினைப் பயனாகிய சுக துக்கங்கள் அவ்வினைகளைச் செய்தவரையே சென்றடையாநிற்கும். இது ஊழ் என்றும் விதி யென்றும், இன்னும் பல பெயர் பெறும். ஊழின் வலி சொல்லவேண்டி, நாயனார், ஊழ் என்னும் அதிகாரத்தில்

"ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்."

என்னும் குறளினால் கூறியிருக்கிறார். அவரே மெய்முயற்சியின் வலியுணர்த்தவேண்டி ஆள்வினையுடைமை என்னும் அதிகாரத்தில் இடைவிடாது முயற்சி செய்வோர் விதியையும் விலக்குவார் என்னும் கருத்துத் தோன்ற

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழாது உஞற்று பவர்."

ப-ரை:—ஊழையும்-(பயனை விலக்குவதாகிய) ஊழையும். உப்பக்கங்காண்பர்-புறங்காண்பர். உலைவின்றி-(விலக்குவதற்கு) இளையாமல். தாழாது-தாழ்வற. உஞற்றுபவர்—(தொழிலை) முயல்வோர்.

க-ரை:—இடைவிடாது முயற்சி செய்வோர் விதியையும் விலக்குவார். எ - ம்.

எனக் கூறியிருக்கின்றனர். முயற்சி மதியின் பாலதாயிருப்பதால் விதியினும் மதியே சிறந்ததாகிறது மதியின் முயற்சியினால் விதியும் போற்றப்படுகிறது. ஒரு தீபத்தின்கண் தைலமுந் திரியும் தக்கதாக வமைந்து பிரகாசிக்குமிடத்து அத்தைலமுந் திரியும் உள்ளவரையிற் பிரகாசித்தெரியவேண்டியது விதியாயிருப்பினும், தக்கவாறு பாது காப்பினமையாது விட்டில்,காற்று முதலியவற்றால் விதியின் வலி குறைபடுகிறது. அவ்வாறின்றித் தகுந்த காப்புடனமைவு பெறின் விதியின்படியே பிரகாசித்து விதி முடிந்தவாறே மழுங்கிவிடும். இவ்வாறு அதனை விட்டில்,காற்று முதலியவைகளினால் ஊறு நேரிடாது காப்பது மதியின் திறத்ததாகையால் மதியின் காப்பின்றி வலி குறைந்த விதியினும் மதியே சிறந்ததாகும். விட்டில்,காற்று முதலியவற்றால் தீபத்தின் பிரகாசம் நின்றுவிடுவதே விதியாகப் பெறுமெனக் கொள்ளுவோமாயின் அது பொருந்தாது. தைலமுந் திரியுமுள்ளவரையிற் பிரகாசிக்கவேண்டிய தீபமானது நடுவில் நின்றுவிடுவது அவமிருத்துவாகவே முடியும். இது அவமிருத்துவெனக் கொள்ளுகையில் விதி தன் வழி நடக்கச் சக்தியற்றதாகவே யிருக்கிறது. இதனால் விதிவழி நடக்கு மென்பது பொருந்தாது. இதனுண்மையை மேலெழுதிய "ஊழையுமுப்பக்க" மென்னும் பொய்யாமொழி விளக்கியிருக்கிறது. போறிவாளராகிய அன்பர்கள் ஊழின் வலியைக் குறித்து வருந்த மாட்டார்களென்பதையும், மதிவன்மையினால் காலபாசத்



தையும் மார்க்கண்டேயர் விலக்கிக் கொண்டனரென்பதையும் வற்புறுத்தத் தாயுமானவர்

"மார்க்கண்டனுக்காக மறலிபட்ட பாட்டையுன்னிப்
பார்க்கிலன்பர்க் கென்னபயங்காண் பராபரமே."

என அருளிச்செய்திருக்கின்றனர்.

விதிவழியாகவே மதி நடக்கிறதென்பதும் சீவர்கள் செய்யும் கிர்த்தியா கிர்த்தியங்களெல்லாம் ஈசுவரச் செயலாற்றானடக்கின்றனவென்பதும் சரியல்லவென்பதே தகுதியாம். நமது பொருள் முதலியவைகளை பிறர் அபகரிக்கில் நாம் சம்மதியோம். அபகரித்தவனை இது நியாயமோவெனக் கேட்பின், அவனும் 'நானென்ன செய்வேன். ஈசுவரன் எனக்கு இப்படிப் புத்திகொடுத்திருக்கிறார். இது கடவுள் செயலேயன்றி என்மேற் குற்றமில்லை' யெனக் கூறுவானாயின் நாமும் இவன் குற்றமற்றவனென்று இவன் செய்தது நியாயமெனக் கொண்டு வறிதேயிருக்கமாட்டோம். ஈசுவரச் செயலும் சீவர்கள் செயலும் வேறு என்பதை ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள்

இந்தச் சிவனால் வருமறு பகையெலா மிவன்
செயலல்லாமல்
அந்தத்தே வனால்வருமென்ற மூடர்களதோகதி
யடைவார்கள்
இந்தச் சிவனால் வருமறு பகையெலா மிவன்
செயலல்லாமல்
அந்தத் தேவனாலன்றெனும் விவேகியே யமல
வீடடைவாரே.

திகழ்ந்த வீசனார் சிருட்டியுஞ் சீவனார்
சிருட்டியும் வெவ்வேறே
சகந்தனிற் பொதுவீசனார் சிருட்டிகள்
சராசரப் பொருளெல்லாம்
அகந்தையா மபிமானங்கள் கோபங்க
ளாசைக ளிவையெல்லா
மிகழ்ந்த சீவனார் சிருட்டிகளாகும் காணி
மலனார் செயலன்றே.

என்று கைவல்லிய நவநீதத்தி லருளிச் செய்திருக்கின்றனர்.

விதிவழியே நடக்கிறதென்று ஒருவரும் வறிதேயிருப்பதில்லை. விதிவழியே நடக்கிறதென்று கொண்டிருப்போமாயின் நாம் ஒரு தொழிலும் செய்ய வேண்டியதில்லை; நமக்கு வேதாகம முதலிய சாஸ்திர வுணர்ச்சியும் வேண்டியதில்லை. விதி தன்வழியே தானாகவே வந்து, நமக்குச் சுகதுக்கங்களைத் தந்துவிட்டு தன்வழியே செல்லுகிறதென்று கொள்ளவேண்டும். அப்படி நாம் வறிதேயிராம லிருப்பது ஏனெனில் மதியின் முயற்சியினாலே விதியின் வலியையுந் தாழ்வடையச் செய்யலாமென்பது கொண்டேயாம். மன வாக்கு காயங்களினால் இறைவனது சீர்பாத கமலங்களை வணங்கி வழிபட்டு அவனருளைப் பெற்றுய்வது நமது அறிவின் கடமையேயன்றி விதிவழி யாகாது என்னும் கருத்து விளங்க

மனை விலங்கறு மைந்தனே கற்பக மரங்கனல்
புனல் மூன்றுந்
தனையடைந்தவர் வறுமையுஞ் சீதமுந் தாகமுந்
தவிர்த்தாலும்
அனையவீசனு மடைந்தவர்க்கருள் செய்வா
னகன்றவர்க்கருள் செய்யா
னிலைய குற்றங்க ளவர்குற்றமாகுமென்
றெண்ணி நீயறிவாயே.

என கைவல்லிய நவநீதம் கூறுகிறது.

சீவர்கள் தம்மையடைந் துய்யும் பொருட்டு வேதாகம மாதிய படிகளாகிய சட்டங்களை இறைவன் வகுத்திருப்பதை யுணர்ந்து அதன் வழியே யொழுகி சற்குரு கடாக்ஷத்தினால் விவேக ஞானத்தை யடைந்துய்வது நமது முயற்சியின் கடமையென்பது கீழ்வரும் கைவல்லிய நவநீதச் செய்யுளால் வெளிப்படும்.

ஒன்றுகேண் மகனே புமான் முயற்சியா
லுரைத்து மானிடர்க்கீசன்
நன்றுசெய்யவே காட்டிய நூல்வழி நடந்து
நல்லவர் பின்னே
சென்று தட்டவாதனை விட்டு விவேகராய்
செனித்த மாயையைத் தள்ளி
நின்று ஞானத்தையடைந்தவர் பவங்கள்போ
நிச்சயமிது தானே.

நமது அறிவின் முயற்சியினாலே சற்குருவின் திருவடியை யடைந்து சிவஞான வனுக்கிரகத்தைப் பெற்று, ஊழ்வலியை விலக்கிக்கொள்ளலா மென்பதும், சிவத்தியான முடையவர்களுக்கும் சிவஞானானந்தானுபவிகளாகிய ஞானிகளுக்கும், பிராரத்தமும், ஊழாகிய விதியுமில்லை யென்பதைக் கீழ்வரும் பெரியோர்கள் திருவாக்கினாலு மறிக.

### ஔவையார் நல்வழி.

*சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்*
*கபாய மொருநாளு மில்லை —யுபாய*
*மிதுவே மதியாகு மல்லாத வெல்லாம்*
*விதியே மதியாய்விடும்.*

இ - ள். சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு-சிவாய நமவென்று தியானித்துக் கொண்டிருப்பவர்க்கு; ஒரு நாளும் அபாயம் இல்லை-ஒரு நாளாயினும் இடுக்கண் உண்டாகாது, இதுவே உபாயம்—(விதியை வெல்லுவதற்கு) இதுவே உபாயமாகும், (இதுவே) மதியாகும்—(ஆதலின்) இதுவே (உண்மையாகிய) அறிவாகும், அல்லாத எல்லாம் மதிவிதியே ஆய்விடும்—(இச்சிவத்தியானம்) அல்லாத மற்றை யிடங்களிலெல்லாம் புத்தியானது விதியின் வசத்தே யாகிவிடும் எ-று.

இதன் தாத்பரியம் சிவத்தியானமுடையவருக்கு விதி இல்லை, சிவத்தியான மில்லாதவருக்கு விதி உண்டு என்பதாம்.

### குமாரதேவர் சுத்த சாதகம்.

*அனமது பாலுஞ்சருக்கரை கண்டமெங்கனி*
*வகைகளுந் தேனும்*
*இனமிவை யொன்ருய்க்கூட்டியருசியினி*
*தயனின் றிடைவிடா துறும்*
*கனபிரணவ வமுதத்தையே யருந்திக்*
*களிப்பவர்மீட்டு மிச்சகத்தின்*
*பினமுறவிடய வின்பையெண்ணி*
*டுமோபிராரத்த மும்மில்லையவர்க்கே.*

### விஞ்ஞானசாரம்.

*இடைமுன்னீரி லகண்டபரத்தேக மாகியானந்தம்*
*உடையவறிஞர் தமக்கிச் சாவூழே சற்றுமிலவாகும்*
*விடயமதனில் விருப்பமாய் மேவியூழுழுழென்றிடுவர்*
*சடையிலியமதுதர்களால் கலக்கி யூழுழுழென்றிடுவர்.*

மேற்கண்ட செய்யுட்களால் ஞானிகளுக்குப் பிராரத்தமும் ஊழாகிய விதியுமில்லையென்று கூறியதாலுணர்க.

சற்குருவின் திருவடியை யடைந்து சிவஞான அனுக்கிரகத்தைப் பெற்று ஊழ்வினையை விலக்கிக் கொள்ளலாமென்பதைக் கீழ்வரும் சிவஞான வள்ளலார் திருவாக்கினுலுமறிக.

### பதிபசுபாச விளக்கம்.

*ஊழையொதுக்கி யொரு சொல்லாலானந்த*
*வாழ்வைப்பெருக்கி மலகன்ம மாயையற*
*பாழிற்குடியேற்றி பரமசுக மெற்களித்தோன்*
*வாழிநெடுங்கால் மாணக்கர்க் கருள்புரிந்தே.*

பேறிவாளராகிய நமது பெரியோர்களருளிச் செய்த சாஸ்திர பிரமாணங்களைக் கொண்டெழுதிய வாசகத்தை யுணர்ந்து நேயர்கள் விவாதமொழிந்து சாந்தி யடைவார்களென நம்புகிறேன்.

இங்ஙனம்,
திருநாகேச்சரம் கா. வ. சோமசுந்தர முதலியார்
மாணக்கர்,
சோதிடம். ப. சிதம்பரநாத முதலியார்,
ஐவர்பாடி.

## அறிவியல் பகுதி

### ஞாயிற்றின் கதிர்கள்

(தொடர்ச்சி)

இதுவரையில் ஞாயிற்றின் கதிர்களுக்குக் காயகமாகிய பகலவனது பருமன், ஒளி, வெப்பம், ஆகியவற்றைப் பற்றியும், நமது பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைப் பற்றியும் ஒருவாறு தெரிந்து கொண்டோம். ஆயினும் நாம் எடுத்துக்கொண்ட விஷயமாகிய ஞாயிற்றின் கதிர் என்பது என்ன ? திவாகரன் நமது பூமியை எவ்வாறு தொடுகிறுன் ? என்பவற்றைப் பற்றியும் இன்னும் ஒரு சிறிதும் அறிந்தோமில்லை.

இராமனென்னும் ஒருவன் தான் இருக்குமிடத்திலேயே இருந்து, தன் எதிரில் கைக்கெட்டாத தூரத்திலுள்ள கிருஷ்ணனென்னும் தன் நண்பனைத் தொட விரும்புகிறுனென்று வைத்துக்கொள்வோம். அவன் தன் விருப்பத்தை இரண்டு விதத்தில் பூர்த்தி செய்யக்கூடும். முதலாவது, இராமன் ஏதாவதொன்றைக் கையிலெ



டுத்து வீசி எறிந்து கிருஷ்ணனை அடிப்பதனுல் வருடக்கூடும். இதில் ஏதோ ஒரு பொருள் [illegible]னிடமிருந்து கிருஷ்ணனிடத்திற்கு மத்தியிலுள்ள இடத்தைக் கடந்து செல்லவேண்டியதாயிருக்கிறது. இரண்டாவது இராமன் தான் நிற்கும் அறையின் தளமானது அதிரும்படி ஒரு [illegible]ர்ச்சி செய்வானுனல், அவ்வதிர்ச்சியைக் [illegible]ருஷ்ணன் உணர்வான். இவ்விதமாக இராமன், அறையின் தளத்தின் மூலமாய்த் தன் தன் நண்பனைத் தொடுகிறுன். இதில் இராமனிடமிருந்து கிருஷ்ணனிடத்திற்கு ஓர் அதிர்ச்சி அல்லது அலை சென்றதே தவிர யாதொரு பொருளும் செல்லவில்லை.

ஒருவன் பேசும்போது அவனருகி லுள்ளவனுக்கு அவ்வொலி எவ்வாறு எட்டுகிறது? பேசுவோன் வாயிலிருந்து கேட்போன் காதிற்கு ஏதாவது ஒரு பொருள் எறியப்பட்டதா? இல்லை, பேசும்போது அவன் வாயின் அருகிலுள்ள சலனம் அசைகிறது. அச்சலனம் அடுத்துள்ள காற்றினிடத்தே ஒரு சப்த அலையை உண்டாக்குகிறது. அவ்வாறுண்டாகிய அலை மற்றோரலையை உண்டாக்குகிறது. இவ்வாறே ஒரு சப்த அலை அடுத்தபடி வேறொரு அலையை உண்டாக்கிக்கொண்டே எதிரிலுள்ளவன் காதின் உட்ஜெவ்வில் போய்ப் படுகிறவரையில் செல்லுகிறது. இதனுல் எட்டாத தூரத்திலுள்ள ஒரு பொருளை மேற்கூறிய வண்ணம் யாதாமொன்றை வீசி யெறிந்து அதைத் தாக்குதல், சலனம் அல்லது சப்த அலையை உண்டாக்குதல் ஆகிய இவ்விருத்தத்தால் தொடலாமென்று விளங்குகிறது.

பிரபல இயற்கைத் தத்துவ சாஸ்திரியாகிய நியூடன் என்னும் மேதாவி பானுவின் கிரணங்கள் ஜடப்பொருளின் பரமாணு ரூபமானவையென்றும், அவை சூரியனுல் இடை விடாது நம் கண்கள்மீது எறியப்படுகின்றன வென்றும் சித்தாந்தப் படுத்தினுர். ஒளியையும், வெப்பத்தையும் பார்ப்பதற்கும் உணருவதற்கும் இத் தத்துவமானது சாதகமாயிருக்கிறது என்பதை நாம் சுலபமாக அறிகிறோம். வெகுகாலமாக இது உண்மையான சித்தாந்தமென்றே நம்பப் பட்டிருந்தது. ஆனுல் இதைக்கொண்டு அநேக விஷயங்களுக்குச் சரியான சமாதானம் சொல்ல இயலவில்லை என்று பிற்காலத்தவராகிய நமக்குத் தெரியவருகிறது. நாம் இங்கு ஆராயவேண்டிய சூரிய கிரணம் என்பது உண்மையில் என்னவென்றே யாதலின் மேற்கூறிய நியூடன் சித்தாந்தத்தைப்பற்றி இங்குக் கூறப் போவதில்லை. நியூடன் காலத்திலேயே இருந்த ஹைகென்ஸ் என்னும் டச்சுக்காரராகிய மற்றொரு தத்துவ சாஸ்திரி ஒரு குளத்தின் ஜலத்தின்மேல் சிறு அலைகள் எவ்வாறு செல்லுகின்றனவோ அவ்வாறே ஒளியானது ஆகாயத்தின் (space) மூலமாய்ச் சிறு அலைகளாக சூரியனிடத்திலிருந்து உண்டாகிச் செல்வதாக யூகித்தார். ஆனுல் இவ்வபிப்பிராயத்தின்படி இவ்வொளி யலைகள் எப்பொருளின் மூலமாக பாய்கின்றனவென்று சொல்லக் கூடவில்லை. ஏனெனில் ஆகாயத்தில் நீரில்லையென்பது நாமறிந்ததே. காற்று பூமியிலிருந்து சில மைல்கள் தூரமே இருக்கிறபடியால், சூரியனிடத்திலிருந்து வருகிற ஒளியின் அலைகள் காற்றின்மூலமாக வருகின்றனவென்று சொல்லவும் கூடவில்லை ஆகையால் சூரியனுக்கும் நமக்கும் இடையே, நீரினும் காற்றினும் நுண்ணிய பொருள் ஒன்று இருக்க வேண்டுமென்று தெரிகிறது. அந் நுண்ணிய பொருள் நமது கட்புலனுக்கு எட்டாமலே யிருந்து காரியத்தை மாத்திரம் செய்துகொண்டு வருகிறது. ஆகையால் நாம் அதனுடைய இருப்பை அது செய்யும் காரியத்தைக் கொண்டு அனுமிக்க வேண்டியிருக்கிறது. அப்பொருளானது கண்ணுடி, பனிக்கட்டி, மரம், கற்சுவர் முதலிய ஸ்தூல வஸ்துக்களின் மூலமாயும்ஊடுருவிச் செல்லத் தக்கதாயிருக்கிறது. இப்பொருளைத்தான் ஆகாயம்(ether) என்கிறோம். இவ்வாகாயம் எங்கும் வியாபித்திருக்கிறது என்னும் கொள்கையின் ஆதாரங்களை இங்குக் கூறப்போவதில்லை. அதைப்பற்றித் தனியே வேறொரு வியாசத்தில் ஆராய்வோம். அது விஷயமாய் இங்கு நாம் ஸர் ஜான் ஹொர்ஷல், ஆசிரியர் க்ளார்க் மேக்ஸ் வெல் முதலிய மேதாவிகளது அபிப்பிராயங்களையே ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இவ்வாகாயம் சர்வ வியாபகமாயிருந்து, ஒவ்வொரு பொருளிலும் துருவிச் சென்றிருக்கும் தன்மையினையுடையதாயிருப்பதால் இதனுள் அந்தரமாய் நிற்கும் ஒரு பெரிய அண்டத்தினிடத்தில் மாருபடுஞ் சலனம் உண்டாகுங் காலத்தில் என்ன நேருமென்று நினைக்கிறீர்கள் ? தினகரனைச் சூழ்ந்துள்ள ஆவியணுக்கள் (atoms of gas) பேரொளியையும், வெப்பத்தையும் உண்டாக்க மும்முரமாய் ஒன்றோடொன்று மோதும்போது அவ்வணுக்கள் இவ்வாகாயத்தையும் (ether) சலனப்படுத்து

"நீடூழி காலம் சௌக்கியமாய் வாழ்க" என்கின்றனரே யொழிய "செல்வாக்குடன் வாழ்க" அல்லது "அறிவுடன் வாழ்க" என்று கூறுதலில்லை. முறைப்படி கவனிப்போமானால் மனிதர்கள் மிகுதியாய் மதிக்கும் நிதியும், நிலையும், தேக சௌக்கியத்திற்குப் பின்தான் வரும். தடுக்கக்கூடிய வியாதிகள் பலவற்றால் பெரும்பான்மையோர் வீணில் மாள்கின்றனர் என்பதைக் கண்டஞ்சியே இங்குச் சுகாதாரத்தைச் சிறிது நமது "மித்திரன்" வாயிலாக வெளியிட முன் வந்தேன்.

### பலவித வியாதிகள்.

பலவியாதிகள் உண்டெனினும் அவற்றில் சிலவற்றைப் பற்றி மட்டும் இங்குக் கவனிப்போம். முக்கியமாய் வியாதிகளை மூன்று வகையாய்ப் பிரிக்கலாம். (1) நிலைமாறினதன் காரணமாக உண்டாகும் வியாதிகள் (Physiological Diseases)—தலைவலி, வயிற்றுவலி முதலியன (2) கிருமிகளினால் உண்டாகும் வியாதிகள் (Microbic Diseases)—அம்மை, கக்குவான் முதலியன. ஒட்டுவாரொட்டி வியாதிகள் (Contagious Diseases), தொற்று வியாதிகள் (Infectious Diseases) என்பவைகளும் கிருமிகளின் காரணமாக உண்டாவன வாதலின், இவைகளையும் 'மைக்ராபிக்' வியாதிகள் தலைப்பின் கீழ்க் கூறலாம். (3) தோலின் மூலமாய்ப் பரவும் வியாதிகள் (Parasitic Diseases)—சிரங்கு (Scabies or itch). அக்கி (Thrush), யானைக்கால் (Elephantiasis) முதலியன.

மேற்கூறிய பிணிப்பிரிவில் முதலாவதான உறுப்புக்கள் நிலைமாறினதன் காரணமாக உண்டாகும் வியாதிகள் (Physiological Diseases) முக்கியமாய் துற் பழக்கத்தாலும், போஜன பேதத்தாலும், பருவ காலங்கள் மாறுகையாலும் உண்டாகின்றன. இத்தலைப்பின் கீழ்க் குறிக்கப்படும் வியாதிகள் சில உள்ளன. அவையாவன :—

1. ஜன்ம வியாதிகள் (Constitutional Diseases); சூலை நோய் (Gout); நீரிழிவு (Diabetes); 2. விக்கமும் இளைச்சலும் (Malformation and weaknesses); 3. அஜீரணம் (Dyspepsia); 4 கணைச்சூடு (Rickets); 5. மதுசார பானத்தால் உண்டாகும் வியாதிகள் (Alcoholism); 5. கத்திக் காயம், பனி வெடிப்பு முதலியன (Local inflammations). இவ்வியாதிகளின் காரணங்களைச் சிந்திக்குங்கால், ஒழுக்கத்தைச் சீர்திருத்துவதே அவைகளைத் தடுக்கும் முக்கிய முயற்சியாகும், என விளங்கும். அன்றியும்,

> "தீய மனத்தாலுந் திறம்பு செயலாலும்
> நோய் பிறக்கு மென்றே நுவல்."

எனறபடி, நெறியில்லா ஒழுக்கத்தினால் நோய் எப்படி வருமோ அப்படியே தீய எண்ணங்களாலும் மனிதனுக்கு இவ்வித நோய்கள் உண்டாகின்றன. ஆகையால் மனதையும், சுத்தமாயும் இன்பமாயும் வைத்திருக்கப் பழகுதல் வேண்டும்.

எதையும் சுத்தமாய் வைத்திருத்தலும், மித உணவு அருந்துதலும், மிதமாய் உறங்குதலும், கிரமமாயும் ஒழுங்காயும் காலந்தவறாமல் தன் காரியங்களை நடத்துவதும், சுத்தமான பண்டங்களையே புசித்தலும் தேக ஆரோக்கியத்திற்கு நல்லொழுக்கங்களாகும். அப்படி ஒழுகாவிடில் நமது உடம்பில் உண்டாக்கப் படுகிற சில சிதைந்த விஷமெனத்தக்க பதார்த்தங்கள் புக்கம் (Kidneys), தோல் (Skin), குடல் (Bowels), நுரையீரல்கள் (Lungs), முதலியவைகளினால் கழிக்கப்படாமல் சரீரத்தில் தங்கி நோயுண்டாக்குகின்றன.

அஜீரணம் (Dyspepsia) என்று கூறின நோயை எப்படி மனிதர் அடைகின்றனரென்றால் ஆகாரத்தை நன்றாய் மென்று உமிழ் நீருடன் கலந்து உண்ணுதலும், நாவிற்கு அடிமைப்பட்டு அளவிற்கு மிஞ்சிக்கண்ட பதார்த்தங்களைச் சாப்பிட்டுந்தான். ஆகையால் அஜீரணம் வேண்டாமென்போர் மேற்கூறியவிதம் செய்யாது பசியெடுத்த நேரத்தில் ஜீரணிக்கத்தக்க உணவை நன்றாக மென்று பசி தணிய உண்ணல்வேண்டும். மணம், சுவையின்றி வரும் ஒரு வெற்றேப்பமே பசி எடுப்பதற்கான அறிகுறி; உணவு அருந்துங்கால், வரும் மணம் பொருந்திய ஏப்பம் உணவு போதும் எனக் குறிக்கும். சாதம், கறி, கூட்டு மட்டும் ஒருவனுக்கு உணவாகாது. காற்று, தண்ணீர், வெய்யில் முதலியவையே முக்கிய ஜீவாதாரமாகும். ஆதலால் உணவை அருந்தி, நீர் பருகிய பின்னரும் வயிற்றில் சிறிது இடம் காலியாயிருத்தல் வேண்டும். ஏனெனில், உண்ட உணவை ஜீரணிக்கச் செய்ய ஜீரண நீர் (Gastric Juice) சுரத்தல் வேண்டும்.

மது சாரம் குடித்தலில் உண்டாகும் வியாதிகள் (Alcoholism) பல உள்ளன. இவ்வித



ழக்கம் மேற்கூறிய அஜீரணத்தையுண்டு பண்ணுவதுடன் ஈரல் (Lever), இரத்தாசயம் Heart) இவைகள் சம்பந்தப்பட்ட வியாதிகளையும் உண்டு பண்ணும். மது சாரம் சரீரத்தில் சேரச்சேர உதிரத்தைக் கெடுத்து நரம்புகளைத் தளர்வடையச் செய்வதால் அதை விஷமென மதித்தல் வேண்டும். உண்மையில் மது சார பானத்தினால் சரீரத்திற்குக் கெடுதியே ஒழிய நன்மையில்லை என்பது திண்ணமெனினும் அப்பானத்தின் பழக்கத்தில் உழலும் பெரும்பான்மையோரின் மடமைத்தனம் என்னவோ! தாங்கள் கெடுவதுமன்றி குடிவெறியினால் தங்கள் குழந்தைகளையும் அநியாயமாய் அப்பழக்கத்திற்கு சிலர் உள்ளாக்கிப் பாழ்படுத்துகின்றனர். என்ன அநியாயம்! அது நிற்க, பொதுவாகவே லாகிரி வஸ்துக்கள் தேகத்திற்குக் கேட்டை விளைவிக்கும்.

கட்டி, பரு (Tumors) இவைகள், உஷ்ணத்தினாலும், உதிரக் கேடு அல்லது குறைவினாலும் போஜனமின்மையாலும், புறப்படுவதுண்டு. அவைகளில் எல்லாம் ஒரே நிலைமையை யுடையவைகள் அல்ல இராஜப்பிளவையைப் போன்ற சில மாணத்தையே உண்டு பண்ணத்தக்கன ஆகையால் வெள்ளத்தை அணைக்கட்டி அது வருவதற்கு முன் தடுப்பது போல இப்படிப்பட்ட வியாதிகளை வர வொட்டாமல் தடுப்பதே உத்தமம்.

இதற்குப்பின் இரண்டாவது பிரிவாகக் கொண்ட 'கிருமிகளினால் உண்டாகும் வியாதி'களைச் சிறிது கவனிப்போம். (பின்வரும்)

## செங்குந்தர் கிளர்ச்சி

## கிளைச்சங்கங்களின் நிகழ்ச்சிகளும், புதியசங்க ஸ்தாபனங்களும், போலியர்க்கு மறுப்புக்களும்

### செங்கற்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி

#### காஞ்சிச் செங்குந்த வாலிபர் சங்க நிர்வாகக் கூட்டம்

பிரபவஹு பங்குனிமீ 6உ (18-3-28) ஞாயிற்றுக்கிழமை மாலை கூடிய நிருவாக சபைக் கூட்டத்தில் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் தலைமை வகித்தனர்.

செங்கல்பட்டு தாலூகா போர்டின் காஞ்சிபுரம் பிர்காவிற்குச் சமீபத்தில் நடைபெற்ற எலக்ஷனில் திரு. T. பரமசிவ முதலியாரவர்கள் வெற்றி பெற்றதைக் கேட்டு இக்கூட்டம் தனது சந்தோஷத்தை அவருக்குத் தெரிவிக்கின்றது. இத் தீர்மானத்தைத் திரு. T. பரமசிவ முதலியாரவர்களுக்குக் காரியதரிசி தெரிவிக்க வேண்டியதென்றும் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரால் கொண்டுவரப்பெற்று திரு. ஆ. செ. கந்தசாமி முதலியாரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

செங்குந்தர் இரவு பாடசாலைக்கு ட்ரெயிண்டு செகண்டுகிரேட் ஆசிரியருக்கு மாதம் 1-க்கு ரூபா ...-0-0 சம்பளமும் ட்ரெயிண்டு ஹையர்கிரேட் ஆசிரியராயிருந்தால் மாதம் 1-க்கு ரூபா 5-0-0 சம்பளமும் கொடுக்கவேண்டுமென்று திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரால் பிரேரேபிக்கப்பட்டு திரு. A. R. வரதராஜ முதலியாரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

#### அமாவாசை உபந்நியாசம்.

பிரபவஹு பங்குனிமீ 9உ (21-3-28) மாலை 6-மணிக்குப் பிள்ளையார் பாளயம் செங்குந்தர் இரவு பாடசாலையில் ஏராளமான வாலிபர்களும் மாணவர்களும் பெரியோர்களும் வந்திருந்தார்கள். இம்மா பெருங்கூட்டத்திற்குப் பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் உயர்திருவாளர் வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் பெருங் கரகோஷத்தினிடையே அவைத் தலைமை வகித்தது குறிப்பிடத்தக்கது.

தலைவரவர்கள் முன்னுரையில் "இச்சங்கமானது ஏற்பட்டு எழு மாதங்களாகின்றது. பிரதி அமாவாசையிலும் பொதுக்கூட்டங்களில் செங்குந்தர்கள் முன்னேறுவதற்கான மார்க்கங்களையும் பண்டைப் பெருமையினையும் பற்றிப் பேசுகின்றோம். சென்ற